[illegible]ந்துறை படிப்பகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28+4

சுடர் 32 | கதிர் 42 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 23 சனிக்கிழமை 07.01.2017

## காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கக்கூடாது

### அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜன. 7
அதிகாரங்கள் பரவலாக்கப்படக் கூடாது. மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது. இவ்வாறு அஸ்கிரிய, மல்வத்த பீடங்களைச் >> 25

## பன்னாட்டு நீதிபதிகளின்றி சாத்தியமில்லை விசாரணை

### மக்கள் கருத்தறியும் அறிக்கையும் இதனையே வெளிக்காட்டியுள்ளதெனக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜனவரி 7
பன்னாட்டு நீதிபதிகள் பங்கேற்காத போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை சாத்தியமில்லை. தமிழ் மக்கள் மட்டுமல்ல தென் பகுதிச் சிங்கள மக்களும் உள்ளக நீதிப் பொறிமுறையில் நம்பிக்கை கொள்ளவில்லை. பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்புப் பொறிமுறையையே அவர்களும் கோரியிருக்கின்றார்கள். நல்லிணக்க கலந்தாலோசனைச் >> 25



## ஒற்றையாட்சிக்குள் தீர்வில்லை என்பதில் கூட்டமைப்பு திட்டவட்டம்

### பங்காளிக் கட்சிகளுக்குச் சம்பந்தன் அழுத்தம் திருத்தமாக நேற்று எடுத்துரைப்பு

கொழும்பு, ஜனவரி 7
ஒற்றையாட்சிக்குள் தீர்வைப் பெற்றுக்கொள்ளமாட்டோம். தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவு செய்யாத எந்தவொரு தீர்வையும் நாம் தொட்டுக் கூடப் பார்க்கமாட்டோம்.
இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், பங்காளிக் கட்சிகளுக்கு நேற்று உறுதியளித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையேயான கலந்துரையாடல் நேற்று மாலை நடைபெற்றது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.
கூட்டத்தின் ஆரம்பத்தில் இரா.சம்பந்தன் சில நிமிடங்கள் மாத்திரம் உரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே கூட்டத்தைக் கூட்டியுள்ளதாகக் குறிப்பிட்டதுடன், >> 24



## கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு எச்சரிக்கை

### கிளிநொச்சியில் துண்டுப் பிரசுரங்கள்

யாழ்., ஜன. 7
தமிழர் தாயகத்தைத் துண்டாடுவதற்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கக் கூடாது. அதனையும் மீறி வாக்களித்தால் போர்ச் சூழல் உருவாகும். >> 24

## வடக்குப் பாடசாலைகளில் பொங்கல் கொண்டாட்டம்

### மாகாணக் கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
வடக்கிலுள்ள சகல பாடசாலைகளிலும் தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடவேண்டும் என்று சகல கல்விவலயங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டது.
ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 14ஆம் திகதி வரையான நாள்கள் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணத் தலைமைச் செயலர் அறிவித்தார்.
வலயக் கல்வி அலுவலகங்களினால் வலய மட்டத்தில் தைப்பொங்கல் விழாவை >> 24

## முச்சந்தி முரளி



உவையள் அசையாது எண்டு கினம். ஆனால் அடியில ஆட்டம் காணுதெல்லோ...

## வழிநடத்தல் குழுவிலிருந்து கூட்டமைப்பு வெளியேறக்கூடாது

### கூட்டமைப்புக்கூட்டத்தில் நேற்று வலியுறுத்து மௌனம் காத்தார் சுரேஸ்

யாழ்ப்பாணம், ஜன. 7
வழிநடத்தல் குழுவின் நடவடிக்கைகள் முற்றுப்பெறும் வரையில் அதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியேறக் கூடாது என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தினர். வழிநடத்தல் குழுவிலிருந்து >> 25



## 2020 வரை அசையாது நல்லாட்சி

### மகிந்தவுக்கு மைத்திரி பதில்

யாழ்ப்பாணம், ஜன. 7
அரசைக் கவிழ்க்கப் போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்த நிலையில், 2020ஆம் ஆண்டு வரை யாராலும் அரசை அசைக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதிலடி கொடுத்துள்ளார்.
'தற்போதைய அரசைக் கவிழ்க்கப் >> 25

## அடுத்த வாரத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ்

### நிரந்தரமாகக் கிடைக்கும் என ஜனாதிபதி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 7
எமது நாட்டின் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதித் துறைகளின் முக்கிய திருப்புமுனையாக அமையக் கூடிய ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையானது >> 24



## ஹுசைனுக்கு இலங்கை பதிலடி

### பன்னாட்டு நீதிபதிகளை ஏற்பதில்லை என மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
போர்க்குற்ற விசாரணைக்குக் கலப்புப் பொறிமுறை அமைக்கப்பட வேண்டும், பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்ற பரிந்துரையை வரவேற்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் தெரிவித்த பின்னரும், பன்னாட்டு நீதிபதிகளை அனுமதிக்கப் போவதில்லை என்று >> 24

## வெங்காயம், உ.கிழங்குக்கு இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும்

### யாழ்ப்பாண மாவட்டச் செயலரிடம் விவசாயத் திணைக்களம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 7
வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு அறுவடைக் காலங்களில் இவற்றின் மீதான இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மாவட்டச் செயலரைக் கோரியுள்ளது. விவசாயத் திணைக்களத்தினால், யாழ். மாவட்டச் செய லருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
177.742 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு 888 விவசாயிகளுக்கு >> 24



## 51 இந்திய மீனவர் நேற்று விடுவிப்பு

### பேச்சின்போது காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில்

யாழ்ப்பாணம், ஜன. 7
இலங்கை - இந்திய மீனவர் விவகாரம் தொடர்பில் அமைச்சுமட்டப் பேச்சின்போது ஆலோசிக்கப்பட்டதற்கு அமைவாக, இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 61 இந்திய >> 25

## மீண்டும் போட்டியிடுவதாயின் மகிந்தவை மைத்திரி பிரதமராக்க வேண்டும்

### கோருகிறார் விமல் வீரவன்ச



யாழ்ப்பாணம், ஜன. 7
மைத்திரி மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் திட்டமிருந்தால் அவர் மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக்கவேண்டும். அப்போதுதான் >> 25

## துயிலுமில்லத்துக்குத் தடை போடும் பொலிஸாரின் விண்ணப்பம் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
கிளிநொச்சி கனகபுரம் துயிலும் இல்லத்துக்குள் எவருமே செல்ல முடியாதவாறு தடை விதிக்கு[illegible] பொலிஸாரின் விண்ணப்பம் கிளிநொச்சி நீதிமன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டது.
கிளிநொச்சி கனகபுரம் துயிலுமில்லத்தில் [illegible] அமைக்கும் பணியில் ஈடுபட்ட குழுவைச் சேர்ந்த 6 பேர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர்.
அதன்போது மன்றில் [illegible] பொலிஸார், குறித்த மாவீரர் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2,151 மாணவர் பட்டம் பெறுவர்

## யாழ். பல்கலைக்கழக 32 ஆவது பட்டமளிப்பு விழா அடுத்த வாரம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 32 ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் 9 அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்த முறை 2 ஆயிரத்து 151 மாணவர்கள் பட்டம் பெறவுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள முதலாம் நாளில் முற்பகல் 9 மணி, மு.ப.10.30 மணி, முற்பகல் 11.30 மணி, மதியம் 2 மணி, பிற்பகல் 3.30 மணி ஆகிய நேரங்களில் 5 அமர்வுகள் இடம்பெறும். எதிர்வரும் புதன்கிழமை இரண்டாம் நாள் முற்பகல் 9 மணி, முற்பகல் 10.30 மணி, மதியம் 1.30 மணி மற்றும் பிற்பகல் 3 மணி ஆகிய நேரங்களில் 4 அமர்வுகள் இடம்பெறும்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 164 பேர் பட்டப்பின் படிப்புத் தகைமைச் சான்றிதழைப் பெறவுள்ளனர். பட்டமளிப்பில் ஆயிரத்து 471 உள்வாரி மாணவர்களும், 484 வெளிவாரி மாணவர்களும் பட்டம் பெறவுள்ளனர். 32 மாணவர்களுக்கு டிப்ளோமாப் பட்டங்களும் வழங்கப்பட உள்ளன.

கலாநிதி 3, முதுமெய்யியல்மாணி 15, முது கல்விமாணி 102, தமிழ் முதுமாணி 40, குடித்தொகை அபிவிருத்தி கற்கைநெறியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் 1, சுகாதார முகாமைத்துவத்தில் முது விஞ்ஞானமாணி 2, நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழ்1, வைத்தியமாணி சத்திர சிகிச்சைமாணி 104, சித்தவைத்திய சத்திர சிகிச்சை மாணி 32, சட்டமாணி 50, விவசாய விஞ்ஞானமாணி 49, தொழில் நிர்வாக மாணி (4 வருடம்) 248, தொழில் நிர்வாக மாணி (3 வருடம்) 11, வர்த்தக மாணி (3 வருடம்)3, விஞ்ஞான மாணி (பொது) 79, விஞ்ஞான மாணி (சிறப்பு) 89, கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி 12, பிரயோக விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி 15, கணனி விஞ்ஞான மாணி 1, கலைமாணி பொது 116, கலைமாணி சிறப்பு 268, நுண்கலைமாணி (கர்நாடகசங்கீதம்) 79, நுண்கலைமாணி (வயலின்) 2, நுண்கலைமாணி (வீணை) 1, நுண்கலைமாணி (நடனம் - பரதநாட்டியம்) 58, நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) 26, தாதியியல் விஞ்ஞானமாணி 10, மருந்தகவியல் மாணி 6, மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி 16, வியாபார முகாமைத்துவ மாணி (பொது) 27, வியாபார முகாமைத்துவ மாணி (சிறப்பு) 88, விஞ்ஞான மாணி பிரயோக கணிதமும் கணிப்பிடலும் (பொது) 14, விஞ்ஞானமாணி சிறப்பு கணினிவிஞ்ஞானம் 5, விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (பொது) 18, விஞ்ஞானமாணி சூழல் விஞ்ஞானம் (சிறப்பு) 6, தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப இளமாணி (பொது) 24, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞான மாணி சிறப்பு 14, வெளிவாரி கலைமாணி 336, வணிகமாணி 101, வியாபார முகாமைத்துவமாணி (இணையவழி) 43, நடனமாணி 4, ஆங்கிலத்தில் தகைமைச் சான்றிதழ் (விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம்) 13, உடற்கல்வியில் தகைமைச் சான்றிதழ் 5, இதழியலில் தகைமைச் சான்றிதழ் 14, கலாநிதி 1, முதுமெய்யியல்மாணி 2, வியாபார முகாமைத்துவமாணி கலாநிதி 1, முதுமெய்யியல் மாணி 2, கலைமாணி (சிறப்பு) 100, நுண்கலைமாணி (கர்நாடக சங்கீதம் வாய்ப்பாட்டு 76, நுண் கலைமாணி (கர்நாடக சங்கீதம் வயலின்) 2, நுண் கலைமாணி (கர்நாடக சங்கீதம் வீணை) 1, உடற் கல்வியில் தகைமைச் சான்றிதழ் 5, முதுமெய்யியல்மாணி 2, தொழில் நிர்வாக மாணி (4 வருடம்) 90, வர்த்தக மாணி (3 வருடம்) 3, ஆங்கிலத்தில் தகைமைச் சான்றி தழ் 13, முதுமெய்யியல்மாணி 2, தொழில் நிர்வாக மாணி (4 வருடம்) 58, கலைமாணி (சிறப்பு) 93, முது மெய்யியல்மாணி 2, தமிழில் முதுமாணி 40, தொழில் நிர்வாக மாணி (4 வருடம்) 100, வணிகமாணி (வெளிவாரி) 101, முதுமெய்யியல் மாணி 2, முது கல்விமாணி 102, கலைமாணி (சிறப்பு) 75, வியாபார முகாமைத்துவ மாணி (இணைய வழி) (வெளிவாரி) 43, நடனமாணி (வெளிவாரி) 4, முதுமெய்யியல்மாணி 2, விஞ்ஞான மாணி (பொது) 79, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (பொது) 24, கணினி விஞ்ஞான மாணி 1, கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி 12, முதுமெய்யியல்மாணி 1, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப விஞ்ஞான மாணி (சிறப்பு) 14, கலைமாணி (வெளிவாரி) 336.

இவை பற்றிய மேலதிக விடயங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்தில் பார்வையிடலாம் என்று துணைவேந்தர் தெரிவித்தார். (த-4 ஈ)

# நிலைமாறு கால நீதியை முன்னெடுக்கத் தவறியது அரசு

## பாக்கியசோதி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன. 7

நிலைமாறு கால நீதிப் பொறிமுறையைத் தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்லும் பணியை அரசு தற்போது மேற்கொள்ளவில்லை என்று, நல்லிணக்கப் பொறிமுறைகள் தொடர்பான கலந்தாலோசனைச் செயலணியின் செயலர் பாக்கியசோதி சரவணமுத்து சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்தாவது:

நிலைமாறு கால நீதியை முன்னெடுத்துச் செல்லும் தலைமைப் பாத்திரத்தை அரசு பொறுப்பெடுத்துச் செல்ல வேண்டியது அவசியமாகும். இதனை நாம் காத்திரமான முறையில் கூறுகின்றோம். இதுவரை அரசு அதனைச் செய்யவில்லை. அரசு இதனைச் செய்ய வேண்டும். பொறிமுறைகளை அமைப்பதற்கு முன்பாக மட்டுமன்றி அதன் பின்னரும் மக்களுடன் கலந்தாலோசனை செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த ஒவ்வொரு பொறிமுறையும் வெளித் தொடர்பைக்கொண்டிருப்பதற்கான தொடர்பாடல் பிரிவொன்றைக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும். அப்போது தான் மாறுபட்ட பொறிமுறைகள் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பாக மக்களுடன் தொடர்ச்சியான பரிமாற்றம் இருக்கும். எமது பரிந்துரைகளைப் பொறுத்தமட்டில் தொடர்பாடல் என்ற விடயத்தை நாம் வலுவாக வலியுறுத்தியுள்ளோம். ஏனெனில் அது மிகமிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது என்பதை நாம் கண்டறிந்தோம். அத்தோடு நிலைமாறு கால நீதிக்கு அரசியல் சாசன உரிமையைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் கருத்துக்களை முன்வைத்துள்ளோம் - என்றார். (த-5)

# முழங்கால் மூட்டு மாற்று சத்திர சிகிச்சை மன்னாரில் வெற்றிகரம்

## குறைந்த வளங்களைப் பயன்படுத்தி முதற் தடவையாகச் சாதனை

மன்னார், ஜன. 7

மன்னார் மாவட்டப் பொது வைத்திய சாலையில் முதல் தடவையாக முழங்கால் மூட்டு மாற்றுச் சத்திர சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ள தாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி எஸ்.ஆர்.யூட் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வைத்தியசாலையின் என்பு நோய் சிறப்புச் சத்திர சிகிச்சை நிபுணர் கொண்ட குழுவினரால் முழங்கால் மூட்டு மாற்றுச் சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. மன்னாரைச் சேர்ந்த 60 வயதுடைய பெண்ணுக்கு இந்தச் சத்திர சிகிச்சை கடந்த 27 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. குறித்த சத்திர சிகிச்சையை மேற்கொள்வதற்கு வளப்பற்றாக் குறை காணப்படுகின்ற போதும் இருக்கின்ற வளங்களை வைத்து சத்திர சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டது.

வைத்தியசாலையில் என்பு நோய் தொடர்பான சிறப்புக் கிளினிக் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் திங்கள் மற்றும் புதன் கிழமைகளில் காலையில் நடைபெறுகின்றது. குறித்த சேவையைப் பெற விரும்புவோர் மன்னார் வைத்திய சாலையின் குறித்த பிரிவுக்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும். வயது முதிர்ந்து மூட்டு நோயினால் நடக்க முடியாது அவதிப்படு கின்றவர்கள் குறித்த முழங்கால் மூட்டு மாற்றுச் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடியும்-என்றார். (த-4,56)

# சிகரெட் பற்ற வைக்க பயன்பட்ட 20 ரூபா

## கதிர்காமத்தில் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7

சிகரெட் பற்ற வைப்பதற்கு 20 ரூபா தாளில் நெருப்பு மூட்டிய சம்பவம் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகின்றது. இந்தச் சம்பவம் ஒன்றும் வெளிநாட்டில் இடம் பெறவில்லை. கதிர்காமத்தில் நடைபெற்றிருக்கின்றது.

இந்தச் சம்பவத்தைப் பத்திரிகை விற்பனை முகவர் ஒருவர் நேரில் கண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

கடந்த 3ஆம் திகதி விடுதியிலிருந்து வெளியே வந்த நபர் எனது கடையில் சிகரெட் வாங்கினார். தனது பொக்கெட்டிலிருந்து 20 ரூபா நாணயத் தாளை எடுத்தார். அருகிலிருந்த காஸ் சிலிண்டர் நெருப்பில் அதனைப் பற்ற வைத்தார். பின்னர் சிகெரெட்டை அந்த 20 ரூபா தாளைப் பிடித்துப் பற்ற வைத்தார். சிகரெட்டுக்கு நெருப்பு மூட்டி யதும் 20 ரூபா தாளின் நெருப்பை அணைத்து அதனை அப்படியே அங்கே நிலத்தில் போட்டு விட்டு, மொடேர்ன் காரில் ஏறிச் சென்று விட்டார்.

இதனை அங்கிருந்த பலரும் அவதானித்தனர். இந்த நபரின் செய்கை தொடர்பில் அவர்கள் விசனம் வெளியிட்டனர். யாசகர்கள் 5 ரூபாவுக்கும், 10 ரூபாவுக்கும் யாசகம் செய்து கொண்டிருக்கும் நிலையில், மேற்படி நபர் 20 ரூபா நாணயத் தாளை சிகரெட் 'லைட்டராகப்' பாவித்தது பலரையும் முகம் சுழிக்க வைத்துள்ளது. (த-5)

# ஏ.எல். பெறுபேறு அடுத்த வாரத்தில்

கொழும்பு, ஜன.7

ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜயந்த புஷ்பகுமார அறிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சைக்குச் சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

இதேவேளை, பல்கலைக்கழக அனுமதிக்கான வழிகாட்டல் கையேடும், ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளுடன் வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்தது.

இந்தக் கையேட்டைப் பயன்படுத்தி மாணவர்கள் தமக்கு விருப்பமான பாடவிதானங்களை தெரிவு செய்ய முடியும். பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உதவும் வகையில், 300 ஆசிரியர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர் என்று ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுக்கரைக் குளத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மன்னார், ஜன.7
மன்னார் முருங்கன் கட்டுக்கரைக் குளத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய வேலைகள் தொடர்பாக கட்டுக்கரைக் குள திட்ட முகாமைத்துவ குழுவினரால் நீர்ப்பாசன முகாமைத்துவ அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது-

கட்டுக்கரைக் குளத்தின் கீழ் 32 ஆயிரம் ஏக்கர் வரையான விஸ்தீரணத்தில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

விவசாயிகளாகிய எம் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படும் பொருட்டு கீழ் வரும் வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற் கான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கட்டுக்கரைக் குளத்தின் வான் 2 அடியாக உயர்த்தப்பட வேண்டும். கட்டுக்கரைக் குளத்துக்கு தண்ணீர் வரும் உள்ளீட்டு வாய்க்கால் 18 கிலோ மீற்றர் நீளத்துக்கு அகலமாக்கப்படுதல் வேண்டும். குளத்தின் பிரதான வாய்க்கால்கள் அனைத்திற்கும் இரு பக்கமும் தடுப்புச் சுவர்கள் கட்டப்படல் வேண்டும்.

குளத்தின் கீழ் வருகின்ற வாய்க்கால்கள், ஊட்டற் குளங்களுக்கான கட்டுமான வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.- என்றுள்ளது. (ற-56)

# மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளிய வாகனம்

*மூவர் காயமுற்று வைத்தியசாலையில்*

தென்மராட்சி, ஜன.7
வேகக் கட்டுப்பாட்டை இழந்த படி வாகனம் வீதியில் சென்ற மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளியதில் அதில் பயணித்த மூவர் காயம டைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தி- சாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரி விக்கப்பட்டது.

இதன்போது 5 வயதுப் பிள்ளை தூக்கிவீசப்பட்டபோதிலும் காயங்களின்றித் தப்பிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கைதடியில் இடம்பெற்றது.

பூநகரி பள்ளிக்குடாவிலிருந்து சாவகச் சேரிக்கு வந்து உறவினர் வீட்டில் புதுவருடக் கொண்டாட்டத்தில் பங்கேற்ற ஒரே குடும் பத்தைச் சேர்ந்த மரியநாயகம் செபஸ்ரியன் (வயது -32), அவரது மனைவியான செபஸ் ரியன் மேரி ஜெனீபா (வயது- 29), மகனான செபஸ்ரியன் சஞ்ஜீபன் ( வயது -9 ) ஆகி யோரே காயமடைந்தனர். (த-9)

# கடலில் தத்தளித்த அந்தமான் மீனவர் 6 பேர் மீட்பு

திருமலை, ஜன. 7
திருகோணமலை குச்ச வெளிக் கடற்பரப்பில் தத்தளித்த அந்தமான் தீவைச் சேர்ந்த மீனவர்கள் 6 பேர் நேற்றுமுன்தினம் இரவு இலங்கைக் கடற் படையினரால் மீட்கப்பட்டுள் ளர் எனத் தெரியவருகின் றது.

இவர்களது படகின் இயந் திரம் பழுதடைந்த நிலை யில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந் ததாகவும், இதனைக் கண்ட ஏனைய மீனவர்கள் கடற்படை யினரிடம் தெரியப்படுத்தி யதையடுத்து இந்த மீன வர்கள் மீட்கப்பட்டனர் எனவும் கூறப்பட்டது.

படகுடன் மீட்கப்பட்ட மீன வர்கள் புடவைக்கட்டு கடற்படை முகாமில் இருப் பதாகவும், படகைத் திருத்தி அவர்களை நாட்டுக்கு அனுப்பவுள்ளதாகவும் கடற்படை அதிகாரியொ ருவர் தெரிவித்தார். (த-ய-45)

# கஞ்சாவுடன் கைதான இருவருக்கும் மறியல்

திருமலை, ஜன.7
திருகோணமலை - நிலா வெளி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் கேரளக் கஞ் சாவுடன் கைதுசெய்யப்பட்ட இரு சந்தேகநபர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோண மலை நீதிமன்ற மேலதிக நீதிவான் சமிலா குமாரி ரத்னாயக்க நேற்று உத்தர விட்டார்.

உப்புவெளி, கும்புறுபிட்டி பகுதியைச் சேர்ந்த இரு வரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள் ளனர்.

சந்தேகநபர்கள் இருவரும் முச்சக்கர வண்டியில் 1 கிலோ கேரளக் கஞ்சாவைக் கடத்திச் சென்றபோது, கிடைத்த தகவல் ஒன்றுக் கமைய திருகோணமலை போதைக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய் யப்பட்டனர். (த-ய-45)

# தாஜுதீனுடன் காரில் பயணித்த நபர் யார்?

றக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுதீன், படுகொலை செய்யப்பட்ட தினம் அவரு டைய வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்து பயணித்ததாகக் கூறப்படும் நபர் தொடர்பில் தெரிய வந்துள்ளதாகக் கொழும்பு நீதிமன்றில் நேற்றுத் தெரி விக்கப்பட்டது.

பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் டிலான் பெரேரா இதனை நீதிமன்றில் தெரிவித்தார்.

இது தொடர்பிலான வாக்கு மூலத்தை, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரே ராவிடமிருந்து பெற்று, நீதி மன்றத்தில் முன்வைப்ப தற்கு எதிர்பார்த்துள்ளதாக வும் பிரதிசொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

கொலை இடம்பெற்றபோது பதிவாகிய சி.சி.ரி.வி. காணொ லியை வைத்தே இதனை அடையாளம் கண்டுகொள்ள முடிந்துள்ளது என்றும் குற் றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுத் தெரிவித்தனர்.

கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் கைதான முன் னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகிய இருவருக் கும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக் கப்பட்டது. (த-4)



**அதிமேதகு மைத்திரிபால சிறிசேன**
இலங்கை சனநாயகசோசலிசக்குடியரசின் சனாதிபதியும்
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சரும்



**கௌரவ ரணில் விக்கிரமசிங்க**
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
பிரதம மந்திரி



**திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையார்**
முன்னாள் சனாதிபதியும்
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க
அலுவலகத்தின் தலைவரும்



**கௌரவ ஏ.எச்.எம்.பௌசி**
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்
நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்



**திரு.வே.சிவஞானசோதி**
செயலாளர்
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்
நல்லிணக்க அமைச்சு

## தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரம் 2017 சனவரி 8 -14 வரை

### நல்லிணக்கத்தை நோக்கிய எமது பயணம்...

- மக்கள் பல சமயங்கள், பல இனங்கள், பல கலாசாரங்கள் மற்றும் பல பிரதேசங்கள் என்ப வற்றின் பல்வகைமைகளை நன்குணர்ந்து, அவற்றுக்கு மதிப்பளித்து, நாம் "இலங்கையர்" எனும் தனித்துவத்தை பேணிப்பாதுகாத்து, அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கின்ற பிரதான எண்ணக்கருவினூடாகஒருமைப்பாடு, நல்லிணக்கம், வலிமைமிக்க, வளமான தேச மொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அடித்தளமிடுவோம். – "வேற்றுமையில் ஒற்றுமை"
- தேசத்தின் நிலைபேறான அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் ஐக்கியம், ஒருமைப்பாடு, நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றைக் கட்டியெழுப்ப வேண்டியது மிகப் பிரதானமாகும்.

### பிரதான குறிப்புகள்

- நாம் வளம்கொழிக்கும் இலங்கைத் திருநாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கியம், சமாதானம், நல்லிணக்கம், ஒற்றுமை என்பவற்றை விருத்தி செய்வதில் முகவர்களாவும், தூதுவர்களாவும் பங்காற்றுவோம்.
- அனைத்து இலங்கையர்களுக்கும் உளப்பூர்வமாகவும், மனப்பூர்வமாகவும், செயற்பாடு களினாலும் ஆக்கபூர்வமான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அழைப்பு விடுப்போம்.
- இது வரை நாம் பெற்ற அடைவுகளை நினைவுகூர்ந்து, நிலைபேறான நல்லிணக்கத்தை தோற்றுவிப்பதற்கான காலம் மலர்ந்துள்ளது.

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு
இல. 34, நாராஹேன்பிட்டி வீதி, நாவலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# காவலூருக்கு வருகிறது நெடுந்தாரகை

யாழ்ப்பாணம், ஜன.7

ஊர்காவற்றுறை - நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் ஈடுபடவுள்ள நெடுந்தாரகை படகு நேற்றைய தினம் கொழும்பு டொக்கியாட் நிறுவனத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பயணத்தை ஆரம்பித்தது. ஊர்காவற்றுறைத் துறைமுகத்துக்கு நாளை இரவு வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பயண நிகழ்வை டொக்கியாட் நிறுவனப் பணிப்பாளர் டொக்காரா, வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் சந்திரகுமாரன், உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் மனோகரன் ஆகியோருடன் கடல்சார் இயந்திரப் பொறியியலாளர் குமாரநாயகம் ஆகியோர் மு.ப. 11 மணிக்கு ஆரம்பித்து வைத்தனர்

நெடுந்தாரகை படகு நாளை இரவு ஊர்காவற்றுறையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டது. உலக வங்கியின் நெல்சிப் திட்டத்தின் 150 மில்லியன் ரூபா செலவில் வடிவமைக்கப்பட்ட குறித்த படகில் 80 பயணிகள் பயணிக்க முடியும்.

இந்த படகைக் செலுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐவருக்கு டொக்கியாட் நிறுவனத்தால் பயிற்சியளிக்கப்பட்டு தற்போது செயன் முறைப் பயிற்சிக்காக வட தாரகைப் படகில் 10 நாள்கள் இணைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101)

# வன்னியில் இரு இடங்களில் மாதிரிப் பொருத்து வீடுகள்

## மீள்குடியேற்ற அமைச்சு அமைக்கிறது

கொழும்பு, ஜன. 7

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பொருத்து வீட்டுத் திட்டத்தின் மாதிரி வீடுகளை உடனடியாக அமைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சால் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ள 16 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளில் இரண்டு வீடுகளை மக்களின் பார்வைக்காகக் கட்டுவதற்காக மீள்குடியேற்ற அமைச்சு ஏற்பாடு செய்து அதற்கான இடங்களையும் தேர்வு செய்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மாதிரி வீடு ஒன்றையும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் ஆனந்தபுரம் கிராமத்தில் மற்றொரு மாதிரி வீட்டையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பப் பணிகள் முன்னெடுக்கப்பட்டவுள்ளன. இவ்வாறு இரு வீடுகளும் அமைக்கத் திட்டமிட்ட இரு பிரதேசங்களின் இடங்களையும் மீள் குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் கடந்தவாரம் நேரில் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

பொருத்து வீட்டுத் திட்டத்தின் மாதிரி வீடுகள் இரண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டின் உரும்பிராய் மற்றும் தெல்லிப்பழைப் பிரதேசங்களில் கடந்த ஆண்டில் நிறுவப்பட்டதோடு, இது தொடர்பான பலத்த சர்ச்சை நிலவி வருகின்றது. (வ -101)

# பொதுக் கிணற்றை காணவில்லையாம்



பொது மக்களின் பாவனைக்காக வவு னியா நகர்ப்பகுதியில்அமைக்கப்பட்டக் கிணற்றைக் காணவில்லை என வவுனியா நகர சபையில் முறையிடப்பட்டது.

வவுனியா நகரிலுள்ள முன்னாள் இராணுவத் தளபதி கொப்பேகடுவவின் சிலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த குழாய்க்கிணறு ஒன்றை சில வருடங்களாகக் காணவில்லை என்று வவுனியா நகர சபைச் செயலாளரான ஆர்.தயாபரனிடம் சமூக நலன்விரும்பி ஒருவர் முறைப் பாடு செய்துள்ளார்.

நலன் விரும்பி ஒருவரால் இவ்வாறு முறையிடப்பட்டுள்ளது. கிணறு அமைக்கப்பட்டிருந்தாக கூறப்படும் இடத்துக்கு அருகிலிருக்கும் வியாபார நிலையங்களில் உள்ள யாரேனும் ஒருவர் இதனை இரகசிய முறையில் பாவிக்கின்றார்களா? என்ற சந்தேகம் உள்ளது. எனினும் இது சட்டவிரோத குற்றம். நாம் இதற்குரிய சட்ட நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள உள்ளோம் என்று நகரசபைச் செயலர் தெரிவித்தார்.

பொதுமக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்காக அரசால் அமைக்கப்பட்ட குழாய்க்கிணற்றை மறைத்து தமது சொந்த பாவனைக்குப் பயன்படுத்துபவர்கள் மீது உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு தகுந்த தண்டனை பெற்றுக்கொடுப்பதுடன், இழப்பீட்டையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று முறைப்பாடு செய்தவர் தெரிவித்தார். (வ-21)

# செய்த தவறுகளை வேறு ஒருவர் மீது சுமத்த கொழும்பு அமைச்சர் முயற்சி

## வடக்கு சுகாதார அமைச்சர் சாடல்

வவுனியா, ஜன.7

மகிந்த ஆட்சியில் மீள் குடியேற்றத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் தற்போதைய ஆட்சியில் தாங்கள் செய்த தவறை வேறு ஒருவர் மீது சுமத்துகிறார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தின் முதன்மை மண்டபம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தலைமையில் திரை நீக்கம், செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் கொழும்பு அரசின் அமைச்சர், ஒரு இனத்தை அடையாளப்படுத்தி வடக்கு மாகாண சபை அவர்கள் தொடர்பான மீள்குடியேற்றத்திலே சிறப்பாகச் செயற்படவில்லை என்ற ஒரு கருத்தை முன்வைத்தார். கொழும்பு அரசுதான் அந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்குப் பொறுப்பாக இருந்தது. இதே அமைச்சர்தான் மீள் குடியேற்றத்துக்குப் பொறுப்பாக இருந்தார். அவர்கள் தாங்கள் செய்த அந்தத் தவறுகளை நியாயப்படுத்துவதற்காக இன்னும் ஒருவர் மீது அந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொல்வதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது.

போர் நிறைவடைந்து இன்று ஏழு ஆண்டுகள் கடந்துள்ளன. இந்த ஏழு வருடங்களிலே எங்களுடைய பிரதேசங்களிலே மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இங்கு நடைபெற்ற மீள் குடியேற்றம் உண்மையான நல்ல சிந்தனையுடன் மேற்கொள்ளப்பட்டனவா? என்ற கேள்வி எங்கள் எல்லோரிடமும் இருக்கின்றது. இடம்பெயர்ந்த மக்கள் எப்படி மீள்குடியேற்றப்பட்டார்கள்.

இந்த சமுதாயம்தான் இழந்தவற்றை மீண்டும் நிலை நிறுத்தி பழைய நிலைக்குச் செல்லவேண்டிய ஒரு சமுதாயமாக அங்கு மீள்குடியேற்றப்பட்டதா? இதய சுத்தியுடன் இந்த மீள்குடியேற்றம் நல்ல சிந்தனையோடு எங்களுடைய மாகாணத்தில் நடைபெற்றதா? என்று பார்த்தால், இல்லை. இந்த நாட்டிலிருந்த ஆட்சியாளர்கள் கடந்த காலத்திலே எள்ளளவேனும் நல்ல சிந்தனையில்லாது எங்களுடைய சமுதாயத்தை திட்டமிட்டு அழிக்கின்ற வகையிலே இந்த மீள்குடியேற்றத்தைச் செய்திருந்தார்கள். அதையாராலும் மறுக்கமுடியாது.

இப்போது கூட சில நல்ல சிந்தனையாளர்கள் அல்லது நல்ல எண்ணத்துடன் இந்த மீள்குடியேற்றச் செயற்பாடுகளைச் செய்யக் கூடிய ஒரு சிலரையேனும் கொண்ட ஒரு புதிய அரசு வந்த பின்னர், அந்த ஒருசில நல்ல சிந்தனையாளர்களுடைய செயற்பாட்டைக் கூடத் தடுத்து நிறுத்தக் கூடிய வகையிலே பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன - என்றார்.

இந்த நிகழ்வில் வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளர் எம். இராதாகிருஷ்ணன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம். பி. நடராஜ், பாடசாலை அதிபர் திருமதி. கி. நந்தபாலன், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-21)

# அம்பாந்தோட்டையின் சில பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தத் தடை உத்தரவு

அம்பாந்தோட்டையின் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் இன்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட முடியாது என்று அம்பாந்தோட்டை நீதிவான் மன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது.

முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தலைமையில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட இருந்த நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இன்று முதல் எதிர்வரும் 14 நாட்களுக்கு இந்தத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இதேவேளை மேலும் 26 பேருக்கு இது தொடர்பில் தனிப்பட்ட முறையில் அறிவிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. அம்பாந்தோட்டை பொலிஸ்நிலையத்தினால் நீதிமன்றத்தில் முன்வைத்த விண்ணப்பத்துக்கு அமையவே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (வ-5)

# யாழ்ப்பாணத்தின் தனித்துவத்தை மாற்றாது அபிவிருத்தியை மேற்கொள்வது அவசியம்

## மாவட்டச் செயலர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைவிடத்தை கருத்திற் கொண்டு, அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். 'விவசாய கைத்தொழில், சுற்றுப்புறச் சூழல், கலாசார அம்சங்களுக்கு சேதங்கள், மாற்றங்கள் ஏற்படாத வகையில் யாழ்ப்பாணத்தின் தனிதுவத்தைப் பாதுகாக்கும் வகையில் பொருத்தமானபொருளாதார வளர்ச்சியை மேற்கொள்ள வேண் டும்.

இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நகரமாக்கல் திட்டத்தினூடாக நீர் வழங்கல் வடிகால் அமைப்பு, விவசாய அபிவிருத்தி, கரையோரப்பகுதி அபிவிருத்தி, நகராட்சிப் பகுதி அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் முன்னைய காலத்தில் இருந்த நகர மண்டபத்தை மீண்டும் அமைத்தல், முதன்மைச்சாலைகள் சீரமைப்பு மற்றும் விரிவாக்க்ம் செய்தல் என்பன மேற்கொள்ளப்படவுள் ளன. யாழ். மாவட்டத்தில் உள்ள கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளன.

இந்த முயற்சி, சங்கிலியன், டச்சு, பிரித்தானியர் கால கட்டடங்களின் தனித்துவத் தன்மை மங்காமல் பேணிப் பாதுகாக்க உதவியாக இருக்கும். இதன் மூலம் யாழ்ப்பாணத்தின் தனித்துவச் சின்னங்கள் சுற்றுலாப்பயணிகளுக்குப் பயன்ளிக்கக் கூடிய வகையில் அமையும். அதற்கமைய நீண்ட காலமாக யாழ். நகரில் எந்தவித மாற்றங்களும் ஏற்படவில்லை.

தவறான திட்டமிடுதல் நகரின் தனித்துவத்தைப்பாதிப்பதுடன், பிரதேச ரீதியிலான அழிவைத் தோற்றுவிக்கும். அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் திட்டங்களைப் பெற்று எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கான ஆலோசனைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட சில நிறுவனங்களில் இருந்து உதவிகள் பெறப்படவுள்ளன - என்றார். (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016இல் ஒதுக்கிய நிதிக்கு இவ்வாண்டில் வேலைகள்

## முல்லைத்தீவு மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு உட்கட்டுமான வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 519 மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் 2017ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு முன்னெடுத்த வேலைத் திட்டங்கள் தொடர்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் விளக்கம் அளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கடந்த ஆண்டு 5ஆயிரத்து 774 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு அதற்கான வேலைத்திட்டங்கள் மாவட்டச் செயலகத்தினாலும், ஏனைய திணைக்களங்களினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக்களின் உட்கட்டுமானம், வாழ்வாதாரம், வீடமைப்பு தொடர்பான பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக 6ஆயிரத்து 190 வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 5 ஆயிரத்து 255 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. 519 மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் 2017ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்படும்–என்றார். (கு-7)

# மகிந்தவை கனவானாக காட்ட முயலும் மைத்திரி

## கிழக்கு மாகாண அமைச்சர் விசனம்

செங்கலடி, ஜன.07

தேர்தல் இறுதி முடிவுகள் வெளிவராதவாறு சதித் திட்டம் தீட்டிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சிறையில் அடைக்காமல், அவர் ஜனநாயகவாதியாக மாறுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தர்ப்பம் வழங்கியுள்ளார் எனக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளருமான கே.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மேட்டுநிலப் பயிர்ச்செய்கைக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

நாட்டிற்கெதிராகச் சதி செய்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் இருந்தும் மகிந்தவைச் சிறை வைக்காமல் விட்டுள்ளார்கள். ஆயினும் அவர் ஆட்சியைக் கவிழ்க்கப் போவதாகக் கூறுகிறார். இது ஒரு ஆரோக்கியமான பேச்சல்ல. எனினும் இந்த விடயத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் கவனமாக இருக்கவேண்டும் - என்றார். (த-ய-47)

**Toyota Hiace விற்பனைக்கு உண்டு**

எமது நிறுவனத்தின் தனிப்பாவனையில் உள்ள WP JI XXXX இலக்க Toyota Hiace வாகனம் விற்பனைக்கு உண்டு.

(J 7416) (22,18)

**021 225 5625/ 077 946 2841/077 935 2372**

**British English, பிரெஞ்சு மொழி வகுப்புகள்**

**மேற்படி மொழிகள் இலண்டனிலிருந்து வருகை தந்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது.**
**(பிரெஞ்மொழியில் 17 வருடம் அனுபவமுள்ளவர்)**

- ★ 8 பேர் கொண்ட குழுவகுப்பு (அடிப்படை, நடுத்தரம், உயர்தரம் எனப் பிரித்து கற்பிக்கப்படும்)
- ★ Spoken English இற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.
- ★ அலுவலக உத்தியோகத்தர்கள், வெளிநாடு செல்வோர், பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோருக்கு கற்பிக்கப்படும்.
- ★ விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை
- ★ 7 நாள்களும் வகுப்பு நடைபெறும்.
- ★ ஒரு மணித்தியாலத்துக்கு குறைந்த செலவில் கட்டணம் அறவிடப்படும்

தொடர்பு: **077 883 6602** A. கிஷான்

(ஜே.7443) (13,18)

**மூடிய கூறுவிலைகோரலும் பகிரங்க ஏலவிற்பனையும்**

**பூநகரி ப.நோ.கூ.சங்கம், பூநகரி சங்கத்தினால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் பொருள்கள் கூறுவிலை மூலமும், பகிரங்க ஏலத்திலும் விற்பனை செய்யப்படவுள்ளன.**

மூடிய கூறுவிலை செய்யப்படும் பொருள்களுக்கான விவரம்

- ❖ KDE 12 STA ஜெனறேற்றர் Kipor டீசல் — 01 தனி
- ❖ கொண்டா ஜெனறேற்றர் EBK 200 — 01 தனி
- ❖ மோட்டார் சைக்கிள் ஸ்ரீம் நீலம் 49cc — 01 தனி
- ❖ மோட்டார் சைக்கிள் ஸ்ரீம் சிவப்பு ST 49cc — 01 தனி

16.01.2017ஆம் திகதிக்கு முன்னதாக கூறுவிலைக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டுத் தலைவர், பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வாடியடி, பூநகரி என முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும் பொருள்களின் விவரம்

- ❖ பாவித்த 1000x20, 900x20 லொறி ரயர் — 09
- ❖ பாவித்த உழவு இயந்திர பெட்டி ரயர் 750x16 — 02
- ❖ பாவித்த 155x12 டிமோரயர் — 13
- ❖ துவிச்சக்கர வண்டி — 02
- ❖ கட்டட மூலப்பொருள்கள்
- ❖ கனரகப் பொருள்கள்
- ❖ கிடாரம்
- ❖ தாச்சி

மேற் கூறப்பட்ட விவரப்படியான பொருள்கள் 21.01.2017 சனிக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்குப் பூநகரி வாடியடியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் வைத்துப் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும். அன்றையதினம் முழுப்பணத்தையும் செலுத்தி பொருள்களை பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- விடுமுறை நாள்கள் தவிர்ந்த கடமை நாள்களில் பூநகரி வாடியடியிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் பொருள்களைப் பார்வையிடலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்
**0212060852, 0778163029**

**து.இரத்தினசிங்கம்**
**தலைவர்**

(சி/27588) (11,17)

**ம.ஜெயகுமார்**
**பொதுமுகாமையாளர்.**

**திருமறைக் கலாமன்றம்**
**கலைத்தூது அழகியல் கல்லூரி**

**எமது கல்லூரியினால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2017 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**பிரதான பாடங்கள்**

✓வாய்ப்பாட்டு ✓ நடனம் (பரதம், கதகளி, மோகினி) ✓வீணை ✓ வயலின் ✓ புல்லாங்குழல் ✓மிருதங்கம் ✓ஓர்கன் (கீபோட்) ✓கிற்றார் ✓ ட்றம் ✓ஒக்ரோபாட் ✓சித்திரம் ✓நாடகமும் அரங்கியலும்

**சிறப்புப் பாடங்கள்**

- கூத்து • கண்டிய நடனம் • யோகாசனம்
- அழகுக்கலை (முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம், தையல்)
- பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவசித்தாந்தம்)

**துணைப்பாடம்**

- ஆங்கிலம்

**இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 25.01.2017 புதன்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.**

**மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகளுக்கும்**

**அதிபர், கலைத்தூது அழகியல் கல்லூரி,**
**இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்,**
**தொ.பே. 021 222 9419**

(C/27594) (11,18)

Rotary E-Club of Jaffna

வலி.தென்மேற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்

உதயன்

அனுசரணையில்...

**பொங்கல் கிறிக்கெட் 2017**



அணிக்கு 6 பேர்,
5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட
யாழ் மாவட்ட ரீதியிலான
விலகல் முறை
மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

**இன்று (07.01.2017) சனிக்கிழமை முதல் தைப்பொங்கல் வரை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில்**

**வெற்றிபெறும் அணிக்கு**
-வெற்றிக்கிண்ணத்துடன் பெறுமதிமிக்க பணப்பரிசில்
**2 ஆவது அணிக்கு**
-வெற்றிக்கிண்ணத்துடன் பெறுமதிமிக்க பணப்பரிசில்

**ES Printers** (உதயன் பணிமனை அருகில்)
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
பதிவுகளுக்கு : 076 675 1204 (அஷி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் - தென்பகுதி மீனவர்கள் இடையே நாயாற்றில் கைகலப்பு

## தனி நபர் 40 படகுகளைப் பயன்படுத்தி அத்துமீறித் தொழில் செய்ததால் முரண்பாடு

முல்லைத்தீவு ஜன. 7

முல்லைத்தீவு நாயாற்று கடற்பரப்பில் பருவகால மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், தென்பகுதியில் இருந்து வந்து தங்கி நின்று 40 படகுகள் மூலம் மீன்பிடி நடவடிக் கை யில் ஈடுபடும் தனி நபருக்கும், நாயாற்றுப் பகுதியை சேர்ந்த மீனவர்களுக்கும் இடையே நேற்று முன்தினம் கைகலப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிவான் மன்றினூடாக பிரச்சினையை தீர்க்குமாறு தெரிவித்த பொலிஸார், நாளை மறுதினம் திங்கட்கிழமை மன்றில் முன்னிலையாகு மாறு இரு தரப்பினருக்கும் அறிவுறுத்தினர்.

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியைச் சேர்ந்த 80 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நாயாற்றுக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் நிலையில், அண்மைக் காலமாக தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிக் குறித்த பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். ஆரம்ப காலத்தில் இருந்து தாங்களும் நாயாற்றுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுகின்றோம் என்று கூறிய தென்னிலங்கை மீனவர்கள், கொழும்பு மீன்பிடி அமைச்சிடமும் அதற்கான அனுமதியைப் பெற்றனர்.

இந்த விடயம் நீண்ட நாள்களாக ஆராயப்பட்டு 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது. கொழும்பு அமைச்சினால் அனுமதி கொடுக்கப்பட்ட 72 தென்னிலங்கை மீனவர்களைத் தவிர வேறு எவரும் குறித்த பகுதியில் தொழில் ஈடுபடக் கூடாது என்று ஒருங்கிணைப்புக் குழு தீர்மானித்தது. தற்போது பருவ கால மீன்பிடிகள் ஆரம்பித்தமையால் தென் பகுதியில் இருந்து வருகை தரும் அதிகளவான மீனவர்கள், நாயாற்றுப் பகுதியில் தங்கிநின்று தொழிலில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

தனி நபர் ஒருவரால் நேற்று முன்தினம் 40 படகுகளை நாயாற்றுக் கடற்பரப்பில்கொண்டு வந்து தொழிலில் ஈடுபடுத்தினார். இதை அறிந்த நாயாற்று மீனவர்களுக்கும் தென்னிலங்கை மீனவர்களுக்கும் இடை யில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது. இராணுவத்தினர், பொலிஸார் எனப் பலர் அங்கு வரவழைக்கப்பட்டனர். பிரச்சினை பொலிஸ் நிலையம் கொண்டு வரப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். இரு தரப்பினரையும் இணக்கத்துக்குக் கொண்டு வரும் பொலிஸா ரின் முயற்சி பயனளிக்கவில்லை. நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். நாளை மறுதினம் திங்கட்கிழமை நாயாற்று மீன்பிடி தொடர் பான வழக்கு நீதிமன்றில் எடுத்து கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'முல்லைத்தீவு மாவட்டத்தில் பருவகால மீன்பிடி ஆரம்பிக்க உள்ளது. முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் தென்பகுதி மீனவர்கள் இராணுவத்தின் உதவியுடன் வாடிகளை அமைத்துவருகின்றனர். நாயாற்றுப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தென்பகுதி மீனவர்களைக் கட்டுப்படுத்துமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவுகள் எடுப்பதற்கான கடற்றொழில் அமைச் சின் செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக மீனவர்களுடன் கலந்துரையாடல்கள் ஊடாக அறிக்கை அனுப்பப்பட்டது. முடிவுகள் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை. இது தொடர்பாக ஒரு நினைவூட்டலை ஏற்படுத்துவதற்கு எண்ணியுள்ளோம் என்று முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (வ-21,7)

# வைகுண்ட ஏகாதசி பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.7

கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீ ரங்க நாதர்பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசி பெருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பகலும் இரவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர்.

காலை 7 மணிக்கு ஸ்ரீமத் பகவத் கீதை முற்றோதலுடன் ஆரம்பம் மாசிமதிய வழிபாடுகளுடன், ஆண்டாள் நாச்சியார் திருவாய் மலர்ந்த திருப்பாசுரம் முற்றோதல், சிறப்பு வழிபாடு மற்றும் இரவு 7 மணிக்கு சமயக்கேள்வி பதிலும் பரிசளிப்புடனும் பகல் நிகழ்வுகள் நடைபெறும்.

இரவு 10 மணிக்கு தொழுகை நிகழ்வுகளுடன் ஆரம்பமாகி பெருமானுக்கு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறும் அதி உயர் சிறப்பு முழுக்கு, கலை நிகழ்வுகள், பின்னிரவு 3 மணிக்கு வைகுண்ட வாசல் திறப்பு, சுவாமி தரிசனம், இறந்த முன்னோர்களுக்கான மோட்ச ஆராதனை, திருப்பாவை உற்சவம், அதிகாலை 6 மணிக்கு ஏகாதசி நோன்பு உணவு வழங்குகலுடன் நிறைவுறும் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

கரவெட்டி, ஜன. 7

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் மார்கழிமாதவைகுண்ட ஏகாதசி உற்சவம் நாளைஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் பகல் முழுவதும் 1008 சங்கு முழுக்கு, சிறப்பு வழிபாடுகள், ஆராதனைகள் என்பன இடம்பெற்று, அன்றிரவு நான்கு சாம வழிபாடுகள் இடம்பெறுவதுடன், வைகுண்ட ஏகாதசி புராணப் படிப்பு நடைபெறும்.

தொடர்ந்து மறுநாள் திங்கள் அதிகாலை சுப்பிரபாதத்துடன் திருப்பள்ளியெழுச்சி பாடப்பட்டு காப்பக்கிரகம், வசந்தமண்ட வழிபாடுகள் நடைபெறும்.

வசந்த மண்டபத்தில் தொடர்ந்து திருப்பாவைப்பாடல்கள் இசைக்கப்பட்டு சக்கரத்தாழ்வார் சுவாமிகள் உள், வெளிவீதி உலாவந்து பக்தர்களுக்கு அருள்காட்சிகொடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

# சிகை ஒப்பனை நிலையங்களுக்கு கட்டுப்பாடு தளர்வு

யாழ்ப்பாணம், ஜன. 7

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிகை ஒப்பனை நிலையங்களுக்கு நேரக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியச் செயலர் அறிவித்தார்.

இன்றுதொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இந்த நேரக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன. அதேபோல் நாளை ஞாயிற்றுக்கிழமையும் அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களும் திறந்தல் வேண்டும்.

மீண்டும் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் நேரக் கட்டுப்பாடுகள் வழமை போல் இருக்கும். இதன்பின் நேரக்கட்டுப் பாட்டை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-ரி)

# திருவாதிரைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்.இந்து சமயப் பேரவையின் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜர் கோயிலில் திருவாதிரைப் பெருவிழா நடைபெறும் என்று இந்து சமயப் பேரவைச் செயலர் தெரிவித்தார்.

எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 2 மணிக்கு பெருமானுக்கு ஆருத்திரா முழுக்கு நடைபெற்று, மறுநாள் அதிகாலை புதன்கிழமை ஆருத்திரா தரிசனம் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

# வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 7

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது என்று ஆலயத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

எதிர்வரும் 14ஆம் திகதி தைப்பொங்கல் அன்று நாகக்கன்னியம்மன் நாக வாகனத்தில் திருவீதியுலா எழுந்தருளி வருவதோடு, தீ மிதிப்பு நிகழ்வுடன் சிறப்பு நிகழ்வுகளும் நடைபெறும். 'உமையும் உமையொரு பாகனும்' எனும் தலைப்பில் சைவப் புலவர் செ.கந்த சத்தியதாசனும், 'சைவ வாழ்வு' எனும் தலைப்பில் சைவப்புலவர் கு.சுமுகலிங்கமும், 'அருமருந்து நாக கேஸ்வரி' எனும் தலைப்பில் சைவப்புலவர் க.நித்தியதசீதரனும் சொற்பொழிவு ஆற்றவுள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதியில்

# வலி. தென். மேற்குப் பிரதேசத்தில் 47 அபிவிருத்திப் பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நான்கு மாகாண சபை உறுப்பினர்களின் 2016ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வலி.தென் மேற்குப் பிரதேசத்தில் 47 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் 50 ஆயிரம் ரூபாவும், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா 2லட்சம் ரூபாவும், டக்ளஸ் தேவானந்தா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், தர்மலிங்கம் சித்தார்த்தன் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஈஸ்வரபாதம் சரவணபவன் 10 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், அங்கஜன் இராமநாதன் 4லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மற்றும் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் ஒரு லட்சம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

அத்துடன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன் 2 லட்சத்து 75ஆயிரம் ரூபாவும், பி.கஜதீபன் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், சி.வி.கே. சிவஞானம் ஒரு லட்சம் ரூபாவும், ஏ.பரஞ்சோதி 50ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளனர்.

இந்த நிதி மூலம் சாலைகளுக்கான மின்விளக்குகள் சனசமூக நிலையங்களுக்கான தளபாடங்கள் உட்பட 47 வேலைத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-115)

# அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7

முற்போக்குக் கவிஞர் கல்வயல் வே. குமாரசாமியின் அஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இல. 62, கே.கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக் கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எழுத்தாளர் க. தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் அஞ்சலி உரைகளை கவிஞர் சோ. பத்மநாதனும், கவிஞர் இ.த. ஜெயசீலனும், கலாநிதி செ. திருநாவுக்கரசும், சட்டத்தரணி சோ. தேவராஜாவும் ஆற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

# சில இடங்களுக்கு இன்று மின் வெட்டு

யாழ்ப்பாணம், ஜன.7

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் அச்செழு, கரந்தன், நீர்வேலி, மாசிவன், சிறுப்பிட்டி ஆகிய இடங்களிலும் - கிளிநொச்சிப் பிரதேசத்தில் டொன்பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மங்கைகுடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, 65ஆவது படை முகாம், ஆலங்குளம் துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ரி.ஆர்.சி. பயிற்சி முகாம், பனிக்கங்குளம், சி.ஏ.ரி.ஐ.சி. - பனிக்கங்குளம், நீதிபுரம், டயலொக் தொலைத் தொடர்பு கோபுரம் ஒலுமடு ஆகிய இடங்களிலும்-

வவுனியாப் பிரதேசத்தில் நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம், கூமாங்குளம் ஆகிய இடங்களிலும் - மன்னார் பிரதேசத்தில் மடுதேவாலயம், பெரியதம்பனையிலிருந்து வெள்ளாங்குளம், சன்னார் இராணுவமுகாம், முருங்கனிலிருந்து தலைமன்னார் வரை, வங்காலை கடற்படைமுகாம், வங்காலை, நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேரிமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, சிறப்பு அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டிமம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படை முகாம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

# பிற்போடப்பட்டது கலந்துரையாடல்

கரவெட்டி, ஜன. 7

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 13ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் பி.ப.3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று கரவெட்டிப் பிரதேச செயலர் தெரிவித்தார். (வ)

# அக்குபஞ்சர் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்ப்பாண மாவட்ட சாரணிய மன்றத்தின் ஏற்பாட்டில் இலவச அக்குபஞ்சர் சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஐக்கிய ராச்சியத்தில் இருந்து வருகை தந்துள்ள மருத்துவர்களால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தச் சிகிச்சை முகாம், யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணிக்கு வண்ணார் பண்ணை ஐயனார் கோவில் வீதியில் அமைந்துள்ள சீதாதேவி கங்காதரன் ஆரோக்கிய அகத்தில் வழங்கப்படும் என்று பெண்கள் சாரணிய மாவட்ட ஆணையாளர் அறிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள் வெட்டுக் குற்றச்சாட்டில் 5 பேர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜன. 7

இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்தை வடக்கு மாகாண மூத்த பொலிஸ்



அத்தியட்சகர் ரி.கணேசநாதன் தலைமையில் இயங்கும் சிவில் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்தவர்கள் ஒளிப்படம் எடுத்துள்ளனர். அவற்றைப் பொலிஸ் அத்தியட்சகர் ரி.கணேசநாதனுக்கு முன்வைத்தனர்.

அவை தொடர்பில் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார் விரைந்து விசாரணைகளை முன்னெடுத்து வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் ஐந்து இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களும் நேற்று மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ-35)

# வடக்கிலுள்ள நெல்லை வெளியே விடவேண்டாம்

*யாழ். வணிகர் கழகம் கோருகிறது*

யாழ்ப்பாணம், ஜன.7

வடக்கு மாகாணத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்லை பிற மாவட்டங்களுக்கு விநியோகிப்பதைத் தடுக்க வேண்டும். இல்லையெனில் அரசு சிவப்பு அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலை ஏற்படும்.

இவ்வாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. வணிகர் கழகத்தால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக அரிசி விலையில் பெரியளவிலான ஏற்றங்கள் ஏற்பட்டு வருவதை மக்கள் மிகக் கவலையுடன் எதிர்கொண்டு வருகின்றனர். அரிசிக்குப் பற்றாக்குறை ஏற்படாத வகையில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே வகையில் சீர்செய்யும் கடப்பாடு அரசுக்கு உண்டு. எனவே நெல் மிக அதிகமாக விளையும் இடங்களிலிருந்து நெல் குறைவாக உள்ள இடங்களுக்கு விநியோகித்து சமநிலையைப் பேண நெல் சந்தைப்படுத்தும் சபை முயற்சி எடுத்து வருவதை நாம் நிராகரிக்கவும் இல்லை. ஆனால் பிரதேசங்களில் நிலவக்கூடிய தனித்துவமான அம்சங்களையும் நெல் சந்தைப்படுத்தும் சபை கவனிக்க வேண்டும் என்றே நாம் வலியுறுத்துகின்றோம்.

வடக்கு மாகாண களஞ்சியசாலையில் தற்சமயம் கையிருப்பில் இருக்கும் நெல்லை வடக்கு மாகாண மக்களுக்கு மட்டுமே விநியோகித்தால் அரசுக்கும் அது இலாபகரமானதாக அமையும் என்பதை அழுத்தமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எதிர்வரும் தைப்பொங்கல் மற்றும் வருடப்பிறப்பு நாட்களில் வடக்கு மாகாண மக்களின் அரிசிக்கான தேவை மிக அதிகமாக இருக்கும் என்பதையும் இந்த நிலையில் சிவப்பு அரிசிக்கான தட்டுப்பாடு மக்கள் மத்தியில் பெரிதும் அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என நெல் சந்தைப்படுத் தும் சபைத் தலைவரை யாழ்ப்பாண வணிகர் கழகத்தினர் கேட்டுக்கொள்கின்றார்கள் - என்றுள்ளது. (வ-21,ரி)

# மழை வேண்டி நேற்று வழிபாடு

தென்மராட்சி ஜன.7

நாட்டில் மழையுடனான சிறந்த காலநிலைக்காக நாட்டுக்கும் மக்களுக்கும் ஆசீர்வாதம் பெறும் வழிபாடுகள் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் நேற்றுக் காலை தொடக்கம் பிரதேசத்தில் உள்ள நான்கு மதங்களின் ஆலயங்களில் நடத்தப்பட்டன.

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலயத்தில் காலை 6.30 மணிக்கும், சாவகச்சேரி வாரிவனநாதர் ஆலயத்தில் மு.ப.10 மணிக்கும் சாவகச்சேரி தனங்களப்பு சாலை முகைதீன் பள்ளிவாசலில் நண்பகல் 12.30 மணிக்கும், நாவற்குளி சமித்தி சுமண விகாரையில் பி.ப.2 மணிக்கும் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன. (வ-9)



*முல்லைத்தீவு ஒலுமடுப் பகுதியில், சாலையோரம் நடப்பட்டிருந்த பாதுகாப்புத் தூண்களைத் தகர்த்து சாலையை விட்டு விலகிய, பட்டா வாகனம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.*

*இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் மாங்குளம் ஒட்டுசுட்டான் சாலையில் இடம்பெற்றது.பட்டா வாகனத்தின் சாரதி சிறிய காயங்களுக்கு உள்ளானார். மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் வாகனத்தை மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர் . (வ-102)*

# நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களை வெளியேற்ற முயற்சி

*அதிகாரிகள் மீது குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜன. 7

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை, நலன்புரி நிலையங்களிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றும் முயற்சிகளில் அரச அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். ஐ.நா. மனித உரிமைகள் சபையை இலக்கு வைத்து அதிகாரிகள் இந்த நடவடிக்கை மேற்கொள்வது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு வலி.வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி. வடக்கிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்கள் இப்போதும் நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்றனர். இவர்களது காணிகள் பாதுகாப்புத் தரப்பினர் வசமே உள்ளது. கடந்த சில தினங்களாக பிரதேச செயலர்கள், அதிகாரிகள் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று மக்களை மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். நலன்புரி நிலைய மக்கள் எனக்கு இது தொடர்பில் பல்வேறு தகவல்களை வழங்கியுள்ளனர்.

உங்களது காணிகள் விடுவிக்கப்படாது. நீங்கள் நலன்புரி நிலையத்திலிருந்து வெளியேற வேண்டும். மாற்றுக் காணியை அடையாளப்படுத்துங்கள். அதனை உங்களுக்கு வாங்கித் தருகின்றோம். இவ்வாறு அதிகாரிகள் நலன்புரி நிலைய மக்களுக்குச் சொல்லியுள்ளனர்.

அவர்களது காணிகள் விடுவிக்கப்படாது என்று அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்து விட்டதா ? அப்படியில்லாத சூழ்நிலையில் அதிகாரிகள் ஏன் இப்படியான செயற்பாட்டை முன்னெடுக்கின்றார்கள். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வுக்கு முன்னர், நலன்புரி நிலையங்களை மூடி விட்டோம் என்று காண்பிப்பதற்காகவா இவ்வாறான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

எமது மக்களுக்கு அவர்களது சொந்தக் காணிகள் தான் வழங்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் அரசு எம்மை ஏமாற்ற முடியாது. ஏமாற்றவும் முயலக்கூடாது என்றார். (வ-5)

# பாடசாலை மட்ட போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விலங்கியல் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கிடையேயான போட்டி நிகழ்ச்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டி பற்றிய தகவல்களையும் விண்ணப்படிவத்தினையும் www.jfn.ac.lk என்ற இணையத்தள முகவரியில் விஞ்ஞானபீடத்தில் நுழைந்து (Faculty of Science) விலங்கியல் துறையில் (Department of Zoology) விலங்கியல் மாணவர் ஒன்றியத்தினுள் (Zoological Students Association d ZSA) சென்று பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# ஓட்டோ — பட்டா விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஜன.7

வவுனியா ஏ-9 முதன்மைச் சாலையில் இலங்கைப் போக்குவரத்துச்சபைக்காரியாலயத்துக்கு அருகே நேற்று மாலை பட்டா ரக வாகனமும் முச்சக்கரவண்டியும் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. வவுனியாவிலிருந்து மதவுவைத்த குளம் நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி சாலையின் மறு பக்கம் திரும்ப முற்பட்ட சமயத்தில் வவுனியாவிலிருந்து மதவாச்சி நோக்கி பயணித்த பட்டா ரக வாகனம் மோதி விபத்து இடம்பெற்றது. விபத்தில் பட்டாரக வாகனத்தில் பயணித்தவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (வ-21)

# ஆசிரியரால் தாக்கப்பட்ட மாணவி வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஜன. 7

ஆசிரியர் ஒருவரால் தலைமுடியில் பிடித்து கடுமையாகத் தாக்கப்பட்ட 6ஆம் தரத்தில் கற்கும் மாணவி சுவாச உபாதைக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கோண்டாவிலில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று இடம்பெற்றது. பாடசாலையில் மாணவிகள் அதிகமாகச் சத்தம் போட்டனர். அதில் மாணவி ஒருவர் ஆசிரியரினால் தண்டிக்கப்பட்டார். அந்த மாணவி அழுதார். இதனால் ஆத்திரமடைந்த ஆசிரியர் மாணவியின் தலை முடியைப் பற்றி இழுத்துத் தாக்கினார். மூச்சுத் திணறலுக்கு உள்ளான மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாணவியின் பெற்றோர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பாதிக்கப்பட்ட மாணவியை வடக்கு மாகாண எதிர்க் கட்சித்தலைவர் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டதோடு, சம்பவத்தை வடக்குக் கல்வி அமைச்சின் கவனத்துக்கும் கொண்டு சென்றார்.

'இந்தச் சம்பவம் நேற்றைய தினம் பகல் இடம்பெற்றுள்ளது. மாலையில் எமது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. எனினும் இது தொடர்பில் ஆரம்ப விசாரணை மேற்கொண்டு அறிக்கை முன்வைக்க குழுவொன்று உடனடியாகவே நியமிக்கப்பட்டுள்ளது. சனி, ஞாயிறு விடுமுறை தினம் என்பதால் திங்கட்கிழமை குறித்த விசாரணைகள் இடம்பெறும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். (வ-21,10ீ)



# மாஞ்சோலை வைத்தியசாலையில் புதையுண்ட பைரவர் வெளிவந்தார்

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு, மாஞ்சோலை வைத்தியசாலை வளாகத்தில் வெளித்தெரிந்த பைரவர் சூலத்தை பொதுமக்கள் வணங்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாஞ்சோலை வளகத்தில் கடந்த புதன்கிழமை துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, வைத்தியசாலையில் முன்பகுதியில் உள்ள வேப்பமரத்தின் அடியில் இருந்து கம்பி ஒன்று தட்டுப்பட்டுள்ளது. துப்பரவு செய்தவர்கள் உற்றுப் பார்த்த போது மண்ணுக்குள் புதையுண்ட நிலையில் பைரவர் சூலம் தெரிந்துள்ளது. இதனை அடுத்து அது வெளியில் எடுக்கப்பட்டுத் தற்போது முள்ளியவளைப் பகுதிய மக்களால் வணங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 07 . 02 . 1942

உதிர்வு 31 . 12 . 2014

### அமரர் செல்லையா சற்குணசிங்கம்

ஆண்டுகள் இரண்டு ஆனதோ ஆறவில்லை எம் துயரம்
ஏணியாக நின்று எமை ஏற்றிவைத்த தெய்வம் நீங்கள்
எத்துன்பம் வந்தபோதும் தூணாக இருந்தீர்கள்
அத்துன்பம் போக்க அரணாக காத்தீர்கள்
காலனவன் செய்த சதியால் கலங்கி இங்கு வாடுகிறோம்.
என்றும் உங்கள் ஆத்மாவின் சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பசிட்டி வீதி, புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

மனைவி,
பிள்ளைகள்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 07 . 03 . 1959

மறைவு 10 . 12 . 2016

### அமரர் க.சு.சந்திரலிங்கம்

கடந்த 10.12.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் க.சு.சந்திரலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (09.01.2017) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு இன்பர்சிட்டி அந்தியேட்டி மடத்திலும், அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மதியம் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம் பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசியூடாகவும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

(N.214) (13.18.17)

குடும்பத்தினர்.

# மனித உரிமைகளை மேம்படுத்த ஐந்தாண்டு தேசிய செயற்றிட்டம்

கண்டி, ஜன.07

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குத் தேசிய செயற்றிட்டத்தைத் தயாரித்து வருவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூத்த பணிப்பாளர் ஜெனரல் ஏ.எல்.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

தேசிய செயற்றிட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கான சிறப்புக் கூட்டம் கண்டி ஆர்ட் லங்கா ஹோட்டலில் இடம்பெற்றது.

இதில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை மக்களின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள், சித்திரவதைகளைத் தடை செய்தல், பெண்களின் உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள், சிறுவர்களின் உரிமைகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் உரிமைகள், அங்கவீனர்களின் உரிமைகள் மற்றும் சுற்றாடல் உரிமைகள் போன்ற முக்கிய அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படும்- என்றார்.

சிவில் அமைப்புகள் சார்பாகக் கண்டி மனித அபிவிருத்தி அமைப்பின் தலைவர் பி.பி.சிவப்பிரகாரம் உரையாற்றுகையில்,

இலங்கையில் மனித உரிமையை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. மனித உரிமை, கல்வி மேம்படுத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக நல்லாட்சி கரிசனை காட்டி வந்தாலும் அவை மேலும் விருத்தி செய்யப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனவே, பொதுமக்களின் ஆலோசனை குறிப்பாக சிவில் அமைப்புகளின் ஆலோசனையை பெறுவது முக்கிய அம்சமாகும் - என்றார். (த-ய)

# 23 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு சமுர்த்தி உதவி

## முல்லைத்தீவு திவிநெகும திணைக்களம் நடவடிக்கை

முல்லைத்தீவு, ஜன. 7

முல்லைத்தீவு மவாட்டத்தில் இதுவரை காலமும் சமுர்த்தித் திட்டம் வழங்கப்படாமல் இருந்த 23 கிராம சேவையாளர் பிரிவுக்கும் அதனை வழங்குவதற்கான முன்னாயத்தத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட திவிநெகுமதிணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

405 மில்லியன் ரூபாவில் வாழ்வாதாரம், சமுக அபிவிருத்தி, மாதிரிக் கிராமம், தொழிற் பயிற்சிகள் எனப் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள் ளன. ஒதுக்கப்பட்ட நிதிகள் முழுமையாகச் செலவு செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்த்தில் பிந்திய மீள்குடியேற்றத்தால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும், கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் 23 கிராம சேவையாளர் பிரிவுகளில் சமுர்த்தி வழங்கப்படவில்லை. சமுர்த்தியைப் பெற்றுக்கொள்ளவதற்குத் தகுதியான குடும்ப்ங்களாக 12 ஆயிரத்து 25 குடும்பங்கள் இணங் காணப்பட்டு அவற்றுக்கு சமுர்த்தி வழங்குவதற்கான முன்னாயத்த வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன- என்றார். (த-7)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 07.12.2016 சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

### அமரர் நாகலிங்கம் புவனேந்திரன்

அவர்களின் இறுதிக்கிரியையில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், நெல்லியடி வர்த்தக சங்க உறுப்பினர்கள், ஏனைய பிரபல வர்த்தகர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், நிர்வாக சேவை அதிகாரிகள் , மருத்துவர்கள், கல்வியியலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் வங்கியாளர்கள், சமுர்த்தி மகா சங்கம் மற்றும் திவிநெகும வங்கி உத்தியோ கத்தர்கள், பல்கலைக்கழக மாணவ நண்பர்கள் , தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக வலைத்தளங்களுடாக ஆறுதல் தெரிவித்தவர்கள், பத்திரிகை விளம்பரங்கள் ஊடே துயர்பகிர்ந்தவர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள் மற்றும் ரெலிமெயில் ஊடாக தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியோர் மற்றும் ஏனைய வழிகளில் இறுதிக் கிரியை நிகழ்வில் உதவிபுரிந்தோர் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருவதுடன்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வானது 06.01.2017 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலையில் நடைபெற்றன. நாளை (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் **நெல்லை முருகன் திருமண மண்டபத்தில்** நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இறுதி நிகழ்வில் பெருந்திரளானோர் பங்கு பற்றி இருந்தமையால் சிலர் எமது தனிப்பட்ட அழைப்பில் தவறவிடப்பட்டிருக்கலாம். அவர்கள் தயவு கூர்ந்து எம்மை மன்னித்து இதைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயில் வீதி,
நெல்லியடி.

(S.7398) (13.18.17)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. தெற்கில் டெங்கு நோயாளர் அதிகரிப்பு

## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம்

அச்சுவேலி,ஜன.7

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் புதுவருடத்தின் முதல் நான்கு தினங்களில் மட்டும் 11 பேர் டெங்குக் காய்ச்சலின் தாக்கத்துக்கு உள்ளாகி உள்ளனர். இதில் பெரும்பாலானோர்கள் உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள். உரும்பிராய்ப் பகுதியில் டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைக் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் இ.மகேந்திரன் தலைமையில் 35 க்கும் மேற்பட்ட அலுவலர்களைக் கொண்ட அணி நான்கு குழுக்களாக மேற்கொண்டு வருகின்றது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த வருடம் 145 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியபோதிலும் இந்த வருடம் முதல் 4 தினங்களில் மட்டும் 11 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளமை பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உரும்பிராய்ப் பகுதியில் டெங்குநோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் மருத்துவமாதுக்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், பொலிஸார், சுகாதாரத் தொண்டர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், அலுவலக அதிகாரிகள், வலி கிழக்குப் பிரதேச அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளடங்கலாக 35க்கு மேற்பட்டவர்கள் 4 குழுக்களாகப் பிரிந்து ஈடுபட்டுள்ளனர்.

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருப்பது டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் இடையூறாக இருப்பதாகக் கூறப்படுகின்றது.

உரும்பிராய் பகுதியில் டெங்கு பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதற்கு சம்பந்தப்பட்ட பகுதி மக்களின் ஒத்துழைப்பு குறைவாக இருப்பதும், டெங்கு கட்டுப்பாடு தொடர்பான ஆலோசனைகளை பொதுமக்கள் உரியமுறையில் அனுசரிக்கத் தவறுவதும் தான் காரணம் எனச் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கூறுகின்றனர்.(த-11)

# 9,200 திட்டங்கள் ரூ.4,039 மில்லியனில்

## யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டதாக தகவல்

யாழ்ப்பாணம் ஜன.7

யாழ் மாவட்டச் செயலகத்தினால் கடந்த ஆண்டுநடைமுறைப்படுத்தப்பட்ட 9 ஆயிரத்து 200 அபிவிருத்தி திட்டங்களுக்காக 4 ஆயிரத்து 39 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாக யாழ் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காகப் புதிதாக நிர்மாணிக்கப்படும் 3 ஆயிரம் வீட்டுத் திட்டத்துக்கு 2 ஆயிரத்து 400 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது. இந்தியாவிலிருந்து மீள்குடியேறியவர்களுக்கான 140 வீடுகள் அமைக்கும் திட்டத்துக்காக 112 மில்லியின் ரூபா செலவழிக்கப்பட்டது.

பலாலி வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 137 திட்டங்களுக்கு 122.950 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது.

நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான 610 வீடுகள் அமைப்பதற்கான வீட்டுத்திட்டத்துக்கு 488 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது. போரால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்கான திருத்தத் திட்டத்தின் கீழ் 745 திட்டங்களுக்காக 144.951 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. அரை நிரந்தர வீட்டுத்திட்டத்தினூடாக 10 திட்டங்களுக்கு 1.630 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

கீரிமலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 6 அபிவிருத்தி திட்டங்களுக்கு 169.050 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது.

நீர்வழங்கல் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 311 திட்டங்களுக்காக 101.967 மில்லியன் ரூபா செலவானது. மலசலகூடம் அமைத்தல் திட்டங்கள் ஊடாக ஆயிரத்து 200 திட்டங்கள் மேற்கொள்வதற்காக 66 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. வாழ்வாதார உதவித் திட்டங்களின் கீழ் 3 ஆயிரம் திட்டங்களுக்காக 300 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களில் 40 திட்டங்களுக்காக 106.885 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது. தபால் அலுவலகம் கட்டுமான வேலைத்திட்டத்துக்கு 10 மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டது. மீளக்குடியமர்ந்த முஸ்லிம் குடும்பங்களுக்கான உட்கட்டுமான வேலைத்திட்டங்களுக்காக 3.268 மில்லியன் ரூபா செலவானது.

இதன்படி யாழ் மாவட்டச் செயலகத்தின் கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 99.45 வீதமான நிதிகள் செலவழிக்கப்பட்டுள்ளன- என்றார். (த-8)

### சிறுமி மீது பாலியல் கொடுமை; தந்தை கைது

யாழ்ப்பாணம், ஜன.7

தந்தையால் பாலியல் ரீதியான கொடுமைக்கு ஆளாகினார் என்று தெரிவிக்கப்பட்ட வலிகாமம் பகுதியை சேர்ந்த 12 வயது சிறுமி சுன்னாகம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் தந்தையான 36 வயதுடைய நபர் நீண்ட நாள்களாக சிறுமியை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார் என்றும், பயம் காரணமாக சிறுமி யாரிடமும் அது தொடர்பாகத் தெரியப்படுத்தவில்லை என்றும் கூறப்படுகின்றது.

கடந்த புதன்கிழமையே சிறுமி பெரியதாயிடம் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். அவர் சிறுமியின் தாயிடம் தெரியப்படுத்தியுள்ளார். அதன்பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பாக முறையிடப்பட்டது. சந்தேகநபரான தந்தை கைது செய்யப்பட்டார். சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ற-101)

# அலையும் பெற்றோர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7.

தென்மராட்சிவலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களை இணைப்பதற்கு கடந்த புதன்கிழமை பெற்றோர் அலைந்து திரிந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலைகளில் மாணவர்களை இணைப்பதில் மாகாணக் கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கமைய அதிபர்கள் செயற்படுவதால் நினைத்த பாடசாலையில் எமது பிள்ளைகளை முன்னரைப் போல் இணைக்க முடியாதுள்ளது எனப் பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர்.

'ஒரு கிராம அலுவலர் பிரிவில் வசிப்பவர்கள் அந்தப் பிரிவில் உள்ள பாடசாலையில் மட்டும் இணைக்க முடியும். பிள்ளையை அடுத்த பிரிவில் உள்ள பாடசாலையில் இணைக்கக்கூடாதென பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் அதிபர்கள் அடுத்த பிரிவில் உள்ள பிள்ளைகளைத் தமது பாடசாலையில் இணைக்க மறுப்புத் தெரிவித்திருக்கலாம் என வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான செயற்பாட்டினால் சில பாடசாலைகளில் வகுப்பில் இணைக்க அனுமதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாக மாணவர்கள் இணைந்துள்ளனர்.

இதனால் பிரபல பாடசாலைகளில் பிள்ளைகளை இணைக்கமுடியாத நிலை உள்ளது எனப்பெற்றோர்கள் மேலும் தெரிவித்தனர். (த-9)

# கலாபூசணம் விருதை நிராகரித்த முன்னாள் அதிபர்

## உரிய காலவேளையில் கிடைக்கவில்லை எனக் கூறி

அச்சுவேலி, ஜன.7


தமிழ் இலக்கியத்துறைக்கு வழங்கப்பட்டிருந்த கலா பூசணம் விருதை முன்னாள் அதிபர் க.வை.குணசேகரம் நிராகரித்திருப்பதோடு நிராகரிப்பதற்கான தன்னிலை விளக்கத்தை பண்பாட்டலுவல்கள் கலாசாரத் திணைக்கள அதிகாரிகளுக்கும் அறிவித்தார்.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த க.வை.குணசேகரம் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் மற்றும் நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

2016 ஆண்டுக்கான கலாபூசணம் விருது, அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவத்தில் வைத்துத் துறைசார் நிலையில் பணியாற்றிய தமிழ்க்கலைஞர்களுக்குவழங்கப்பட்டது. கலாபூசணம் விருது தொடர்பாக குணசேகரத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் அவர் பெற்றுக்கொள்ளாமல் நிராகரித்து உள்ளார்.

கலாபூசணம் விருதை நிராகரித்தமை தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

நான் நூற்றுக்குமேற்பட்ட புத்தகங்களைத் தமிழ் இலக்கியம், சமய இலக்கியம் சார் நிலையில்எழுதிவெளியிட்டுள்ளேன். எனக்கு உரிய காலவேளையில் கலாபூசணம் விருது வழங்கப்படவில்லை. காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டுள்ளது. எனது புத்தகங்கள் தமிழர் வாழும் தேசங்கள் எங்கும்பயன்பாட்டில் உள்ளன. எனது ஆக்க இலக்கியப்பணியைப் பாராட்டி தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிஞர்கள் மற்றும் திருவாவடுதுறை ஆதீனம் உள்ளிட்ட நிறுவனங்கள் பாராட்டியுள்ளன. எனது புத்தகங்கள் தமிழ்நாட்டில் உள்ள பிரபல பதிப்பகங்களினாலும் வெளியிடப்பட்டிருப்பதோடு ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளும் பதிப்புச் செய்யப்பட்டுள்ளன. எனது பணி இலங்கையில் மட்டுமல்ல வடபகுதியில்கூட உரியமுறையில்கண்டுகொள்ளப்படாதநிலையில்உள்ளது. உரிய வேளையில் எனக்கு உரியகௌரவம்தரப்படவில்லை காலம் தாழ்த்தியே விருது வழங்கப்பட்டுள்ளது. கலாபூசணம் விருது வழங்கலில் முறைகேடுகள் உள்ளன. எதிர்காலத்திலேனும் உண்மை நிலையைக் கண்டுகொண்டு உரிய முறையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்- என்றார். (த-11)



# 325 ஹெக்ரேயர் நிலத்தில் சின்ன வெங்காயச் செய்கை

யாழ்ப்பாணம், ஜன.7

யாழ்.குடாநாட்டில் 325 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் விவசாயிகள் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய காலநிலையைப் பயன்படுத்தி அதிகமான விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அநேகமான இடங்களில் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் தற்போது நல்ல நிலையில் உள்ளன. நீர்வேலி,கோப்பாய், உரும்பிராய், ஊரெழு, புன்னாலைக்கட்டுவன், சிறுப்பிட்டி, புத்தூர், அச்சுவேலி, மாசிவன், நவக்கிரி போன்ற இடங்களில் கூடுதலான விவசாயிகள் காலபோக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்தது.

தற்போதைய காலநிலை வேறுபாடு, மழைவீழ்ச்சி இன்மையைப் பயன்படுத்தி விவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஆர்வம் காட்டி உள்ளனர்.

இதேவேளை, குடாநாட்டில் சின்ன வெங்காயத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் கிலோ 100 ரூபாவாக விற்கப்பட்ட சின்ன வெங்காயம் தற்போது கிலோ 120 ரூபாவாக அதிகரித்துள்ளது. (த-17)

# பறவை ஆய்வியல் முகாம் ஜன. 11 முதல் 5 நாள்களுக்கு

யாழ்ப்பாணம், ஜன.7

வடக்கு மாகாணச் சிறுவர்களுக்கான இயற்கை மற்றும் பறவை ஆய்வியல் முகாம் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை நடைபெற உள்ளதாக சி.சி.எச். நிறுவன முகாமையாளர் கஜேந்திரன் தெரிவித்தார்.

அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒவ்வொரு வருடமும் வடக்கு மாகாணத்தில் பறவைஆய்வியலை கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியல் துறையின் இலங்கைக் களப் பறவையியல் குழுவின் தொழில்நுட்ப வழிகாட்டலுடன் நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதன் அடிப்படையில் இந்த வருடமும் இந்த ஆய்வு நடைபெற உள்ளது. இந்த முகாமில் சிறுவர்களுக்கான பறவை அவதானிப்பு மற்றும் ஆய்வியல்செயற்பாடுகளும் நடைபெற உள்ளன. முகாமில் ஆர்வமுடைய சிறுவர்கள்பங்குபற்றலாம். ஆய்வு முகாமில்பங்குபற்றும்சிறுவர்களின் எண்ணிக்கை 15 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. முன்கூட்டிய பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்- என்றுள்ளது. (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுகொள்ளவில்லையா போக்குவரத்து அமைச்சு ?



வவுனியா, ஜன. 7
வவுனியா மாவட்டத்திலுள்ள செட்டிகுளம் பிரதேசத்திலிருந்து மெனிக்பாம் செல்லும் முதன்மைச் சாலையிலிருக்கும், அருவித் தோட்டம் சிவானந்தா வித்தியலாயம் பகுதியிலுள்ள பேருந்துத் தரிப்பிடத்தின் இன்றைய நிலை இது.

கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகப் பேருந்துத் தரிப்பிடம் இவ்வாறுதான் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது.

வெயில், மழைக்கு நிழல் கொடுக்க வேண்டிய பேருந்துத் தரிப்பிடம், இப்படிக் காட்சியளிப்பதை, வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சு கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்குமா என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (த-5)

# அதிபர், ஆசிரியருக்கு உரியவேளைகளில் ஓய்வூதிய அதிகரிப்பு

## ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் கோப்பாய் பிரதேசக் கிளை கோரிக்கை

அச்சுவேலி, ஜன.7
ஓய்வு நிலை ஆசிரியர்கள், அதிபர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பு மற்றும் அது தொடர்பான நிலுவைகளை முன்னுரிமை அடிப்படையில் கல்வி அமைச்சும் ஓய்வூதியத் திணைக்களமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் கோப்பாய் பிரதேச செயலகப்பிரிவுக் கிளை கோரியுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக் கிளை, இது தொடர்பான மனுவைத் தாய்ச் சங்கத்துக்கு அனுப்பி வைத்திருப்பதோடு அவர்களை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கும் தீர்மானித்துள்ளது.

இது குறித்து கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக் கிளைச் சங்கத்தின் செயலர் அ.அருந்தவநேசன் தெரிவிக்கையில், 2007ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைக்கு வரும் புதிய சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அதிபர்களுக்கு ஓய்வூதிய அதிகரிப்பும் 2011ஆம் ஆண்டில் இருந்து இன்று வரையான காலப்பகுதிக்கு நிலுவைக் கொடுப்பனவும் ஓய்வூதிய அதிகரிப்புக்காகத் திரட்டிய ஓய்வூதியக் கொடுப்பனவும் வழங்கப்படவேண்டும்.

இந்தக்கொடுப்பனவை வழங்குவதில் காலதாமதம் நிலவுவதால் மூத்தகுடிமக்களான ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள் மனஉழைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் உரிய வேளையில் கிடைக்குமானால் அவர்களுக்குப் பொருளாதார ரீதியில் வசதியாக இருக்கும்.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்குக் கல்வி அமைச்சும் ஓய்வூதியத் திணைக்களமும் முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த-11)

# ஹேமலதா ஞாபகார்த்த விருது நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 7
மறைந்த கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வருடாந்தம் யாழ். மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெறும் கிராம அலுவலருக்கான முகாமைத்துப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெறுபவர்களுக்கு விருதும் சான்றிதழும் யாழ். செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 1995 ஜூலை மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற முன்னேறிப் பாய்ச்சல், நடவடிக்கையின்போது நவாலி வடக்கு கிராம அலுவலராக சேவையாற்றியவேளை செல்வி ஹேமலதா செல்வராஜா நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய முன்றிலில் சாவடைந்தார். இவரின் ஞாபகார்த்தமாக விருது வழங்கி கௌரவிக்க அரச நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு ஏற்கனவே யாழ். மாவட்ட செயலாளருக்கு அனுமதியளித்திருந்தது. (த-21,50,ரி)

# மீன்பிடிப் பண்ணைகளில் முன்னாள் போராளிகளுக்கு முன்னுரிமை

## அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 7
மன்னாரில் அமையவுள்ள மீன்பிடிப் பண்ணையில், முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும். இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

முன்னாள் போராளிகளுக்கு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் ஊடாக வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், முன்னாள் போராளிகள் சிலர், வேலைவாய்ப்புக் கோரி சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தைக் கடந்த வாரம் முற்றுகையிட்டிருந்தனர். இந்தப் போராளிகளுக்கான வேலை வாய்ப்புத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
மன்னார் நாயாற்றுப் பகுதியில் ஆயிரம் ஏக்கரில் 4 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் மீன்பிடிப் பண்ணை அமைக்கப்படவுள்ளது. பண்ணை இயங்கத் தொடங்கும்போது 5 ஆயிரம் பேருக்கு ஆகக் குறைந்தது வேலை வாய்ப்புக் கிடைக்கும். எமது முன்னாள் போராளிகளுக்கு இதில் முன்னுரிமை வழங்கப்படும்.

முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரச் செயற்பாடுகளை உயர்த்துவதற்கு நாம் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். நேரடியாக எனது வழிகாட்டலில் பப்பாசிப் பண்ணை அமைப்பதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்பக் கட்டத்தில் இதில் நூற்றுக் கணக்கான முன்னாள் போராளிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இதனைச் செயற்படுத்த ஆரம்பிக்கும் போது 2 முன்னாள் போராளிகள் மாத்திரமே முன்வந்தனர்.

நல்லதொரு செயற்திட்டம். பப்பாசிப் பாலை மருத்துவ நிறுவனத்திற்கு விற்பனை செய்யும் இந்தத் திட்டத்தின் ஊடாக மாதம் 25 ஆயிரம் ரூபா வரைக்கும் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் பயன்பெற்றுக் கொள்வதற்கு முன்னாள் போராளிகள் ஆர்வம் காட்டவில்லை.

இதனால் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகின்றது. அவர்கள் சுயதொழில் முயற்சியில் இறங்க வேண்டும். அதற்கு நாம் பக்கபலமாக இருப்போம். நாம் பலரிடம் பேசி இவ்வாறான தொழில் முயற்சிகளை இங்கு ஆரம்பிக்கும்போது அதற்கு முன்னாள் போராளிகள் ஆதரவு கொடுக்க வேண்டும் - என்றார். (த-5-8)

# சங்கங்கள் ஊடாக பொங்கல் பொருள்

## விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.7
தைத்திருநாளை முன்னிட்டு பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நுகர்வோரின் வசதி கருதி பொங்கல் பொருள்களைக் கிளை நிலையங்கள் ஊடாக விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அரிசி, சர்க்கரை, பயறு, பானை மற்றும் இதரப் பொங்கல் பொருள்கள் யாவும் கிளை நிலையங்கள் ஊடாக நியாய விலைக்கு விற்கப்படவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகச் சங்கம் தெரிவித்துள்ளது. இதேவேளை, நீர்வேலி, நல்லூர், தெல்லிப்பழை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நுகர்வோருக்குப் பொங்கல் பொருள்களை நியாய விலையில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. (த-17)

# முள்ளியவளை நாளாந்த சந்தை கட்டடத் தொகுதி வாடகைக்கு

## வியாபாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு

முல்லைத்தீவு, ஜன. 7
உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முள்ளியவளை ஐயனார் கோயிலுக்கு அருகில் உருவாக்கப்பட்ட வாராந்தச் சந்தை மீண்டும் அந்த இடத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை எடுத்தமையால் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகளில் புதிதாகக் கட்டப்பட்ட நாளாந்தச் சந்தைக் கட்டடத் தொகுதியை வியாபாரிகள் முழுமையாக வாடகைக்குப் பெற்றுக் கொண்டனர் எனக் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையால் கடந்த ஆண்டு முள்ளியவளை, தண்ணீரூற்று ஆகிய இரு இடங்களில் இரு சந்தைகளுக்கான கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. வியாபார நிலையங்களை வர்த்தகர்கள் பெற்றுக்கொள்வதற்காகப் பிரதேச சபையால் கேள்வி கோரப்பட்டது. எனினும் அதனைப் பெற்றுக்கொள்வதற்கு வர்த்தகர்கள் முனைப்புக் காட்டவில்லை.

இதற்கான காரணம் முள்ளியவளை நீராவிப்பிட்டிப் பகுதியில் வார இறுதி நாளில் ஏ-34 வீதியின் இரு பக்கமும் இயங்கி வந்த வாராந்தச் சந்தையே.

உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக உருவாக்கப்பட்ட வாராந்தச் சந்தையில் வெளிமாவட்ட வியாபாரிகளும் வியாபாரத்தில் ஈடுபட்டமையால் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகளில் இயங்கி வந்த நாளாந்தச் சந்தை வியாபாரிகள் நட்டத்தை எதிர்கொள்கின்றனர். வாராந்தச் சந்தை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் இயங்கவேண்டும்.

வெளிமாவட்டங்களில், இருந்து வரும் வர்த்தகர்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அப்போது தான் முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகளில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சந்தைகளை வாடகைக்கு பெற்றுக் கொள்ள முடியும் எனச் சந்தை வியாபாரிகள் தெரிவித்திருந்தனர்.

கடந்த மாதம் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டது.

தைப்பொங்கல் தினத்தை அடுத்து முள்ளியவளை ஐயனார் கோயிலுக்கு அருகில் அமைக்கப்பட்ட வாராந்தச் சந்தைக் கட்டடத்தில் சந்தை இயங்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

முள்ளியவளை, தண்ணீரூற்று பகுதிகளில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத் தொகுதிக்கான கேள்வி கோரப்பட்டதற்கு அமைவாக நேற்று முன்தினம் இரண்டு சந்தைக் கட்டடத் தொகுதிகளும் முழுமையாக வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. வியாபாரிகள் மத்தியில் நிலவி வந்த பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டமைக்கு இணக்க ஒப்பந்தகாரர்கள் சந்தைத் தொகுதியைப் பெற்றுக்கொண்டனர் என கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (த-21,7)

# பனங்கிழங்குக்கு கிராக்கி

யாழ்ப்பாணம், ஜன.7
கடந்த ஆண்டு யாழ். குடாநாட்டில் பனங்கிழங்கு உற்பத்தி குறைந்தளவாகக் காணப்பட்டபோதும் அதற்குக் கிராக்கி அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வியாபார நோக்கத்துக்காகப் பனம் பொருள் உற்பத்தியாளர்கள் பனங்கிழங்கைக் காலம் முந்தி அறுவடை செய்துவருகின்றனர்.

இந்தப் பனங்கிழங்கு ஒன்று நகரில் 10 ருபாவுக்கு மேல் விற்கப்படுகிறது. சுற்றுலாப் பயணிகள் பனங்கிழங்கை அதிக அக்கறையுடன் வாங்கிச் செல்கின்றனர். குறைந்தளவு பனம் பொருள் உற்பத்தியாளர்கள் கடந்த போகத்தில் பனங்கிழங்குச் செய்கையில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நுவரெலியா சீதையம்மன் ஆலயம் தற்போது அனைத்து சீரமைப்புப் பணிகளும் முடிவுற்ற நிலையில் புதுப் பொலிவு பெற்றுள்ளது. இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட சிற்பிகளால் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. (த-ய)

# போக்குவரத்து ஒழுக்க விதி அறிக்கை 9இல் சமர்ப்பிப்பு

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன 7

வாகன போக்குவரத்து ஒழுங்குவிதிகளை மீறுவோர் மீதான தண்டப் பணத்தை 25,000 ரூபா வரை அதிகரிக்கும் தீர்மானம் தொடர்பாக ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழு எதிர்வரும் 9ஆம் திகதி அது தொடர் பான அறிக்கையை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக போக்கு வரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரி வித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

25,000 ரூபா தண்டப் பணம் தொடர்பாக ஆராயவெனக் குழுவொன்று அமைக்கப் பட்டிருந்தது. அந்தக் குழுவினால் தயரிக்கப்பட்ட அறிக்கை 9ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளது. அது அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுப் பின்னர் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார், முச்சக்கர வண் டிச் சங்கங்கள் மற்றும் பஸ் சங்கங்கள் உள்ளிட்ட பிரிவுகளுடன் கலந்துரையாடி வாகனப் போக்குவரத் துச் சட்டத்தில் திருத்தம் மேற் கொள்ளப்படும்–என்றார். (கு)

# மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குவது ஆபத்து

## கூறுகிறார் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

கொழும்பு, ஜன 7

மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது ஆபத்தானது என முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி குணவர்த்தன அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உத்தேச அரசமைப்புச் சட்டத்தின் பரிந்துரைகளுக்கு அமைய தேசிய பொலிஸ் மற்றும் மாகாண பொலிஸ் என இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டால், பொலிஸ் திணைக்களத் தின் ஒட்டுமொத்த நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் தெரிவித்ததாவது:

நெடுந்தீவில் பாடசாலை மாணவி வித்தியா கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரைக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்ய முடிந்தமைக்குப் பிரதான காரணம் பிளவடையாத பொலிஸ் சேவையேயாகும்.

உத்தேச அரசமைப்புப் பரிந்துரைகளுக்கு அமைய இலங்கை பொலிஸ் திணைக்களம் ஒன்பது துண்டுகளாகப் பிளவடையும்.

புதிய நடைமுறை செயற்படுத்தப்பட்டால் பொலிஸ்மா அதிபரினால் மாகாணப் பொலிஸ் விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாத நிலமை ஏற்படும்-என்றார். (கு)

# வடக்கு அரசை எச்சரிக்கின்றது ஹெல உறுமய

## இனவாதச் செயற்பாடுகளை நிறுத்தாவிட்டால் வழக்காம்

கொழும்பு, ஜன 7

வடக்கு மாகாண சபையின் இனவாதச் செயற்பாடுகள் நிறுத்தப்படாவிட்டால் வழக்குத் தொடர நேரிடும் என நல்லாட்சி அரசின் கூட்டணி கட்சியான ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் இணைத் தவிசாளர் ஹெடிகல்லே விமலசார தேரர் இதனைத் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை இனவாத மற்றும் பிரிவினைவாத, பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றி வருகின்றது. இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், மாகாண சபைக்கு எதி ராக நீதிமன்றில் வழக்குத் தொடர நேரிடும்.

வடக்கு மாகாண சபையின் இனவாதச் செயற்பாடுகளைத் தடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வாறு செய்யாவிட்டால் போர் வெற்றியின் பயன்களை நாட்டுக்கு வழங்க முடியாது போகும்.

வடக்கு மாகாணசபை எல்லைக்குள் பௌத்த விகாரைகள் அமைப்பது தொடர்பில் மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் பூர்த்தியாகியுள்ளன.

தெற்கின் கள் வகைகள் வடக்கில் தடை செய்யப்படும் வகையிலான தீர்மானம் பொருளாதாரப் பிரிவினைவாதமாகும்.

இவ்வாறு நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நாட்டில் பண்டங்கள், சேவைகள் பரிமாற்றம் செய்வதில் நெருக்கடி நிலமை ஏற்படும்.

வடக்கு மாகாண சபை தொடாந்தும் இனவாத, கடும்போக்குவாத அடிப்படையில் செயற்பட்டு வருவதை மீளவும் மீளவும் உறுதி செய்து வருகின்றது–என்றார். (கு)

# பொது சோசலிச கட்சி உருவாகும்

கொழும்பு, ஜன 7

நாட்டிலுள்ள அனைத்து சோசலிசக் கட்சிகளைய்யும் ஒன்றிணைக்கும் வகையில், ஒரு பொதுவான சோசலிசக் கூட்டணியொன்றை அமைப்பதற்கு, நடவடிக்கை எடுக்கப்படும் என்று, முன்னிலை சோசலிசக் கட்சி தெரிவித்தது.

இது தொடர்பான திட்டமிடல் குறித்து, எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி, சுகததாச விளையாட்டரங்கில் வைத்து அறிவிக்கப்படும் என்று, குறித்த கட்சியின் பொதுச் செயலாளர் சேனதீர குணதிலக்க தெரிவித்தார்.

> “
> இந்த நாட்டில் கட்டமைப்பு மாற்றமொன்று தேவைப்படு கின்றது. நவ தாராளவாத கொள்கை, சோசலிசக் கட்டமைப்பால் பிரதியீடு செய்யப்படல் வேண்டும்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் கட்டமைப்பு மாற்றமொன்று தேவைப்படுகின்றது. நவ தாராளவாதக் கொள்கை, சோசலிசக் கட்டமைப்பால் பிரதியீடு செய்யப்படல் வேண்டும். இதன் மூலம், அரச நிதிகள் கொள்ளையடிக்கப்படாமல், குரல்களற்ற மக்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் காணப்படல் வேண்டும்.

புதிதாகக் கொண்டுவரப்படும் முன்னணி, அம்பாந்தோட்டை விவகாரத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்குவதோடு, உரிமைகள் அடக்கிஒடுக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் வர்க்கத்துக்குச் சார்பாக அமையும். விவசாயிகளின் பரம்பரைக்கான கட்டாயக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கு இந்தப் புதியக் கட்சி உறுதியளிக்கும். இவை, தற்போதுள்ள ஆட்சியால் கவனத்துக்குக் கொள்ளப் படாதவை- என்றார். (கு)

# எவ்.சி.ஐ.டி. பணிப்பாளரின் இடமாற்றம் பழிவாங்கலல்ல

## பொலிஸ் ஆணைக்குழு உறுதி

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவின் (எவ்.சி.ஐ.டி.) பணிப்பாளரது அண்மைக்கால இடமாற்றத்தின் பின்னணியில் அரசியல் காரணங்கள் எதுவும் இல்லையெனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் ஆரியதாச குரே தெரிவித்தார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப்பிரிவின் பணிப்பாளராக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சீ.ஏ.பிரேமச்சந்திர மொனராகலை மாவட்டத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டமை முற்று முழுதாக உத்தியோகபூர்வமானதே எனவும், அந்த இடமாற்றத்தில் எவ்வித அரசியல் ஊடுருவலும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அதன் பணிப்பாளராக சீ.ஏ.பிரேமச்சந்திர கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# அரசின் சலுகைகள் ஐ.தே.கவுக்கு இல்லை

## அமைச்சர் நவீன் ஆதங்கம்

அரசினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் பயன் மற்றும் சலுகைகள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சாந்தவர்களுக்கு கிடைப்பதில்லை. இது திட்டமிட்ட ரீதியில் செயற்படுத்தப்படுகின்றதா என்று தெரியவில்லை.

இவ்வாறு பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

தலவாக்கலைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் [illegible] வர்களுக்கு தமது சொந்த நிதியில் கற்றல் உபகரணங்களை வழங்கி உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச இயந்திரத்தை இயக்குகின்றபொழுது அதற்குப் பக்கபலமாக பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் [illegible] இருக்கின்றார்கள். [illegible] ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு எந்த விதமான சலுகைகளும் கிடைப்பதில்லை. அது திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றதா என்று எனக்குத் தெரியவில்லை.

எனவேதான் நான் நேரடியாக இந்தத் திட்டங்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் பயனாளிகளுக்குச் சென்றடைய வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தேன்.

எதிர்காலத்திலும் நான் அவ்வாறே எனது திட்டங்களை செயற்படுத்தத் தீர்மானித்துள்ளேன்.

ஐக்கிய தேசியக் கட்சியை கிராமங்களிலும் தோட்டப் பகுதிகளிலும் பலப்படுத்த வேண்டும். அப்படி செய்தால்தான் நாம் வெற்றியை நோக்கிச் செல்ல முடியும். எல்லாப் பகுதிகளிலும் இரண்டாவது தலைமைத்துவத்தை உருவாக்கவேண்டும். இல்லாவிட்டால் எமது கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது – என்றார். (த-ய-43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போர் விமானக் கொள்வனவு; இறுதி முடிவு இன்னுமில்லை

கொழும்பு, ஜன. 7
மிக் மற்றும் கிபிர் போர் விமானங்களுக்குப் பதிலாக, புதிதாக கொள்வனவு செய்யப்படவேண்டிய பலநோக்குப் போர் விமானத்தின் தேவைப்பாடுகள் குறித்த செயல்முறைகள் இன்னமும் இறுதி செய்யப்படவில்லை என்று விமானப்படை தெரிவித்துள்ளது. முன்னதாக, 8 தொடக்கம் 12 புதிய பலநோக்குப் போர் விமானங்களை விமானப் படைக் குக் கொள்வனவு செய்யவுள்ளதாக அரசு அறிவித்திருந்தது.

புதிய போர் விமானங்களையும் அவற்றுக்கான ஆயுதங்களின் தொகுதிகளை யும், விமான உற்பத்தியாளர்களிடம் இருந்து அரசு- அரசு இடையிலான உடன்பாட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையினால் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

விமானத் தேவைப்பாடுகள் இறுதிப்படுத்தப்பட்டுவிட்டால், விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த ஆண்டு இறுதிக்குள் நாடுகளிடம் இருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படும் என்று விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் கிகான் செனிவிரத்ன தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டுகளுக்குப் பொருத்தமானதாக இருக்கும், தற்கால போர் விமானங்களே வாங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (த்)

# புதிய அரசமைப்பை உருவாக்க உகந்த தருணம் இதுவல்ல

### கூறுகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு, ஜன. 7
புதிய அரசியல் அமைப்பு கொண்டு வருவதற்கு இது பொருத்தமான தருணமல்ல என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்த சிறிவர்ண சிங்க தெரிவித்தார்.

கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைச் சுட்டிக் காட்டினார்.

அவர் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்பு ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு உசிதமான தருணம் இது வல்ல. ஜனாதிபதியின் பதவி பெயரளவுப் பதவியாக மாற்றப்படுவதை



ஜாதிக ஹெல உறுமய விரும்பவில்லை.

இப்போது புதிய அரசமைப்புகுறித்தயோசனை முன்வைக்கப்பட்டால் அபிவிருத்தி விசேட நியமச் சட்டத்திற்கு நேர்ந்த கதியே நேரும். மாகாண சபைகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்க முயற்சிக்கப்படுகின்றது.

எனினும் அவ்வாறு வழங்குவது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். அதிகாரம் ஒரு இடத்தில் குவிக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால்தான் பொருளாதார பிரச்சினைகளிலிருந்து மீள முடியும்.

மாகாண சபைகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்படும் யோசனைக்கு நாம் உடன்படவில்லை.

மாகாண ஆளுநர்களின் அதிகாரங்கள் குறைக்கப்படுவதையும் விரும்பவில்லை-என்றார். (த்)

## அரச வேலைக்கெனப் பணம் கொடுத்து ஏமாற வேண்டாம்

### கிழக்கு முதலமைச்சர் கோரிக்கை

மட்டக்களப்பு, ஜன.7
அரச துறைகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியாகப் பணம் பெறுவோரிடம் ஏமாறவேண்டாம் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னு லாப்தீன் நஸீர் அஹமட் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
அண்மைக்காலமாக வேலை வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி பல லட்சம் ரூபா பணம் பெற்றுக் கொண்டு சிலர் ஏமாற்றியுள்ளனர். அவர்களைப் பற்றிய முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் பதிவாகியுள்ளன.

மாகாண அரச நிர்வாகத்தில் பணம் பெற்றுக் கொண்டு எவருக்கும் நியமனம் வழங்கப்படுவதில்லை.

கிழக்கு மாகாணத்தில் அரச தொழில்கள் தகைமை மற்றும் நியதிகளின் அடிப்படையில் வெளிப்படைத் தன்மையுடன் ஒழுங்கு முறையாக மாத்திரமே வழங்கப்படுகின்றன.

கையூட்டல்களை வழங்கி அரச நியமனங்களைப் பெறவோ அல்லது பெற்றுக் கொடுக்கவோ எவரும் காரணமாக இருந்து, அது நிரூபிக்கப்பட்டால் அத்தகைய மோசடிக்கார நபர்கள் கடுமையான சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும்.

தொழில் வாய்ப்புக்காக ஏங்குவோர் எந்த மோசடிக்கார நபரிடமும் பணம் கொடுத்து ஏமாறவேண்டாம். எவராவது, தொழில்வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பணம் கேட்கும்போது அவர்பற்றிய விவரங்களைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (த-ய-46)

## சாவுத் தண்டனை கைதிசெய்தசாதனை

கொழும்பு, ஜன. 7
சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவர் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து இலங்கை வரலாற்றில் சாதனை படைத்துள்ளார்.

இலங்கை வரலாற்றில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் இதுவரை பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் முஹமட் சியாம் படுகொலை வழக்கின் குற்றவாளியான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் கலைமாணி பட்டம் பெற்றுள்ளார்.

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் துணைப் பொலிஸ் பரிசோதகரான பீ.ஏ. லக்மின இந்திக்க பமுனு சிங்க என்பவரே இவ்வாறு பட்டம் பெற்றுள்ளார்.

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டபோது அவர் பல்கலைக் கழகத்தின் முதலாம் ஆண்டு கல்வியைப் பூர்த்தி செய்திருந்தார் என தெரிவிக்கப்பட்டது.

பட்டக்கற்கைநெறியின் எஞ்சிய ஆண்டுகளுக்கான விரிவுரைகளில் பங்கேற்க அனுமதியளிக்குமாறு லக்மின இந்திக்க சிறைச்சாலை அதிகாரிகளிடம் விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன.

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னரும் சுய முயற்சியில் இவ்வாறு பட்டக் கற்கைநெறி ஒன்றைப் பூர்த்தி செய்தமை ஏனைய கைதிகளுக்கும் முன்னுதாரணமாக அமைந்துள்ளது என வெலிக்கடைச் சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பிரபல வழக்கு ஒன்றில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் எவரும் இவ்வாறு இதற்கு முன்னர் பல்கலைக்கழகப் பட்டமொன்றைபெற்றுக்கொண்டதில்லை என அவர் குறிப்பிட்டார்.

ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் லக்மின பட்டம் பெற்றுக் கொண்டார் என சிறைச்சாலை ஆணையாளர் கூறினார். (த்)

## பரீட்சைப் பெறுபேறு நிலையான திகதிகளில்

### அறிமுகம் செய்வதற்கு கல்வி அமைச்சு திட்டம்

கொழும்பு, ஜன. 7
கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரம் ஆகிய பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் நிலையான திகதிகளை அறிவிப்பது குறித்து அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்த திகதியில் வெளியிடப்படும் என்ற ஒரு முறையை அறிமுகம் செய்யக் கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதனால், பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதில் ஏற்படக்கூடிய கால தாமதப் பிரச்சினைகள் தவிர்க்கப்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இரண்டு பிரதான பரீட்சைகளினதும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நிலையான ஒரு தினத்தை அறிவிக்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த திகதியில் பரீட்சைப் பெறுபேறு வெளியிடப்படும் என்ற நியதி காணப்பட்டால் அதனை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் திட்டமிடல்களை மேற்கொள்ள முடியும் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கற்கை நெறிகளை தெரிவு செய்தல், வெளிநாட்டில் கல்வியைத் தொடருதல் போன்றவற்றைத் தீர்மானிக்க மாணவர்களுக் குச் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (த்)

## இரு மணி நேரம் செயற்படாது 119

கொழும்பு, ஜன. 7
பொலிஸ் அவசர அழைப்பு மையத்தின் 119 என்ற தொலைபேசி இலக்கம் நாளை மறுதினம் திங்கட்கிழமை இரண்டு மணித்தியாலங்களுக்குசெயற்படாது என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

குறித்த கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள சீரமைப்பு நடவடிக்கைகளே இதற்குக் காரணம் எனப் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை அதிகாலை 4.00 மணிமுதல் காலை 6.00 மணி வரை இரண்டு மணித்தியாலங்கள் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த்)

## தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திக்கு ரூ.750 மில்லியன்

கொழும்பு, ஜன. 7
தென்கிழக்குப் பல்கலைக் கழகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் எம்.எம்.நாஜிம் தெரிவித்தார்.

இதன் மூலம் பல்கலைக்கழக உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (த்)

# முறையற்ற கொள்கையால் கிழக்கு அதிபர்கள் பாதிப்பு

திருமலை, ஜன.7
கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் முறையான அதிபர் இடமாற்றக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படாததால் சில அதிபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பொதுநல அமைப்புக்கள் சில இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளன.

சில அதிபர்கள் அடிக்கடி இடமாற்றப்படும் அதேவேளை, சிலர் மிக நீண்டகாலமாகத் தங்களுக்கு வசதியான பாடசாலைகளில் கடமை புரிய அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த முறைப்பாட்டில் சுட்டிக் காட்டப்பட்டுள் ளது.

கிண்ணியா கல்வி வலயத்தில் ஒரு அதிபர் ஒரே பாடசாலையில் தொடர்ந்து 22 வருடங்கள் கடமை புரிந்து வருகின்றபோதிலும் கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் இந்த விடயத்தைக் கண்டுகொள்ள வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, முறையான அதிபர் இடமாற்றக் கொள்கை கிழக்கு மாகாணத்தில் செயற்படுத்தப் படுவதை உறுதிப்படுத்துமாறு ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-ய-45)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## கீரை விற்றபோது தாக்கப்பட்ட மாணவிக்கு மேலும் உதவிகள்

### சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் வழங்குகிறது

சாவகச்சேரி ஜன. 7
சாவகச்சேரி பொதுச் சந்தையில் பெண் கீரை வியாபாரியினால் தாக்கப்பட்ட மாணவியின் குடும்பத்தைச் சேர்ந்த இரு மாணவர்களின் கல்வியை மேம்படுத்தச் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் மன்றத்தின் மாதாந்த மாணவர் கல்வி வளர்ச்சி நிதியத்திலிருந்து நிதிஉதவிவழங்கவுள்ளனர்.
மன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் சங்கரப் பிள்ளை நமசிவாயத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள் நேற்று முன் தினம் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற போது இந்தக் குடும்பத்தின் கல்வி கற்கும் இரு மாணவிகளுக்கு மாதாந்த கல்வி வளர்ச்சி நிதியின் ஜனவரி மாத நிதியை மன்றத் தலைவர் நமசிவாயம் சிவபாலன் மாணவியின் தாயாரிடம் கையளித்தார்.
இந்த நிதி மாதாந்தம் இருவருக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் பல்கலைக்கழகக் கல்வி முடியும் வரை வழங்கப்படவுள்ளதென மன்றத்தின் உப தலைவர் வ. ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.
மாணவிகளில் ஒருவர் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கிறார் எனவும், மற்றவர் தரம் 10 வகுப்பில் கல்வி கற்றுவருகிறார் எனவும் அவர் கூறினார்.
மன்ற அங்கத்தவர்கள் தென்மராட்சிப்பிரதேசத்தில்வறுமை நிலையிலும் கல்வியில் ஊக்கம் செலுத்தும் மாணவர்களுக்கு மாதாந்தம் மன்றத்தினூடாக நிதி வழங்கி வருகின்றனர். மாதாந்தம் 36 மாணவர்கள் இந்த நிதியைப் பெறுகின்றனர்.
அத்துடன் மன்றத்தில் வைப்பிலிடப்பட்டுள்ள பல்வேறு புலமைப் பரிசில் நிதியங்களிலிருந்து 118 மாணவர்கள் வருடாந்தம் கல்வி வளர்ச்சி நிதி பெற்று வருகின்றனர்.
இந்த நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் தீவக லயன்ஸ் கழகமும் மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்குக் கற்றல் உபகரணங்களையும் சிறு தொகை நிதியையும் வழங்கின. (த-9)

## கடுமையான நிதி நெருக்கடியில் தெல்லிப்பழை வைத்தியசாலை

### பரோபகாரிகளை உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 7
தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும் நாளாந்த பராமரிப்புப் பணிகளுக்குக் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. சிறிய உட்கட்டுமான வேலைகளுக்கு பொதுநலன் கருதி தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை, தனிநபர்களை வைத்தியசாலையுடன் கைகோர்க்குமாறு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கத் தலைவர் மருத்துவர் யோ.திவாகர் வேண்டுகோள் விடுத்தார்.
இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையானது யாழ். மாவட்டத்தில் இரண்டாவது பெரிய வைத்தியசாலையாகவுள்ளது. வடக்கு மாகாணத்தில் பொதுவான அதி சிறப்புச் சிகிச்சை அலகுகளான புற்றுநோய்ப் பிரிவு மற்றும் உளநலப் பிரிவு என்பவற்றின் ஊடாக சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது.
மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்ட வைத்தியசாலை என்பதால் சிறந்த சேவையை ஆற்றுவதற்கு நிதி போதுமானதாக இல்லை. சிறிய உட்கட்டுமான அபிவிருத்திகள், விடுதி மற்றும் தளபாடங்களுக்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகளுக்காகப் பொது நலன் சார்ந்து செயற்படும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் உதவியை எதிர்பார்த்துள்ளோம்.
நோயாளர்கள், பொது மக்களின் சுகாதார மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு எம்முடன் இணைந்து பணியாற்ற விரும்புவோர் வைத்தியசாலை நிர்வாகத்துடன் 021205 9227, 0779562742 என்ற தொலைபேசி இலங்கங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளமுடியும் என்றுள்ளது. (த-5-10)

## நல்லிணக்க வாரம் நாளை ஆரம்பம்

### தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், ஜன. 7
தேசிய ஒருங்கிணைப்பு மற்றும்நல்லிணக்கவாரம்நாளை ஆரம்பமாகவுள்ளதாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.
இதுதொடர்பில்அனுப்பிவைத்துள்ளசெய்திக்குறிப்பில்தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
நாளை தொடக்கம் 14 ஆம் திகதி வரையான காலம் ஒவ்வொரு வருடமும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தத் திகதிகள் ஜனாதிபதி மைத்திரிபால பதவியேற்ற காலத்தின் அடிப்படையில் அமைகின்றன.
இந்தக் காலப் பகுதியில் இன, மத, கலாசார, பிராந்திய ரீதியாக வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வையும் நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் ஏற்படுத்துவதற்கு பல்வேறுபட்ட விழிப்புணர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி 'வேற்றுமையில் ஒற்றுமையை' ஏற்படுத்துவதாகும்.
தேசிய வாரத்தினுள் நாடு முழுவதுமுள்ள அனைத்து பாடசாலைகளிலும் தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை பாடசாலைகளின் காலைக் கூட்டங்களிலும்வகுப்பறைகளிலும்மாணவர்களினால் தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக உரையாற்றுதல்.
தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக மும்மொழிகளிலும் அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் மக்களுக்கு உணர்வுபூர்வமான நிகழ்ச்சித் திட்டங்களையும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப் படுத்துதல்.
தத்தமது ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்பின் ஓர் அங்கமாக தகுந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்படி தனியார் மற்றும் கூட்டிணைந்த நிறுவனங்களை ஊக்குவித்தல்.
அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளல், கற்றுக் கொள்ளல் மற்றும் கலாசார பல்வகைமைகளைப் புரிந்து கொள்ளல் ஆகியவைதொடர்பாக வடக்கு-தெற்கு உரையாடல்களையும் கிராமங்களுக்கிடையிலான பரஸ்பர பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்துதல்.
தேசிய ஒருமைப்பாடு தொடர்பான கண்காட்சிகளை நடத்துவதற்கு ஊக்கமளித்தல் மற்றும் கட்டுரை, சித்திரம், கார்ட்டூன், கவிதை மற்றும் சிறுகதைப் போட்டிகளை நடத்தல். அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தி அவர்களை தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செய்திகளையும் முக்கியத்துவத்தையும் பரப்புரை செய்யும் மற்றும் 'மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாக' மாற்றுதல் போன்ற வேலைத் திட்டங்கள் இந்த வாரத்தினுள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார். (த-5)

## ஹெரோயின் வைத்திருந்த பெண் உட்பட இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 7
மன்னாரில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை மற்றும் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட இருவரைக் கடந்த புதன்கிழமை கைது செய்ததாக மன்னார் மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி தலைமைப் பரிசோதகர் எஸ்.ரஞ்சன் தெரிவித்தார்.
மன்னார் மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து அவர்கள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மன்னார் மூர் வீதி மற்றும் உப்புக்குளம் பகுதியில் வைத்து இரு நபர்களையும் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட பெண்ணிடம் 110 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், மற்றைய நபரிடம் 60 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை மதுவரித் திணைக்களத்தினர் முன்னெடுத்து வருகின்றனர். (த-5-56)

## நலன்புரி முகாமில் வசிக்கும் மக்களை வெளியேற்றவில்லை

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

நலன்புரிமுகாம்களில்உள்ள மக்களை வெளியேற வேண்டும் என எவ்வித அறிவித்தல்களும் வழங்கப்படவில்லை என யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது நலன்புரி முகாம் மக்களை வெளியேறுமாறு அறிவுறுத்தப்படுவதாக ஊடகவியலாளர்கள் மாவட்டச் செயலரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நலன்புரி முகாம்களில் வசித்து வரும் மக்களை எழும்புமாறு எந்த ஒரு அதிகாரிகளும் அறிவுறுத்தவில்லை. எனவே இந்தத் தகவல் பொய்யானது.
நலன்புரி முகாம்களில் உள்ள மக்கள் அவர்களின் பிரதேசங்களில் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் நிரந்தரமான காணிகள் இல்லாத மக்களுக்கு அரச செலவில் காணி கொள்வனவு செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை இடம்பெறுகின்றது.
அதன் ஒரு பகுதியாகவே கீரிமலைப் பகுதியில் நிரந்தரக் காணிகள் இல்லாதவர்களுக்குச் சிமெந்துத் தொழிற்சாலையின் காணியில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டன.
அதனைப் போன்றே தற்போதும் நலன்புரி முகாம்களில்வாழ்ந்துவரும்மக்களில் நிரந்தர காணி இல்லாதவர்களுக்குத்தீர்வுவழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.
நிரந்தர காணிகள் இல்லாதவர்கள் காணிகளைக் கொள்வனவு செய்யும்போது நான்கு இலட்சம் ரூபா வரை வழங்கப்படும். எனினும் குறித்த பணத்தொகை பொதுமக்களிடம் நேரடியாக வழங்கப்படாது. காணிகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பான விடயங்களை எங்களிடம் தெரிவிக்கும் போது நாங்களே நேரடியாகக் கொள்வனவு செய்து பொதுமக்களுக்கு வழங்குவோம்–என்றார். (த-8)

## யாழ். பல்கலைக்கழகத்துக்கு மேலும் பல கட்டட வசதிகள்

யாழ்ப்பாணம், ஜன. 7
யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுச் செயற்பாடுகளுக்கான உடற்பயிற்சிக் கூடக் கட்டடம் மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கான மருத்துவத்துறைக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன எனப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.
நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
பல்கலைக்கழகத்துக்கான விளையாட்டுச் செயற்பாடுகளுக்காக உடற்பயிற்சிக் கூட வேலைகள் இந்த மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கான மருத்துவத் துறையின் கட்டட நிர்மாண வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. வவுனியாவில் பிரயோக விஞ்ஞானபீடக் கட்டட நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
இந்திய அரசின் உதவியால் பொறியியல் பீடத்திற்கும் மற்றும் விவசாய பீடத்திற்குமான கட்டட நிர்மாணிப்பு வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன.
ஜப்பானிய அரசின் ஜெய்க்காவின் உதவி மூலம் இலங்கை மதிப்பில் 2410 மில்லியன் ரூபா பெறுமதி கொண்ட பெரிய அளவிலான காணி ஒன்று எமக்குக் கிடைத்துள்ளது. இது விவசாய பீடத்துக்காக வழங்கப்பட்டுள்ளது–என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதி சென்ற 12 பேர் மாயம்

கொழும்பு, ஜன. 7
சவூதி அரேபியாவுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் சென்று காணாமல்போயுள்ள 12 பேரின் பெயர் விவரங்கள்வெளியிடப்பட்டுள்ளன. இவர்களில் 10 பேர் பெண்கள். குறித்த 12 பேரின் உறவினர்கள் மற்றும் பெற்றோரிடம் இருந்து கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்து தூதரக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இவர்கள் காணாமற் போயுள்ள விவகாரம் தெரியவந்துள்ளது.

எனினும் காணாமற் போயுள்ளவர்கள்சிலவேளைஉறவினர்களுக்குத் தெரியப்படுத்தாமல் சவூதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பியிருக்கலாம் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு சந்தேகம் வெளியிட்டுள்ளது. (த)

# உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க இடமளியோம்

## வாசுதேவ நாணயக்கார கொந்தளிப்பு



கொழும்பு, ஜன. 7
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களைத் தொடர்ந்தும் ஒத்திவைக்க இடமளிக்கமுடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பல்வேறு தந்திரங்களைச் செய்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்தி வைக்க அரசுக்குத் தேவை ஏற்பட்டுள்ளது. எனினும் இவ்வாறு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு இடமளிக்க முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைக்கும் அவசியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கே உண்டு. தமிழ் மற்றும் முஸ்லிம் சிறிய அரசியல் கட்சிகள் புதிய தேர்தல் முறைக்கு எதிர்ப்பு வெளியிடக் கூடும் என்பதால், அதனைக் காரணம் காட்டிப் பிரதமர் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கின்றார்.

தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டால் மக்கள் கிளர்ச்சி ஏற்படும். வாக்குரிமைக்காக மேற்கொள்ளும் போராட்டங்களை அடக்கி விட முடியாது.

இவ்வாறு தேர்தலை ஒத்திவைத்தால், அரசுக்கு உதவி வரும் உள்நாட்டு வெளிநாட்டுச் சிவில் அமைப்புக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலை ஏற்படும்.

மக்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டால் அது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை வரை செல்லக் கூடும்–என்றார். (த)

# நாடாளுமன்றின் அனுமதியின்றி கைச்சாத்தாகாது எட்கா ஒப்பந்தம்

## கூறுகிறார் அமைச்சர் மனோ

கொழும்பு, ஜன. 7
நாடாளுமன்றின் அனுமதியின்றி எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாது என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றின் ஏகமனதான அனுமதியுடனும், நாட்டு மக்களிடம் கலந்துரையாடியதன் பின்னரே எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்.

நாம் அரசு என்ற ரீதியில் மக்களுக்கு எதனையும் மூடி மறைத்து விட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்போவதில்லை.


எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதனால் எமது நாடே அதிகளவில் நன்மை அடைகின்றது.

உத்தேச ஒப்பந்தத்தின் மூலம் இந்தியச்சந்தைகளில் பிரவேசிக்க எமக்குச் சந்தர்ப்பம் கிட்டும்.சரியான விவரங்களைப் புரிந்து கொள்ளாது சில தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இந்தியர்கள் இலங்கையில் தொழில்களில் ஈடுபடப் போவதில்லை, நாமே இந்தியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொள்ள உள்ளோம்.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியாவுக்குக் கூடுதல் நன்மை கிடைக்கும் என்றால் அதற்காக முதலில் எதிர்ப்புக் குரலை வெளியிடுவது நானாகத்தான் இருக்கும்.

புத்த பெருமான் முதல் விஜயன் வரை பெரும் எண்ணிக்கையானவர்கள் இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்தார்கள். இந்திய உதவியுடன் ஆரம் பிக்கப்பட்ட நோயாளர் காவுவண்டி தொடர்பிலும் பொய்ப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தற்போது அனைத்தும் பொய்ப்பிக்கப்பட்டுள்ளன– என்றார். (த)



# மூதூர் கிழக்கில் இரண்டு மலைகள் அழியும் அபாயம்

## தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதிக்கு துரைரெட்ணசிங்கம் எம்.பி. மனு

மூதூர், ஜன.7
திருகோணமலைமாவட்டத்தில் மூதூர் கிழக்கு கட்டைப்பறிச்சான் பகுதியில் குறவன் வெட்டுவான்மலை மற்றும் சுவாமிமலை ஆகியன படிப்படியாக அழிக்கப்பட்டு வருவதாகவும், இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரியும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரை ரெட்ணசிங்கம் ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூதூர் கிழக்கிலுள்ள கட்டைப்பறிச்சான் கிராமசேவகர் பகுதியில்இயற்கைஅரணாக உள்ள மலைகளை உடைத்து கற் சுரங்கமாக்குவதுடன், பெரிய அளவில் கிரவல் மண் தொடர்ச்சியாக அகழப்பட்டு வருகின்றது.

அத்துடன் சேர்ந்து காடுகளும் அழிக்கப்படுவதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இங்குள்ள சமூக அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பாதிப் புக்குள்ளான பொதுமக்களிடமிருந்து மாவட்டச் செயலாளருக்கும் எனக்கும் பல முறைப்பாடுகள் வந்துள்ளன.

அற்புதமான குறவன் வெட்டுவான்மலை பாதி அகற்றப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

சுவாமி மலையானது பெயருக்கேற்ப ஆன்மிக சக்தி செறிந்ததாக கருதப்பட்டுக் காலங்காலமாக மக்கள் வழிபட்ட இயற்கை அதிசயமாகும். இதனைக் கற்சுரங்கமாக்கிக் காலவரையின்றி பெரிய பொறிகளைப் பாவித்து உடைக்க அரசினால் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

வெகுவிரைவில் இந்த மலை முற்றாக அழிக்கப்பட்டு சமதரையாகிவிடும். இந்த மலைகளை அண்டிய பகுதிகளில் ஏறக்குறைய 100 குடும்பங்கள் குடிசைகள் அமைத்து வாழ்கின்றனர். எவ்வித முன்னறிவிப்போ அல்லது நேர அட்டவணையோ இன்றி மலைகள் வெடிவைத்துத் தகர்க்கப்படுவதால் நில அதிர்வு ஏற்பட்டு கற்கள் பல திசைகளில் வேகமாக விசிறப்படுகின்றன.

இதனால் அங்கு வாழும் வறிய மக்கள் மிகுந்த பயத்துடனும் கவலையுடனும் காலம் கழிக்கின்றனர்.வெடிப்பினால்உருவாகும் கற்தூசிக் கூட்டம்படிய ஏறக்குறைய 2மணித்தியாலம் எடுக்கின்றது.

மற்றுமொரு சுற்றாடல் மாசுறும் செயற்பாடான கிரவல்மண் அகழ்வு பெரிய குழிகள் தோண்டப்பட்டு பெரும் இயந்திரப் பொறிகளைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

இதன் விளைவாக 30–40 அடி ஆழமான குழிகள் உருவாக்கப்பட்டு அவற்றில் ஏறக்குறைய 20 அடி ஆழம் வரை நீர் தேங்கிக் காணப்படுகின்றது.

இந்த பயங்கரமான குழிகள் இப்பகுதி மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தவல்லவை. அண்மையில் இந்தக் குழியொன்றில் தவறுதலாக ஒழு குழந்தை விழுந்து சாவடைந்துள்ளது.

எனவே, தாங்கள் இந்த விடயத்தில் அவசரமாகத் தலையீடு செய்து உரிய தடுப்பு முறைமைகளை மேற்கொண்டு ஆபத்திலிருந்து இப்பகுதி இயற்கையையும் மக்களையும் காப்பாற்ற வேண்டும் – என்றுள்ளது. (த-ய-40)

# போதைக்கு அடிமையானோர் பொதுமன்னிப்புப் பெற வசதி

கொழும்பு, ஜன. 7
போதைக்கு அடிமையாகியுள்ள நபர்கள் தமது விருப்பத்தின் அடிப்படையில் புனர்வாழ்வு பெற்றுக்கொள்வதற்காக, பொது மன்னிப்புக் காலத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக போதை நிவாரணச் செயலணி தெரிவித்துள்ளது.

இந்தக் காலத்தில் பொது மன்னிப்பு பெறாத போதைக்கு அடிமையானவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

2020ஆண்டளவில் போதையற்ற நாடாக இலங்கையை உருவாக்கும் ஜனாதிபதியின் சிந்தனையின்கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போதைக்கு அடிமையான 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு இந்த வருடத்துக்குள் புனர்வாழ்வளிக்கத் தயாராக உள்ளதாக அந்த செயலணி தெரிவித்துள்ளது.

மேலும், 50 ஆயிரம் பேர் போதைக்கு அடிமையாகியுள்ளதாக பாதுகாப்புதரப்பு உறுதிப்படுத்தியுள்ளதுடன் இவர்களுக்கு 2020 ஆண்டுக்குள் புனர்வாழ் வளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த)

# சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய மூவர் கைது

திருமலை, ஜன. 7
கிண்ணியாப் பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறப்படும் 3 இளைஞர்களை நேற்று முன் தினம் அதிகாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதில் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர் எனவும் கிண்ணியா பொலிஸார் கூறினர்.

இவர்களிடம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (த)


# அதியுயர் தொழில்நுட்பத்துடன் அம்பேவலவில் பால் பண்ணை

கொழும்பு, ஜன. 7
இலங்கையில் அதிநவீன தொழில்நுட்பத்துடனான பால் பண்ணை அமைக்கப்படவுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை அம்பேவலவில் அமைப்பதற்குச் சுவிற்சர்லாந்து முதலீட்டாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இதற்காக 90 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2014ஆம் ஆண்டு இந்த முதலீடு குறித்து திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் அதனைச் செயற்படுத்த முடியாமல் போனதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது அம்பேவலவில் 200 ஏக்கர் நிலம் இதற்காக இனம் காணப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் உரிய முறையில் செயற்படுத்தப்படால், பிரதேசவாசிகள் பெரும் நன்மை பெறுவர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கையின் மிகப்பெரிய ரயர் உற்பத்தி தொழிற்சாலை ஹொரனையில் அமையவுள்ளது

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கல் நட்டார்*

11.25 பில்லியன் ரூபா தொகை மதிப்பீடான முதலீட்டுடன் இலங்கையின் மிகப்பெரிய ரயர் உற்பத்தி தொழிற்சாலை ஹொரணையில் அமையப்பெறவுள்ளது.
அந்தவகையிலே இந்தத் தொழிற்சாலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஹொரனை வகவத்தவில் அமைந்துள்ள முதலீட்டு சபை தொழிற்பேட்டையில் இடம்பெற்றுள்ளது.
பிரபல வர்த்தகரான நந்தன லொகுவிதான மேற்படி ரயர் உற்பத்தி தொழிற்சாலையின் உரிமையாளர் என தெரிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கருத்துரைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,
"அம்பாந்தோட்டை துறைமுகத்தினூடாக உரிய பயனுறுதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையே அரசுக்கு உள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் மூன்று அல்லது நான்கு உடன்படிக்கைகளை கைச்சாத்திடவுள்ளோம். அதனைத் தொடர்ந்து அனைத்து உடன்படிக்கைகளையும் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்"- என்றார்.

அபிவிருத்தி

# மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

"நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மற்றும் உலக பொருளாதார நிலமைகள் காரணமாக வளர்ச்சிவீதத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம்."

**2017 ஆம் ஆண்டு**

- ★ நாணயமாற்றுக் கொள்கைச் சட்டம் உள்ளிட்ட மூன்று சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளன.
- ★ 5.5 முதல் 6 சதவீதமான பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டுள்ளது.
- ★ நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை மற்றும் உலக பொருளாதார நிலமைகள் காரணமாக வளர்ச்சிவீதத்தில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படலாம்.

**2016 ஆம் ஆண்டு**

மேல்நோக்கிய அழுத்தங்கள் காணப்பட்டபோதும் பணவீக்கம் தொடர்ந்தும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது.

வணிகம்

### நிரந்தர பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில்

**மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவிப்பு**

மத்திய வங்கியை மீளமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம் நடப்பாண்டில் நிரந்தர பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைத் திட்டங்கள் தயார் நிலையில் உள்ளதான தகவல் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
2017ஆம் ஆண்டுக்கான நாணய மாற்றம் மற்றும் நிதியியல் துறைக்குரித்தான கொள்கைகள் உள்ளடங் கியதான 2017 வழிகாட்டல் திட்டத்தை வெளியிட்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
மேலும் அவர் கருத்துரைக்கையில்,
"கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை உள்ளடக்கிய நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவொன்று மீண்டும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
2017 ஆம் ஆண்டு பன்னாட்டு மற்றும் உள்ளூர் முதலீடுகளை மேற்கொள்ளவும் அவற்றை ஊக்குவிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான முன்னாயத்த நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.
நாட்டில் ஏற்பட்ட வறட்சியான காலநிலை காரணமாக பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் பங்களிப்பு என்பது மிகவும் குறைவாக காணப்படுகிறது.மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.
அந்தவகையிலே இந்த வருடத்தில் நாம் பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்தில் தொடர்ந்தும் பேண எதிர்பார்த்துள்ளோம்"- என்றார்.

**"2016ஆம் ஆண்டு 2 இலட்சத்து 70 ஆயிரத்துக்கும் அதிகமான சீன சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளதாக சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது."**



## சீனச் சுற்றுலாப் பயணிகளின் இலங்கை வருகை அதிகரிப்பு

"2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 2016 ஆம் ஆண்டில் சீனாவில் இருந்தான சுற்றுலா பயணிகளின் வருகையானது 26.4 வீதத்தால் அதிகரித் துள்ளதான தகவலும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது"
எதிர்வரும் மூன்றாண்டுகளை அரசு சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ள சந்தர்ப்பத்தில் இலங்கைக்கான சீனச்சுற்றுலாப் பயணிகளின் உள்வருகை அதிகரித்துள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் 2 லட்சத்து 14 ஆயிரத்து 783 சீன சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளதாகவும் 2016ஆம் ஆண்டில் 2 லட்த்து 71 ஆயிரத்து 577 சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாகவும் சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

| 2015 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை - | 2016 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை - | 2015,2016 ஆம் ஆண்டு ஒப்பீடு |
|---|---|---|
| 214,783 | 271,577 | 26.4 வீதம் |

நுட்பம்



## மைக்புக்கை கட்டுப்படுத்தும் வசதி அறிமுகம்

அப்பிள் மைக்புக் வைத்திருக்கும் பயனாளர்கள் அதன் செயற்பாடுகளை ஐபோனில் அறிமுகம் பெற்றுள்ள புதிய செயலி மூலம் கட்டுபடுத்த முடிவதாக சொல்லப்படுகிறது.
இதன்படி ஐபோன் அல்லது ஐபாட் இணைப்பயன்படுத்தி வயர்லெஸ் றிமோட் கண்ட் ரோலர் மூலமாக மைக்புக்கை கட்டுப்படுத்தும் வசதி அறிமுகம் பெற்றுள்ளது. இந்த மைக் கருவியில் ஐபோன் அல்லது ஐபாட் பயன்படுத்தி ஒரு வயர்லெஸ் ரிமோட் கண்ட்ரோலரை அமைக்கவென அப் ஸ்ரோரில் ரிமூட் மவுஸ் என்ற செயலி காணப்படுகின்றது.

**செயன்முறை**

முதலில் ஐபோனில் ரிமூட் மவுஸ் என்ற செயன்முறைச் செயலியை தரவேற்றம் செய்து கொள்ள வேண்டும். இவை தவிர் இந்த பயன்பாட்டின் மைக் வகைப்பாட்டினையும் மேக்புக்கில் பதிவிறக்கம் செயற்படுத்திக் கொள்ளவேண்டும். பின்பு ஐபோனில் ரிமூட் மவுஸ் என்ற செயலியை திறந்து கொண்டு ஐபோன் மற்றும் மைக் ஆகிய இரண்டையும் இணைத்துக்கொள்ள இரண்டையும் ஆரம்பித்தல் என்ற செயலியை செயல்நிலைக்கு கொண்டு வரவேண்டும். இவை தானாக இணைப்புப் பெறுவதில் பிரச்சினைகள் ஏற்பட்டால் ஐ.பி தேடல் செயலியை செயற்படசெய்து மைக் புக்கின் ஐ.பி முகவரியை உள்ளீடு செய்வதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மியன்மாரில் சிறுபான்மையாக உள்ள றொகின்கயா இஸ்லாமிய இனத்தவர்கள் அந்த நாட்டு அரசினால் துன்புறுத்தப்படுகின்றனர் என்று பரவலாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. தமக்கெதிரான துன்புறுத்தலைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மியன்மாரை விட்டு வெளியேறியபோது சேற்றில் புதையுண்டு சாவடைந்த 16 மாதக் குழந்தையின் ஒளிப்படம் உலகின் மனச்சாட்சியை அசைக்க ஆரம்பித்துள்ளது. இந்தப் படம் ஐரோப்பாவை நோக்கி அகதியாகச் சென்று உயிரிழந்த அய்லன் என்ற சிறுவனின் ஒளிப்படத்துடன் ஒப்பிடப்படுகிறது. (ம-எ)

# திட்டமிட்டபடி அரசியலுக்கு வருவேன் 'ஜெ' அண்ணன் மகள் தீபா கருத்து

சென்னை, ஜன. 7

''என் அரசியல் பயணத்தை எவரும் தடுக்க இயலாது. திட்டமிட்டபடி திட்டமிட்ட நேரத்தில் அரசியலுக்கு வருவேன்." இவ்வாறு தெரிவித்தார் ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா.



அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமாக இருந்த ஜெயலலிதா கடந்த மாதம் உயிரிழந்தார். அவரது சாவை அடுத்து முதலமைச்சராக பன்னீர் செல்வம் செயற்பட்டு வருகிறார். பொதுச்செயலாளராக ஜெயாவின் நண்பியான சசிகலா பொறுப்பேற்றுள்ளார். ஆனால் சசிகலாவின் தலைமையை அ.தி.மு. கழகத் தொண்டர்கள் சிலர் ஏற்கவில்லை.

அவ்வாறு எதிர்க்கருத்தை உடையவர்கள் தீபாவை அரசியலுக்கு வரும்படி அவரது வீட்டுக்கு முன்பாகத் திரண்டு கோசமிட்டு வருகின்றனர். தனது அரசியல் வாழ்வு தொடர்பில் இன்னும் இரு வாரங்களில் தெரிவிப்பேன் என்று தீபா கடந்த திங்கட்கிழமை தெரிவித்திருந்தார். இந்த நிலையில், தான் திட்டமிட்டபடி அரசியலுக்கு வருவேன் என்று நேற்று முன்தினம் தீபா வெளிப்படுத்தினார். அ.தி.மு. கழகத்தைக் கைப்பற்றுவதா அல்லது புதிய கட்சியை ஆரம்பிப்பதா என்று பின்னர் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-எ)



# நெத்தன்யாகுவிடம் இரண்டாம்கட்ட விசாரணைகள்

ஜெருசலேம், ஜன. 7

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு நேற்றுமுன்தினம் இரண்டாம் கட்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

ஜெர்மனியிடமிருந்து நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்கியதில் ஊழல் செய்து பண ஆதாயம் அடைந்தார் என்றும் தொழிலதிபர்களிடம் இருந்து நன்கொடையாக ஏராளமான தொகைப் பணத்தையும் பெறுமதி வாய்ந்த பொருள்களையும் பெற்றார் என்றும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கின் விசாரணை தற்போது நடைபெற்று வருகிறது. ஆனால் தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நெத்தன்யாகு மறுத்து வந்தார். இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் கட்டமாக அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். நேற்றுமுன்தினம் அவரிடம் இரண்டாம் கட்ட விசாரணைகள் நடத்தப்பட்டன. தன்மீதான குற்றச்சாட்டுக்களை நெத்தன்யாகு நேற்று முன்தினமும் மறுத்தார். (ம-எ)

# அமெரிக்கா–கியூபா இடையே வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து

## தீர்ந்தது தீராப் பகை

ஹவானா, ஜன. 7

உலகின் பரம வைரி நாடுகளில் ஒன்றான அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்தானது.

அமெரிக்காவின் ஆதரவுடன் கியூபாவில் இடம்பெற்று வந்த ஆட்சியை 1959ஆம்ஆண்டுபிடெல் காஸ்ட்ரோ தலைமையிலான கம்யூனிஸ்ட் புரட்சிப்படை தூக்கியெறிந்தது. பின்னர் இருநாடுகளுக்கும் இடையில் தீராப்பகை நிலவிவந்தது. அமெரிக்க அதிபர் ஒபாமாவும், கியூபாவின் தற்போதைய அதிபர் ரவுல் காஸ்ரோவும் செய்த தொடர் முயற்சியால் இரு நாடுகளுக்கிடையே உள்ள உறவில் சமரசம் ஏற்பட்டது. இந்த நிலையில்கிட்டத்தட்ட 55ஆண்டுகளுக்குப் பின்னர் கியூபாவில் இருந்து அமெரிக்காவுக்குகாய்கறிகளின் படிமங்களால் உருவாக்கப்படும் மரக்கரியை ஏற்றுமதி செய்ய இரு நாடுகளுக்கிடையே வணிக ரீதியிலானஒப்பந்தம்கையொப்பமாகியுள்ளது. ஒருதொன் மரக்கரி 420 அமெரிக்க டொலர் என்றவிலையில், முதல் கட்டமாக 40 தொன் மரக்கரி ஏற்றுமதி செய்யப்பட உள்ளது.

இந்த ஒப்பந்தம் கியூபா - அமெரிக்கா உறவில் புதிய பாலமாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

ஆண்டுக்கு 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் தொன் மரக்கரியை ஐரோப்பிய நாடுகளுக்கு கியூபா ஏற்றுமதி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# உடலுறுப்ப
# பிரான்ஸில்

பரிஸ், ஜன. 7

உடலுறுப்புக்களைத் தானமாக வழங்குதல் பிரான்ஸில் கட்டாயமாக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், ஒருவர் இறந்த பின்னர் உடல் நலத்துடன் கூடிய தகுதியான உடல் உறுப்புகள் அகற்றப்பட்டு தேவைப்படுவோருக்கு பொருத்தப்படும். அதற்கு தற்போதே ஆவணத்தில் கையெழுத்திட்டு உறுதிப்படுத்த வேண்டும். இல்லா




விட்டால் அதற்கான காரணத்தை விளக்க வேண்டும். இது தொடர்பான புதிய சட்டம் பிரான்ஸில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு இதுவரை 1



# 6 கோடிக்கு

டோக்கியோ, ஜன.7

ஜப்பானில் சூரை இனத்தைச் சேர்ந்த மீன் ஒன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 6 கோடிக்கு விலை போனது.

உலகின் மிகப் பெரிய மீன் சந்தைகளில் ஒன்றான சுகிஜியில் இந்த

# ஓ.பி.எஸ்ஸுக்குப் பின்னால் சில

## சுட்டுகிறார் தி.மு.க செயல் தலைவர் ஸ்ராலின்

சென்னை, ஜன. 7

விவசாயிகள் தொடர்பில் தி.மு. கழகம் கொடுத்துள்ள கோரிக்கைகளை முதலமைச்சர் பன்னீர்செல்வம் ஏற்றுக்கொண்டாலும் அதை நடைமுறைப்படுத்துவதில் அவர் எதோ நெருக்கடியில் உள்ளார். இவ்வாறு தெரிவித்தார் தி.மு. கழகத்தின் செயல் தலைவரான மு.க.ஸ்ராலின்.

தமிழ்நாட்டு முதலமைச்சா் பன்னீர் செல்வத்துக்கும், தி.மு. கழகத்தின் செயல் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்ராலினுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் திடீரென இடம்பெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பான அறிக்கையை ஸ்ராலின் நேற்று வெளியிட்டார். அதிலேயே இவ்வாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

புத்தாண்டு பிறந்தாலும், தமிழக விவசாயிகளுக்கு இன்னும் விடிவு காலம் ஏற்படவில்லை. கருகிய பயிர்களைக் கண்ட அதிர்ச்சியில் ஏற்பட்ட சாவுகளும், தரிசாகிப்போன நிலங்களைப் பார்த்து நிகழும் தற்கொலைகளும் இன்னும் தொடர்கின்றன. இதுவரை உயிரிழந்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை நூறைத் தாண்டிவிட்டது. வேதனைத் தீயில் விவசாயிகளை தள்ளிவிட்ட சாதனையைத் தான் மாநிலத்தை ஆட்சி செய்து வரும் அ.தி.மு.க. செய்து காட்டியிருக்கிறது என்று விவசாயப் பெருமக்கள் குருதிக் கண்ணீர் வடிக்கின்றனர். தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்து தீர்மானம் நிறைவேற்ற மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். தமிழக சட்டமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்என அவரிடம் வலியுறுத்தினேன். தி.மு.க. சார்பில் வைத்த கோரிக்கைகளில்உள்ள நியாயத்தை முதலமைச்சர் உணர்ந்திருந்தாலும், அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## த் தானம்
## கட்டாயம்

லட்சத்து 50 ஆயிரம் பேர் உடல் உறுப்புகளைத் தானம் செய்யும் ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளனர். ஐரோப்பிய நாடுகளில் உடல் உறுப்பு தானத்துக்காக காத்திருப்போர் பட்டியலில் அதிகம் பேர் உள்ளனர். 2014 ஆம் ஆண்டுகணக்கெடுப்பின் படி 86 ஆயிரம் பேர் இருந்தனர். உடல்உறுப்புத்தானம்கிடைக்காததால் பலர் உயிரிழக்கின்றனர். அதைத் தடுக்கவே பிரான்ஸ் இந்த சட்டத்தை



கொண்டு வந்துள்ளது. ஸ்பெய்ன், ஆஸ்திரியா நாடுகளில் இந்தச் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)




# இன்னும் மூன்றே மாதங்களில் முழுவதுமாக மீளும் மோசூல்

## தற்போது 70 சதவீதம் கையில் என்கிறார் கூட்டுப்படைத் தளபதி

பக்தாத், ஜன. 7
மோசூலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கைப்பற்றி வைத்திருந்த பகுதிகளில் 70 சதவீதம் மீண்டும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் ஈராக் கூட்டுப்படைத் தளபதி சகாட்டி, இன்னும் மூன்று மாதங்களில் மோசூல் முழுவதும் மீட்கப்படும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸுக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. ஐ.எஸ். அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூலும் இருந்தது. அதை மீட்கும் போரில் கடந்த நவம்பரில் களமிறங்கியது ஈராக். ஈராக்குக்கு உதவியாக அமெரிக்காவும் குர்திஷ் ஆயுதக் குழுவும் உள்ளன. பெருங்கிராமமான குவையாரா, பழைமைகளை உள்ளடக்கிய கிராமமான நிம்ரூட் உள்ளிட்ட முக்கிய இடங்கள் அரச தரப்பால் மீட்கப்பட்டன. இந்த நிலையில் ரொயிட்டர்ஸுக்கு வழங்கிய நேர்காணலில் நகரில் 70 சதவீதம் மீட்கப்பட்டது என்று ஈராக் கூட்டுப்படைத் தளபதி சகாட்டி தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களில் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு மிகப்பெரும் பின்னடைவுககளைக் கொடுத்துள்ளோம். எதிர்பார்த்ததைப் போன்று இலகுவாக போர் அமையவில்லை. ஐ.எஸ். அமைப்பு மோசூல் மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்துகின்றது, தற்கொலைத் தாக்குதல்களை அரங்கேற்றுகின்றது, இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றது. இவை காரணமாக நாம் அவ்வப்பொழுது சில தாமதங்களை எதிர்கொண்டோம். இவற்றுடன் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் பணியிலும் சிப்பாய்கள் ஈடுபட்டு வருகின்றனர். எது எப்படியாயினும் இன்னும் மூன்று மாதங்களில் மோசூல் நகர் முழுவதுமாக மீட்கப்படும் என்று சகாட்டி மேலும் தெரிவித்தார். (ம-எ)



## த ஒரு மீன்

ஏலம் நடைபெற்றது. சூரை இன மீன்கள் விற்பனை செய்யப்பட்டன. 212 கிலோ எடையுடைய மீனொன்று இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 6 கோடிக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.
(ம-எ)

## உலகப் பயங்கரவாதியாக பின்லேடன் மகன் ஹம்சா

வொஷிங்ரன், ஜன. 7
அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு மூளையாக இருந்த ஒசாமா பின்லேடனின் மகன் ஹம்சா பின்லேடன், அமெரிக்க பாதுகாப்புப் படையினரால் உலகப் பயங்கரவாதி என அடையாளப்படுத்தப்பட்டார். (ம-எ)

## நைஜீரியாவில் தற்கொலைப் படைத் தாக்குதல்; 57 பேர் உடல்சிதறிச் சாவு: 177 பேர் படுகாயம்

### உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் அபாயம்

மடகலி, ஜன. 7
நைஜீரியாவின் மடகலி நகரில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 57 பேர் உடல் சிதறிச் சாவடைந்தனர்.
மடகலியில் அமைந்துள்ள சந்தைப் பகுதியில் போகோ ஹரம் அமைப்பைச் சேர்ந்த 2 பெண்கள் தற்கொலைத் தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸ் தரப்பு தனது முதல் கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்தது. 57 பேர் கொல்லப்பட்டதுடன், 177 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.
கிட்டத்தட்ட 9 வருடங்களாக இயங்கும் போகோஹரம் அமைப்பு, 2014 ஆம் ஆண்டு சிபொக் பகுதியில் நூற்றுக்கணக்கான பாடசாலைப் பெண்களைக் கடத்தியதில் இருந்து உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது.
நைஜீரியாவில் இஸ்லாமியப் பகுதி ஒன்றைப் பிரகடனப்படுத்துவதே குறித்த அமைப்பின் நோக்கமாகும். (ம-எ)



## அழுத்தங்கள் உள்ளன

ரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத, ஏதோ ஒரு நெருக்கடியில் அவர் இருக்கிறார் என்பதை அந்த சந்திப்பில் என்னால் உணர முடிந்தது. அதிகாரத்தை திரைமறைவில் இருந்து வழி நடத்துபவர்களின் அலட்சியத்தால், நாட்டின் அச்சாணியாகத் திகழும் விவசாயிகளின் வாழ்வு பாலைவனமாகிவிடக்கூடாது என்று ஸ்ராலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும்குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புத்தாண்டின் புதிய பின்னடைவு

2017 ஆம் ஆண்டு, அரசியல் தீர்வு விடயத்தில் நம்பிக்கைக்குரியது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருந்தாலும், ஆண்டு பிறந்த கையோடு வந்திருக்கக் கூடிய செய்தி நம்பிக்கை தருவதாக இல்லை. புதிய அரசமைப்புத் தொடர்பான முயற்சிகள் காலவரையறையற்ற பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழு நேற்று முன்தினம் கூடியபோது, உபகுழுக்களின் அறிக்கை மீது அடுத்த வாரத்தில் மூன்று நாள்கள் நடைபெற இருந்த விவாதத்தை ஒத்தி வைத்தது. வழிகாட்டல் குழுவின் அறிக்கையையும், நாடாளுமன்றத்தில் முன்வைத்த பின்னர் இரண்டையும் சேர்த்தே விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்காகத்தான் இந்த ஒத்திவைப்பு மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால், வழிகாட்டல் குழுவின் அறிக்கையை எப்போது நாடாளுமன்றில் முன்வைப்பது என்பதை முடிவு செய்யாமலேயே – இரு நாள்களுக்குத் திட்டமிடப்பட்ட – கூட்டம் ஒரே நாளில் முடிவடைந்தது.

இதன் அர்த்தம், புதிய அரசமைப்புக்கான முயற்சிகள் காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பதுதான். கடந்த வருடத்திலேயே முடியும் என்று எதிர்பார்க்கப்பட்ட இந்த முயற்சி, இந்த ஆண்டிலாவது சாத்தியமாகிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கையில், அதற்கு எதிர்மாறாக அந்த முயற்சிகள் முடக்கத்தைச் சந்தித்திருப்பது நிச்சயம் ஏமாற்றம்தான்.

தாமதிப்பதன் ஊடாக எதிர்ப்புகளை நீர்த்துப் போகச் செய்து, தான் நினைப்பதை – விரும்புவதை – சாதிக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் இராஜதந்திரம், இந்த விடயத்தில் சறுக்கலைச் சந்தித்திருக்கிறது. புதிய அரசமைப்பு முயற்சிகளையும் அவர் தாமதப்படுத்திச் சென்றமை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தரப்பினருக்கு வாய்ப்பாகிவிட்டது. புற்றிலிருந்து சீறும் பாம்புகளாக, அவர்கள் நன்கு திட்டமிட்டு – பொறுமையாகக் காத்திருந்து – புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை, அரசைக் கவிழ்க்கும் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்குத் தயாராகி விட்டார்கள்.

இந்த எதிர்ப்பைக் கண்டுவிட்டு மைத்திரி – ரணில் அரசுக்கு ஆதரவளித்துவரும் ஹெல உறுமய போன்ற கட்சிகளும், புதிய அரசமைப்புக்கு ஆதரவளிப்பதற்குப் பின்னடிக்கின்றன. புதிய அரசமைப்பைக் கொண்டுவருவதற்குப் பொருத்தமான காலம் இது வல்ல என்கின்றது உறுமய.

இந்த நிலமைகள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டுத்தான் அரசமைப்பைக் கொண்டுவருவதற்கான முயற்சியை மேலும் தாமதப்படுத்தியிருக்கிறது கொழும்பு. ஏமாற்றம் தரும் இந்த நடவடிக்கை நிச்சயம் சிறுபான்மை மக்கள் மத்தியில் கொந்தளிப்பையும், எதிர்ப்புணர்வையும் இந்த அரசுக்கு எதிராக வளர்த்தெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

காலம் காலமாக இதுபோன்ற எதிர்ப்பு அரசியலைச் சாக்குப் போக்காகக் காட்டித்தான், தீர்வு முயற்சிகள் அனைத்துமே கைவிடப்பட்டன அல்லது தோற்கடிக்கப்பட்டன. டட்லி – செல்வா ஒப்பந்தம் முதல் ரணில் – புலிகள் ஒஸ்லோ உடன்படிக்கை வரை அனைத்துத் தீர்வு முயற்சிகளும் இப்படித்தான் மழுங்கடிக்கப்பட்டன. இப்போது பழைய கதையையே மீண்டும் பார்க்கவேண்டியதாக இருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மீண்டும் மீண்டும் சொல்லி வந்ததைப் போன்று, இதுவொரு வரலாற்றுச் சந்தர்ப்பமாக இருந்தாலும், பௌத்த சிங்களப் பேரினவாதத்தைத் தாண்டிச் சிந்திக்கவோ செயற்படவோ துணிவற்ற கொழும்புத் தலைமைகளின் செயல் போக்கில் மாற்றம் எதுவும் இல்லை என்பதையே, புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றமை எடுத்துக் காட்டுகின்றது.

சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குப் பணிந்து போகாத – அதில் உடைப்பை ஏற்படுத்த முடியாத – அனைத்து இன மத மொழி மக்களையும் தனது மக்களாகக் கருதி, கட்சி அரசியலைத் துச்சமெனத் தூக்கி வீச முற்படாத ஒரு அரசியல் தலைமை கொழும்பில் ஏற்படாத வரையில், அவற்றிடம் இருந்து நேர்மையான தீர்வு ஒன்றைப் பெறுவது குதிரைக் கொம்பு என்பதையே வரலாறு மீண்டும் ஒருமுறை தமிழர்களுக்குப் படிப்பினையாகத் தந்துள்ளது.

அதேபோன்று, மீண்டும் மீண்டும் உளுத்துப்போன உத்திகளிலேயே உழன்றுகொண்டிருப்பதை விட்டுவிட்டுத், தமிழர்களுக்கு விடிவு தர என்ன செய்வது என்பதைத் தமிழ்த் தலைமைகளும் தீர்மானிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

# பொறிமுறைகளில் சர்வதேச பங்குபற்றல் முக்கியம்

## நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரை

நல்லிணக்கப் பொறிமுறைகளை நிறுவும்போது கலந்தாலோசனைச் செயல்முறையில் பங்குபற்றியோர் மற்றும் அவற்றை நாடி வருவோர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பாதுகாப்பு ஏற்பாடொன்று நிறுவ வேண்டும் என கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைத்துள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட இந்தச் செயலணி தனது அறிக்கையை 4ஆம் திகதி வெளியிட்டது. நேற்றைய உதயனில் வெளியான அந்த அறிக்கையின் தொடர்ச்சி வருமாறு:

**7. ஆவணப்படுத்தல்**

1.39 ஆலோசனைச் செயல்முறையின் போதும், நல்லிணக்கப் பொறிமுறையின் செயற்பாட்டின் போதும், பெறப்பட்ட தரவுகளைப் பாதுகாக்கவும், ஆவணப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பெறப்பட்ட தரவுகள் பெறுமானமிக்கவை. ஆகவே, அவை ஆவணப்படுத்தப்பட்டுப் பாதுகாக்கப்பட வேண்டும். தேவையாயின் பொதுமக்களும் அவற்றைப் பயன்படுத்தலாம். தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பொருத்தமான பிரிவுகள் இவ்வகையில் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

1.40 கலந்தாலோசனைச் செயலணிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொதுமக்களின் கருத்துக்களின் தொகுப்பை அர்த்தமுள்ள நல்லிணக்கத்தின் தொடக்கப் புள்ளி என்ற வகையில் பொதுமக்கள் மேலும் புரிந்துகொள்ளத்தக்க வகையில் அரசு வெளியிட்டு பரவலாக அறியத்தர வேண்டும் அல்லது எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது.

**ஆ. பொறிமுறைகள் தொடர்பான இடையீட்டுப் பரிந்துரைகள்**

2.1 பொறிமுறைகளை உருவாக்குவதற்கான சட்டவாக்கம் தாமதமின்றி அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

2.2 பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றி கலந்தாலோசனைச் செயலணிக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்தன. ஆலோசனைக் கூட்டங்களின்போது, அதன் உறுப்பினர்களாலும் இது அவதானிக்கப்பட்டது. ஆலோசனைக் கூட்டங்களின்போது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அச்சுறுத்தும் வகையில் பிரசன்னமாய் இருந்தனர், கருத்துக்கூற வந்தவர்கள் விசாரிக்கப்பட்டனர். அதனால் கலந்துரையாடல் நிகழ்வின்போது கருத்துக்கூறல் தொடர்பாக அவர்கள் அச்சம் தெரிவித்தனர். இவற்றை மனங்கொண்டு நல்லிணக்கப் பொறிமுறைகளை நிறுவும்போதே கலந்தாலோசனைச் செயல்முறையில் பங்குபற்றியவர்களதும் அப்பொறிமுறைகள் நிறுவப்பட்ட பின்னர் அவற்றை நாடி வருவோர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு பாதுகாப்பு ஏற்பாட்டை உருவாக்குவதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது. அதுபோல், பாதுகாப்பு அமைச்சும், சட்ட ஒழுங்குக்கான அமைச்சும் இத்தகைய தலையீடு, துன்புறுத்தல் நிகழ்வுகளைத் தவிர்க்கும் வகையில் தெளிவான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

2.3 இவ்வகையில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான விசேட அலகு ஒன்றை உருவாக்குவது அவசியமாகும். இதில் பொலிஸ் உத்தியோகத்தர்களும், இதை மேற்பார்வை செய்வதற்கு மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையும், நடைமுறைக்கு வரும்போது பொறிமுறைகளும் உள்ளடங்கும். இந்த அலகு சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களையும் உள்ளடக்கிய உள்ளூர் அனுபவங்களையும் உள்வாங்க வேண்டும். இந்த அலகுக்கான சட்டகத்தை நிறுவுவதிலும், அதன் செயல் முறையை விருத்தி செய்வதிலும், அதன் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதிலும், சர்வதேச தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த அலகு அரசியல் மற்றும் பிற தலையீடுகளிலிருந்தும் விடுபட்டுச் சுயாதீனமாக இயங்க வேண்டும். பயிற்சி வழங்குவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும், துரிதமாகச் செயற்படுவதற்கும் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளும் பொறிமுறைகளுடனும் அதற்கு அப்பாலும் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் தொடர்ந்தும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். இதை இலகுபடுத்துவதற்காக இந்த அலகு ஒவ்வொரு பொறிமுறையுடனும் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். ஜனாதிபதிக்கு அது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

2.4 தற்போது நடைமுறையிலுள்ள சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்பு அதிகார சபை, ஒரு சுயாதீன அமைப்பாக மீளுருவாக்கப்பட வேண்டும். அத்தோடு 2.3 இல் கூறப்பட்டவாறு அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

2.5 2.3இல் கூறப்பட்ட விசேட அலகை மேலும் வலுப்படுத்துவதற்காக, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பிரதிநிதிகள், மனித உரிமைக் காப்பாளர்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு மேற்பார்வை அமைப்பு இருக்க வேண்டும். பொறிமுறைகளின் செயற்றிறன் மற்றும் நடைமுறையிலுள்ள பாதுகாப்புச் செயல்முறைகள் பற்றி ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்குரிய அதிகாரம் அதற்கு வழங்கப்பட வேண்டும். மேலும் அதன் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். பொறிமுறைகளையும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பையும் வலுப்படுத்த உதவும் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை வழங்கும் அதிகாரத்தையும் இந்த மேற்பார்வை அமைப்பு பெற்றிருக்க வேண்டும். கலந்தாலோசனைச் செயல்முறையின்போது கண்காணிப்புக்கும், விசாரணைக்கும், அச்சுறுத்தலுக்கும், தடுப்புக் காவலுக்கும், சித்திரவதைக்கும் ஆளானவர்களின் பாதுகாப்பில் இந்த மேற்பார்வை அமைப்பு ஆரம்பத்திலேயே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்த மேற்பார்வை அமைப்பில் இடம் பெறும் சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் சர்வதேச பங்குபற்றுதல், பொறிமுறைகளில் அங்கத்துவம் பெறுதல் தொடர்பாக கீழே 2.12, 2.13 ஆகிய பரிந்துரைகளில் தரப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும்.

2.6 இந்த மேற்பார்வை அமைப்பு ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். இதில் இடம்பெறும் உறுப்பினர்கள் அரசியல் யாப்புப் பேரவைக்கு சிவில் சமூகத்தினால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு, அரசியல் யாப்புப் பேரவையால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட பட்டியலிலிருந்து ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்கள்.

2.7 பிராந்தியங்களில் நடைமுறைச் சாத்தியமான இடங்களில் அலுவலகங்களை நிறுவுவதன் மூலம் பொறிமுறைகளை மக்கள் இலகுவாக அணுகுவதற்குரிய வாய்ப்புக்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2.8 தலைமையகத்திலும், பிராந்திய துணை அலுவலகங்களிலும் வெளித்தொடர்பு நடவடிக்கைகளின்போதும் மும்மொழிகளும், சைகை மொழியும் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கு பொறிமுறைகள் முயற்சிக்க வேண்டும்.

2.9 பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் உட்பட பொறிமுறைகளின் பங்காளிகளின் பிரதிநிதித்துவம், உறுதிப்படுத்தப்பட வேண்டும். பொறிமுறைகள் தொடர்பான பிரதிநிதித்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய சிக்கலாக பிரச்சினை தொடர்பாக வன்செயல்களை மேற்கொண்ட பல்வேறு குற்றவாளிக் குழுக்களின் இருப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும். அத்துடன் பொறிமுறைகளில் பிரதிநிதித்துவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள், குற்றம் புரிந்த சந்தேக நபர்கள் ஆகிய இரு சாராரின் சார்பு நலன்கள் தலையிடாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

2.10 குறிப்பாக வடக்கு, கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் சில இடங்களிலும் இடம்பெற்ற கலந்தாலோசனைச் செயல்முறைகளின்போது அரசிலும், அரச நிறுவனங்களிலும், பொறிமுறைகளிலும் பெருமளவு அவநம்பிக்கை இருப்பது வெளிப்பட்டது. முற்றிலும் ஓர் உள்ளகப் பொறிமுறை நம்பத்தகுந்ததாக அமையாது என்பதை இந்த நம்பிக்கை வலுவாக வெளிப்படுத்தியது. அதேவேளை, வடக்கு, கிழக்குக்கு வெளியிலும், ஆயுதப் படையினருடன் நடைபெற்ற கலந்துரையாடல் செயல்முறைகளின் போது இந்தப் பொறிமுறைகளில் சர்வதேசப் பங்குபற்றலுக்குத் தீவிரமான எதிர்ப்பு வெளிப்பட்டது. இருப்பினும், சில குறிப்பிட்ட பகுதிகளில் தேசிய இயலளவில் காணப்படும் மட்டுப்பாடுகள் காரணமாக, சர்வதேச நிபுணத்துவம் பெறப்பட வேண்டும் என்பதைப் பலர் ஏற்றுக்கொண்டனர். 2015 ஒக்ரோபரில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட கூட்டுத் தீர்மானத்தில் பொறிமுறைகளில் சர்வதேசப் பங்குபற்றலை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டிருப்பதைகலந்தாலோசனைச் செயலணியும் கவனத்தில் கொண்டுள்ளது. ஆகவே 2015 ஒக்ரோபரில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை சபையில் நிறைவேற்றப்பட்ட கூட்டுத் தீர்மானத்தில், சொல்லப்பட்ட வகையில் ஆலோசனை, நிபுணத்துவம் வழங்கல் முதல் நீதிபதிகள், விசாரணையாளர்கள் உட்பட பொறிமுறைகளில் செயற்படும் உறுப்பினர்களாக இருப்பதுவரை, நான்கு பொறிமுறைகளிலும் சர்வதேச மற்றும் தேசிய ஆளணியினரின் பங்குபற்றலை கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரைக்கின்றது.

2.11 பொறிமுறைகளின் தேசிய பிரதிநிதித்துவம் இலங்கையின் பிரதான இனக்குழுமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தகுதியும், அனுபவமும், நேர்மையும், சுயாதீனமும் உடையவர்களைக் கொண்டிருக்க வேண்டும். தேசிய பிரதிநிதிகள் வகிக்கும் பதவிகளுக்குரிய தெளிவான அளவீடுகள் இருக்க வேண்டும். தேசிய பிரதிநிதிகளின் தெரிவும், இனத்துவம், மொழி, பால்நிலை அனுபவம், திறன்கள் என்பவற்றைப் பொறுத்தவரை ஒரு பன்முகத்தன்மையை உள்ளடக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கால அளவு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் தேவையாயின் தேசியப் பிரதிநிதிகளுக்குப் பயிற்சியும் வழங்கப்பட வேண்டும்.

2.12 பன்னாட்டுப் பிரதிநிதிகள் வகிக்கும் பதவிகளைப் பொறுத்தவரை தெளிவான அளவீடுகளும் நியாயப்பாடுகளும் இருக்க வேண்டும். அவர்களின் தெரிவைப் பொறுத்தவரை குறிப்பாக அவர்களின் சுயாதீனம் நேர்மை, பயிற்சி, அனுபவம் என்பவை உறுதிப்படுத்தப்பட வேண்டும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் கால அளவும், தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். மொழித்திறன், உள்நாட்டுச் சூழல் பற்றிய பரிச்சயம் தொடர்பான சவால்கள் என்பவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பன்னாட்டுப் பிரதிநிதிகள் நியமிக்கப்படும் முன்னர் இந்தச் சவால்களைக் கையாள்வதற்கான செயல்முறைகள் முன்வைக்கப்பட வேண்டும். இந்தச் செயற்பாடுகளின் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

2.13 நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகள் தொடர்பான சர்வதேசப் பங்குபற்றல் நிகழும் பிற சந்தர்ப்பங்களைப் போலவே, முற்றுமுழுதான தேசியப் பொறிமுறைகளிலும், தேசிய இயலுமைகளிலும், திறன்களிலும், நம்பிக்கையும் பற்றுறுதியும் கட்டி எழுப்பப்பட்டதும் சர்வதேசப் பிரதிநிதிகளின் பங்குபற்றல் நிறுத்தப்படல் வேண்டும்.

2.14 நீதிப் பொறிமுறையின் விசாரணையாளர்கள், காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம், உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் மீள் நிகழாமை ஆணைக்குழு உட்பட நான்கு பொறிமுறைகளின் ஆளணியினர் தொடர்பான கவனமான ஒரு பரிசீலனைச் செயற்பாடு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய அலுவலர்கள் இதில் பணியாற்றத் தகுதியற்றவர்கள். இத்தகையவர்களை அகற்றும் ஒரு தூய்மையாக்க முறைமை பிரயோகிக்கப்படவேண்டும்.

2.15 பொறிமுறைகள்மூலம் பயன் பெற வரும் பொதுமக்கள்மீது பொறிமுறை அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல், சுரண்டல், லஞ்சம், நம்பிக்கைமோசடி, அச்சுறுத்தல் போன்றவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பத்திலேயே மேற்கொள்ளப்படவேண்டும். இறுக்கமான நன்னடத்தை விதிகள், மேற்பார்வை நடவடிக்கைகள், முறையீட்டுப் பொறிமுறைகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவற்றை இது உள்ளடக்க வேண்டும்.

2.16 பொறிமுறைகள் அவற்றின் செயற்பாட்டின் எல்லா நிலைகளிலும் சமநிலையான பால்நிலைப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அவற்றைப் பயன்படுத்துவோரின் பால்நிலைத் தேவைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவை (பாலூட்டுவதற்கும் குழந்தைப் பராமரிப்புக்குமான இடவசதி உட்பட) குழந்தைகளுக்காக வசதிகளையும் பாதுகாப்பான சுகாதார வசதிகளையும் கொண்டிருக்க வேண்டும்.

2.17 தேவையேற்படின், பொறி முறைகளை நாடிவருவோரின் பயண, தங்குமிடச் செலவுகளை மீளவழங்குவது பற்றிக் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

2.18 பொறிமுறைகளின் அலுவலர்கள் அ) சிறுபான்மையினர், பழங்குடியினர், விளிம்புநிலைப்படுத்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்ட சாதியினர், தம்பாலுறவினர், இருபாலுறவினர், பால் மாறிகள் (LGBTIQ) சமூகத்தினர் உட்ப பொறிமுறைகளை நாடிவரும் எல்லாச் சமூகத்தினரதும், தனிமனிதர்களதும் தேவைகள் தொடர்பான புரிந்துணர்வு கொண்டிருக்கவேண்டும். குறிப்பாக அத்தகையவர்களுடன் தொடர்புகொள்ளும்போது மனத் தடையோ பாரபட்சமோ அவர்களைத் தூரப்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஆ) மாற்றுத் திறனாளிகளின் விசேட தேவைகள் பற்றி கருத்தில்கொள்ள வேண்டும். எல்லோரும் இலகுவாக வந்துசெல்லக்கூடிய வகையில் பொறிமுறைகள் வடிவமைக்கப்பட்டு, அதற்கேற்ற இடங்களில்செயற்படவேண்டும்.

2.19 பாலியல் வன்முறை, அது போன்ற பால்நிலைப்பட்ட குற்றங்களுக்கான தீர்வுதொடர்பான நீதி வழங்கலும், திட்ட வரைவும் கவனமாக்க் கையாளப்பட வேண்டியவை. பாதிக்கப்பட்டவர்கள் தாமாக முன்வரத் தூண்டும் வகையில் இரகசியம் பேணும் அந்தரங்கமான, பாதுகாப்பான சூழல் வழங்கப்படவேண்டும். மீண்டும் பாதிப்புக்குள்ளாக்காத, மீண்டும் மனவடு ஏற்படுத்தாத சூழலாக அது அமையவேண்டும்.

2.20 பொறிமுறைகளுக்கிடையே சேவைகளை ஒருங்கிணைப்பதற்கும், வடிவமைப்பதற்கும், ஆலோசனை வழங்குவதற்கும், முன்மொழியப்பட்ட உளசமூக அலகுகளை ஒவ்வொரு பொறிமுறையினுள்ளும் நிறுவுவதற்கும், நாடுமுழுவதும் உளசமூகச் சேவைகளை விஸ்தரிப்பதற்கும், வலுப்படுத்துவதற்கும் ஒரு சுயாதீன அமைப்பு உருவாக்கப்படவேண்டும். இவ்வகையில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் உள சமூக செயலணியுடன் அது நெருக்கமாக இணைந்து செயற்பட முடியும்.

2.21 சமூக மட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் நிலைமாறுகால நீதிப் பொறிமுறைகளுடன் தொடர்புகொள்வதற்கு முன்பும், தொடர்புகொள்ளும் போதும், அதன் பிறகும் உளசமூகச் சேவைகள் வழங்கப்படவேண்டும். சிவில்சமூக அமைப்புகளினாலும், அரச நிறுவனங்களாலும் வழங்கப்பட்ட இப்போதுள்ள சேவைகளின் பரப்பை விசாலப்படுத்துவதன் மூலமும், அவற்றின் நிலைபேற்றுத் தன்மையை உறுதிப்படுத்துவதன் மூலமும், அவற்றின் செயலாற்றலை வலுப்படுத்துவதன் மூலமும் இது செய்யப்படவேண்டும்.

2.22 அரசினால் நேரடியாக வழங்கப்படும் உளசமூகச் சேவைகளில், குறிப்பாக மனித உரிமை மீறல்களில் அரச முகவர்கள் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய நிலைமைகளில், நலன்சார் ஈடுபாடுகள் இருப்பதற்கான சாத்தியப்பாடு உண்டு. ஆகவே உளசமூக மற்றும் வேறுசேவைகளை வழங்குவதை உறுதிப்படுத்தவேண்டிய கடப்பாடு அரசுக்கு உரியது என்ற போதிலும், இச்சேவைகளை வழங்குவதில் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் (பொருத்தமான வகையில் அரச சேவைகளுடன் இணைந்து) ஈடுபடவேண்டிய தேவையும் இருக்கலாம். உளசமூக மற்றும் வேறு சேவைகளை வழங்குவோரின் சுயாதீனத்தையும் சார்பின்மையையும் உறுதிப்படுத்துவதற்கு இது அவசியமாகும்.

2.23 பாதிக்கப்பட்டோர் நம்பிக்கை நிதியம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டோரின் பல்வேறு தேவைகளைக் கையாள்வதற்கு வேண்டிய போதுமான நிதியை இதன்மூலம் உறுதிப்படுத்தலாம். சர்வதேசக் கொடையாளிகளின் பங்களிப்புக்கு மேலாகத் தனியார் துறை மற்றும் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்புகளையும் அரசு ஊக்கப்படுத்த வேண்டும்.

2.24 இந்த நிதியத்தின் நம்பிக்கைச் சபையினர், அரசியல் யாப்புப் பேரவையின் பரிந்துரையின்பேரில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். இப்பரிந்துரை சிவில் சமூகத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலிலிருந்து பெறப்பட வேண்டும்.

2.25 பொதுமக்களுடன் பொறிமுறையின் வேலையினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுடனும் தகவல் பரிமாற்றம் செய்வதற்காக ஒவ்வொரு பொறிமுறையும் வெளித் தொடர்பு மற்றும் தகவல் அலகு ஒன்றைக் கொண்டிருக்கவேண்டும்.

அத்தோடு தகவல் பரிமாற்றச் செயல் முறையையும் தமது சொந்த இணையத்தையும் கொண்டிருக்க வேண்டும். வெளித்தொடர்பு மற்றும் தகவல் ஒரு தெளிவான அலகுகள் தமது இணையங்களில் தகவல்களை ஏற்றுதற்கும் தாம் சார்ந்த பொறிமுறைகளின் பணிகள் தொடர்பான வினாக்களையும் விசாரணைகளையும் கையாள்வதற்கும் பொறுப்புடையனவாகும்.

(மிகுதி நாளை தொடரும்)



# வாசகர் திருமுகம்

## கடுந்தண்டனை குற்றங்களைத் தடுக்க வல்லது

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி பாதசாரிகளுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் அபாயம் குறித்து தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டபோதிலும், வாகனச் சாரதிகளில் ஒருசிலர் அதனை அலட்சியம் செய்து மது போதையில் வாகனங்களைச் செலுத்தி விபத்துக்களை ஏற்படுத்தக் காரணமாகின்றனர். நீதிமன்றம் விதிக்கும் தண்டப்பணத்தைச் செலுத்திவிட்டு அத்தகையோர் மீண்டும் அதே விதத்தில் செயற்பட விளைவதையும் காண்கிறோம். இத்தகையோருக்கு தற்போது நீதி மன்றங்கள் தண்டம் விதிப்பதோடு நிறுத்தாது அவர்களது சாரதி அனுமதிப் பத்திரங்களையும் குறிப்பிட்ட காலத்துக்கு நீதிமன்றிலேயே தடுத்துவைக்க உத்தரவிடுவதால் இனிமேலாவது இத்தகையோர் போதையுடன் வாகனம் செலுத்தும் வழக்கத்தைக் கைவிடுகிறார்களா பார்ப்போமே!

*த.அற்புதன்*
*அரியாலை*

## உரிய வசதிகள் ஏற்படுத்தப்படல் அவசியம்

கொழும்பு அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வரும் யாழ். போதனா வைத்தியசாலை தவிர்ந்த, வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இயங்கும் பிரதேச வைத்திய சாலைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் கிராமப்புற நோயாளர்கள் தமக்கான அவசிய, அவசர சிகிச்சைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்க நேரும். அத்தகைய பாதிப்பு ஏற்படாத விதத்தில் வடமாகாண சுகாதார அமைச்சு துரித நடவடிக்கை மேற்கொண்டு உரிய மருத்துவர்கள் ஆளணியை நிரப்ப நடவடக்கை மேற்கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

*பெ.பராபரன்*
*கொடிகாமம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# பணிவு!

ஓர் ஊரில் துமிலன் என்ற பெரியவர் இருந்தார். அவர் பெரிய செல்வந்தர். தன்னால் எதுவும் முடியும்; எவரது உதவியுமின்றித் தன்னால் எந்தச் செயலையும் சாதிக்க முடியும் என்ற பெருமையில் எவரையும் மதிக்க மாட்டார்.

அவர் மகன் சிவாவுக்கு இவரது பெருமைக் குணம் பிடிக்காது. அவரை எப்படித் திருத்துவது என்று யோசித்தபடியே தோட்டத்திற்குள் நுழைந்தான்.

அவன் தந்தை தோட்டத்தில் தொரட்டியைக் கொண்டு மிக உயர்ந்த முருங்கை மரத்திலிருந்து முருங்கைக்காயைப் பறிக்க முயன்றார். எவ்வளவோ முயன்றும் அவரால் பறிக்க முடியவில்லை. இதைப் பார்த்துக் கொண்டிருந்த மகன், "அப்பா உங்களுக்கு உதவுகிறேன்," என்றான்.

"இவ்வளவு வயதும், உயரமும் உள்ள என்னாலேயே பறிக்க முடியவில்லை. நீ நாலடி இருந்து கொண்டு சாதித்து விடுவாயா?" என்று கேட்டார்.

"நான் முயற்சிக்கிறேன்; எனக்கு நம்பிக்கை இருக்கிறது," என்றான் மகன்.

கேலிச் சிரிப்போடும், அலட்சியத்தோடும் தொரட்டியை மகனிடம் கொடுத்தார் தந்தை.

"அப்பா கொஞ்சம் குனியுங்கள். உங்கள் தோளில் நான் ஏறிக் கொள்ள வேண்டும்," என்றான்.

அவன் யோசனை அவருக்கு வியப்பைத் தந்தது. உடனே குனிந்து அவனைத் தோளில் ஏற்றிக் கொண்டார்.

தந்தையின் தோளில் இறுக்கமாக விழாதவாறு நின்று தொரட்டியைக் கையில் வாங்கி முருங்கைமரத்தின் காயை வெகுலாவகமாகத் தட்டிவிட்டான்.


நிமிடத்தில் மளம ளவெனக் காய்கள் அவன் தந்தையின் காலடியில் வந்து விழுந்தன.

"எப்படிடா இதையெல்லாம் கற்றுக் கொண்டாய்?" என்றார் தந்தையார்.

"அப்பா, இதுவரை எவரையும் மதிக்காமல் நீங்கள் நிமிர்ந்திருந்தபோது உங்களை எவருமே மதிக்கவில்லை.

உங்கள் நிலையிலிருந்து இறங்கி ஒரு நிமிடம் எனக்காக நீங்கள் குனிந்தீர்கள் அல்லவா? அந்தப் பணிவைப் பார்த்து முருங்கைக் காய்கள் இப்போது உங்கள் காலடியில் வந்து விழுந்துள்ளன" என்று கூறினான். அன்று முதல் அவரது கர்வம் குறைந்தது. அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பனாகத் தன் மகன் விளங்கினான் என அனைவரிடமும் தன் மகனைப் பாராட்டி பெருமையடைந்தார் பெரியவர்.

# சீனப்பெருஞ்சுவர்



உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுவது சீனப்பெருஞ்சுவர். நிலவில் இருந்து பார்த்தால் தெரியும் ஒரே மனிதப் படைப்பு என்ற பெருமையும் இதற்கு உண்டு.

நாட்டின் பாதுகாப்புக்காகப் பிரமாண்டமானதாக சுவர் அமைக்கும் பணிகள் என்பது சீனாவின் முதல் பேரரசரான கின் ஷி ஹுவாங்கின் யோசனை. ஆட்சிக் காலத்தில் (கி.மு. 220– 206) இது கட்டப்பட்டது.

இதன் சில பகுதிகள் மட்டுமே தற்போது சுவராக நீடிக்கிறது. அதன் பின் கி.மு. 5ம் நூற்றாண்டு முதல் கி.பி. 16ம் நூற்றாண்டு வரையில் பல்வேறு மன்னர்களின் காலகட்டத்தில் கட்டப்பட்டது. இடியும் நிலையில் இருக்கும் பகுதிகளும் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தது.

இவ்வாறு கிழக்கே ஹெபேய் மாகாணம் ஷாங்ஹாய் குவானில் தொடங்கி மேற்கில் லோப்நூர் வரையில் பிரதான சுவர், கிளைச் சுவர் என சுமார் 8,850 கி.மீ. தூரத்துக்கு பிரமாண்டமாய் நீள்கிறது. மொத்தச் சுவரும் கற்கள், பாறைகளைக் கொண்டே அமைக்கப்பட்டதாகக் கருதப்பட்டு வந்தது. ஓக் மரத்தையும் கல்போல பயன்படுத்தி சுவர் கட்டியிருப்பது தொல்பொருள் ஆய்வில் தெரியவந்துள்ளது.



**முயற்சி**
வீரனாய் இருப்பதை விட மனிதனாய் இருக்க முயற்சி செய்.
*- கதே*

**தாயன்பு**
இறைவனின் அன்புக்கு இணையானது தாயன்பு.
*- சிரில் கெனாேனோல்*

**அச்சம்**
பொய்மையின் நண்பன் அச்சம்; வாய்மையின் நண்பன் துணிவு.
*- நேரு*

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# தகவல் துளி

பாலில் உள்ளதை விட அதிக கல்சியம் உள்ள காய்கறி எது?
வெங்காயம்.

கவிஞர் கண்ணதாசன் பாடல் எழுதிய கடைசி படம் எது?
மூன்றாம் பிறை.

அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
பெப்ரவரி 28.

வைரத்தில் மொத்தம் எத்தனை மூலைகள் உள்ளன?
ஆறு மூலைகள்.



# ஏற்றம் கொண்டு எழுந்திடுவாய்

கல்வி எனும் கசப்பான உண்மையானது
கல்லில் செதுக்கப்பட்ட சிலை போன்றது.
சிலையினிலே உருவாகும் சிறு எழுத்துக்கள்
சிறந்தனவாய் மிளிர்கின்றனவே!

விழி மூடிக் காணும் சிறு சொற்களே
வழி திறந்து பேசும் வசனங்களே!
கல்வி எனும் கசப்பான மருந்தே
காலம் கடந்து அலட்சியமாய் மாறிடும்
இனிப்பான தேனே!

தேனாய் மாறிடும் இலட்சியத்தைக் காண
தேடுபவனாய் விளங்கு
ஏடுதனிலே உன்பெயர் விளங்க
ஊற்றெடுத்து வளர்ந்திடு!

உன் இலட்சியத்தை நீ தேடி
உன் பெயரை மினிக்கிடு!
ஊரார் போற்ற உன்னை
ஊற்றெடுத்து வளர்த்திடு!

கல்வி எனும் மூன்றெழுத்து சொல்லை
கண் போன்று காத்திடு!
வயலினிலே வளரும் பயிர்போன்று
இலட்சியத்தை
வல்லவனாய் வளர்த்திடு!



*உ. சஞ்சிகா*
*தரம் - 8C*
*கிளி/ இந்துக் கல்லூரி*

# வரலாற்றில் இன்றைய தினம்



1993 - இராணுவத்தின் எச்சரிக்கையையும் மீறி அங்கிலிக்கன் ஆயர் யாழ் வந்தார். கிளாலி வழியே விசேட படகில் இரவு வந்து சேர்ந்தார்.

1994 - கடற்படை வெறியாட்டம்: சக்கோட்டைப் பகுதி கடலில் பலியான 9 மீனவரில் மேலும் 2 பேரின் சடலங்கள் கரையொதுங்கின. இதுவரை 6 சடலங்கள் கரையொதுங்கின.

1995 - இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வு காண அரசமைப்பையும் மாற்றவும் தயார் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு.

1997 - திருமலையில் கண்ணிவெடி;
டிராக்டர் கண்ணி வெடியில் சிக்கி 5 படையினர் சாவு.

2000 - களுத்துறைச் சிறைத் தாக்குதல் சம்பவத்தில் காயமுற்ற கைதிகளுக்குத் தகுந்த சிகிச்சை இல்லையென மாவை தகவல்.

2008 - 'மின்னல் ரங்கா' புலிகளுடன் தொடர்பாம்; விசாரிக்க ஐ.ஜி.பியைக் கோருகின்றார் டக்ளஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில புத்தாண்டுப் பலன் 2017



## விருச்சிகம்

உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் சந்திரன் நிற்கும் போது இந்த 2017ஆம் ஆண்டு பிறப்பதால் சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனோபலம் அதிகரிக்கும். பணவரவு கணிசமாக உயரும். இளைய சகோதர வகையில் ஆதரவு பெருகும். வெளிவட்டாரத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு அதிக சம்பளத்துடன் கூடிய நல்ல உத்தியோகம் அமையும். பொது விழாக்கள்,கல்யாண, கிரகப் பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகளை முன் னின்று நடத்துவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்பொழுது உங்களுக்கு உதவ முன் வருவார்கள்.

மே 26ஆம் திகதி முதல் ஜூலை 12ஆம் திகதி வரை உங்களுடைய ராசிநாதன் செவ்வாய் 8இல் மறைவதாலும் மற்றும் ஏப்ரல் 11ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை உங்கள் ராசிநாதன் செவ்வாயை சனி பார்க்கயிருப்பதாலும் சிறுசிறு வாகன விபத்துகள், மறைமுக எதிர்ப்புகள், பணப்பற்றாக் குறை வந்து செல்லும். உடன்பிறந்தவர்களால் பிரச்சினைகள் வரக்கூடும். சொத்து வாங்குவது, விற்பதில் சிக்கல்கள் வந்து போகும். பழைய கடனை சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள். ஜூலை 26ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டில் கேது பகவானும், ராசிக்கு 10ஆம் வீட்டில் ராகுவும் நிற்பதால் வாகன விபத்துகள், காரியத் தாமதம், வீண் அலைச்சல், பதற்றம் வந்து போகும். தாயாருக்கு கை, கால் வலி, சோர்வு வந்து நீங்கும். அவ்வப்போது மற்றவர்களைப் போல நம்மால் சுதந்திரமாக இருக்க முடியவில்லையே என வருந்துவீர்கள். வீடு, மனை வாங்குவது, விற்பதில் வில்லங்கம் வந்து விலகும். சின்னச் சின்ன மரியாதைக் குறைவான சம்பவங்கள் நிகழக்கூடும். ஜூலை 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை கேது 3ஆம் வீட்டில் அமர் வதால் புதிய முயற்சிகள் பலிதமாகும். உங் களுக்குள் ஒரு சுயக்கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வீர்கள். காலம் தள்ளிப் போய்க் கொண்டிருந்த வழக்கில் இனி சாதகமான தீர்ப்பு வரும். இளைய சகோதர வகையில் ஆதாயமடைவீர்கள். ஆனால் ராகு 9ஆம் வீட்டில் நிற்பதால் சேமிப்புகள் கரையும். தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கும்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் தன-பூர்வ புண்யாதிபதியான குரு உங்கள் ராசிக்கு லாப வீட்டில் நிற்பதால் உங்களின் புகழ், கௌரவம் ஒருபடி உயரும். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். தொடங்கிய பணிகள் உடனே முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வருமானத்தை உயர்த்த புது வழிகளில் முயற்சி செய்வீர்கள். திடீர் யோகம், பணவரவு உண்டு. நீண்ட நாளாக வராமலிருந்த பணமெல்லாம் இப்போது கைக்கு வரும். பழைய கடனில் ஒருபகுதியை தீர்க்க வழி பிறக்கும். மூத்த சகோதரர் முன் வந்து உதவுவார். நேர் மறை எண்ணங்கள் உருவாகும். பெரிய பதவிகள் தேடி வரும். தடைப்பட்ட வீடு கட்டும் பணியை தொடர்வீர்கள். தூரத்து சொந்த- பந்தங்கள் மத்தியில் மதிக்கப்படுவீர் கள். ஆனால் செப்ரெம்பர் 2ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை குருபகவான் உங் களுடைய ராசிக்கு 12ஆம் வீட்டில் சென்று மறைவதால் திடீர் பயணங்கள், செலவுகள் அதிகரிக்கும். ஒரே நேரத்தில் நான்கைந்து வேலைகளையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். ஆடம் பரச் செலவுகளை குறைக்கப்பாருங் கள். நன்கு அறிமுகமாகாதவர்களை வீட்டில் சேர்க்க வேண்டாம்.

டிசெம்பர் 14ஆம் திகதி வரை ராசிக்குள் சனி அமர்ந்து ஜன்மச் சனியாக தொடர்வ தால் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்துங்கள். வறுத்த, பொரித்த மற்றும் அசைவ உணவுகளை தவிர்த்து விடுவது நல்லது. தலைவலி, மயக்கம், குமட்டல், நாக்கில் கசப்பு, செரிமானக் கோளாறு வந்து நீங்கும். நாக்கைக் கொஞ்சம் கட்டுங்கள். கணவன்- மனைவிக்குள் அவ்வப்போது வாக்கு வாதங்கள் வரத்தான் செய்யும். அதை பெரிது படுத்த வேண்டாம். நாடாளுபவர்கள், பிரபலங் களை பகைத்துக் கொள்ளாதீர்கள். குருதியில் சீனியின் அளவை பரிசோதித்துக் கொள்ளுங்கள். உடல் எடை கூடும். பணப் புழக்கம் இருந்தாலும் வெளியில் கடன் வாங்க வேண் டிய சூழ்நிலையும் ஏற்படும். சில சமயங்களில் முன் கோபத்தால் எடுத்தெறிந்து பேசுவீர்கள். நேரம் கிடைக்கும் போது யோகா, தியானம் செய்யத் தவறாதீர்கள். எளிய உடற்பயிற்சிகளை மேற்கொள்வது நல்லது. எதிர் மறை எண்ணங் கள் தலைத்தூக்கும். நீங்கள் பெருந்தன்மையாக நடந்து கொண்டாலும் சிலர் உங்களை குறை கூறுவார்கள். வருடத்தின் இறுதியில் டிசெம்பர் 15ஆம் திகதி முதல் சனி உங்கள் ராசிக்கு 2இல் அமர்வதால் நோய்களெல்லாம் வெகுவாக குறையும். குடும்பத்தில், கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த கசப்புணர்வுகளெல்லாம் விலகும். நிதானம் அவசியம். மூக்கு, காது, கை, கால் வலி வந்து போகும். சொந்த வாகனத்தில் இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும். வியாபாரத்தில் ஜென்மச் சனி தொடர்வதால் புது தொழில் தொடங்கும் முயற்சிகள், பெரிய முதலீடுகள் வேண்டாம். போட்டிகளை சமாளிக்க புது திட்டங்களை நடைமுறைப்படுத்துவீர்கள். வேலையாள்களுக்காக எவ்வளவு சம்பளம் கொடுத்தாலும், அதிக சலுகைகள் தந்தாலும் எந்த பிரயோசனமும் இல்லையே என ஆதங்கப் பட்டுக் கொள்வீர்கள். வாடிக்கையாளர்களை திருப்திபடுத்த முடியாமல் திணறுவீர்கள். உத்தியோகத்தில் ஜூலை 26ஆம் திகதி வரை ராகு 10இல் அமர்வதால் சின்னச் சின்ன அலைக்கழிப்புகள் இருக்கும். மேலதிகாரியின் குறை, நிறைகளையெல்லாம் சுட்டிக் காட்ட வேண்டாம். சக ஊழியர்களால் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். விரும்பத்தகாத இடமாற்றங்கள் வரும். கன்னிப்பெண்கள் போட்டித் தேர்வுகளில் போராடி வெற்றி பெறுவார்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். காதலை தள்ளி வைத்துவிட்டு உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். கல்யாணம் தாமதமாகி முடியும். பெற்றோருக்கு தெரியாமல் எந்த நட்பும் வேண்டாம். மாணவர்களுக்கு ஏழரைச் சனி நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மந்தம், மறதி வந்து நீங்கும். உங்களுடன் சுற்றித் திரிந்த நண்பர்கள் கூட நல்ல மதிப்பெண் பெற்று வெற்றி பெறக்கூடும். எனவே விதண்டா வாதம் பேசிக் கொண்டிருக்காமல் படிப்பில் அக்கறை செலுத்துங்கள்.

இந்த 2017ஆம் ஆண்டு சுற்றியிருப்பவர்களின் சுய நலப்போக்கை உணர வைப்பதுடன், மன அமைதியையும் தருவதாக அமையும்.

### நாளை

**மார்கழி-24**

ஞாயிற்றுக்கிழமை -08.01.2017

திதி: ஏகாதசி பி.இ.02.42

நட்சத்திரம்: பரணி மு.ப.10.03

ராகுகாலம்:05.02-06.32 வரை

சுபநேரம்:09.32-11.02 வரை

கார்த்திகை விரதம்

சுவர்க்கவாயிலேகாதசி விரதம்

# புனித பூமிகளில் ஏன் இந்தத் தாமதம்?

தமிழர்களின் உரிமைக்காகப் போராடித் தம் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவு கூருவதற்கான அனுமதி கிடைத்த பின்னர் அதனைச் செயற்படுத்துவதற்காகக் கல்லறை அமைப்பதில் தமிழர்களுக்கிடையில் சில சுய நலவாதிகளால் முரண்பாடு ஏற்பட்டுள்ளதை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லக் காணியில் மாவீரர் நினைவுக் கல்லறை அமைப்பதில் இந்த முரண்பாடு ஏற்பட்டது. மாவீரர் துயிலுமில்லத்தில் அனுமதி பெறப்படாது கல்லறை உட்பட எந்தவொரு கட்டடத்தையும் அமைக்க முடியாதெனப் பிரதேச சபைச் செயலாளர் கூறியதன் பின்புலத்தில் சிலர் இருப்பதாக ஏற்பாடு மேற்கொண்ட குழு குற்றஞ் சாட்டியது. பொலிஸார் அந்த இடத்தில் தலையிட்டு கட்டடம் கட்ட அனுமதியை மறுத்தபோது, இதனைத் தடுக்குமாறு உங்களுக்கு அறிவித்தது கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரா? என்ற கேள்விக்குப் பின்னாலும் நிறைய மர்மங்கள் இருப்பதாகவே படுகிறது. அவர்களுக்குள் பிரச்சினை எவ்வாறு இருந்தாலும் மாவீரர் துயிலுமில்லங்களிலும் அதனை நினைவுகூருவதிலும் அரசியல் மோதல் உருவாகியுள்ளதனை மறுக்கமுடியவில்லை. புலம்பெயர் நாடுகளிலும் இந்த மோதல் நிலை தொடர்கிறது. அங்கு சென்று வந்ததாலோ என்னவோ இங்கும் அது பரவி வருகிறது.

கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் புனித பூமியாக அறிவிக்கப்பட வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. அந்த இடங்களில் தேவையற்ற தலையீடுகள் ஏற்படுவதனைத் தவிர்க்கவும் படையினரது அத்துமீறல்களைத் தவிர்க்கவும் கோரி முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒருவர் முன்வைத்த கருத்து அதிக முக்கியம் பெற்றிருந்தது. புனித பூமி என்ற அறிவிப்பு வெறும் அறிவிப்பாக இல்லாது - இழுத்தடிப்பு இல்லாது - இயன்றளவு விரைவாக இந்த விடயம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அவ்வாறு அறிவித்து ஒரு மாதம் கடக்கின்ற நிலையிலும் இன்னும் எந்த ஏற்பாடுகளையும் காணவில்லை. அதுவே வெவ்வேறு பிரச்சினைகளை உருவாக்கக் காரணமாகவும் இருக்கலாம். அத்தகைய நிலையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காதது ஏன்?

மாவீரர் துயிலும் இல்லங்கள் புனித பிரதேசங்கள் என்றால் வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவீரர் துயிலுமில்லங்களும் புனித பிரதேசங்கள்தான். அதில் மாற்றுக்கருத்தில்லை.

அத்தகைய புனித பிரதேசங்களைத் திறந்த பூமியாக - எல்லை வரையறை இல்லாத சுற்றுப் பாதுகாப்பு இல்லாத பூமியாக, விடக்கூடாதல்லவா? ஏனைய இடங்களில் புனித பூமியாக அறிவிக்கப்பட்ட இடங்களில் சுற்றுப் பாதுகாப்பு உள்ளிட்டவை யாரும் இலகுவில் உள்ளே சென்றுவிட முடி யாது எந்தளவுக்கு முக்கியம் கொடுக்கப்படுகின்றன.

அவ்வாறிருக்கும்போது பிரதேசசபையோ அல்லது அதனைப் பொறுப்பெடுக்கக்கூடிய ஏதாவது துறையோ அதனைப் பாதுகாக்க இனியாவது முற்பட வேண்டும். தமிழ்த் தலைமைகள் இந்த விடயத்தில் கவ னமெடுக்க வேண்டும்.




தனியார்கள் தாம் நினைத்த மாதிரி கல்லறைகளைக் கட்ட முற்படும்போது சகல மாவீரர்களுக்கும் நினைவுக் கல்லறை அமைக்க முடியாதவாறு இடப்பிரச்சினை ஏற்படலாம். கல்லறைகளின் புறத்தோற்ற வடிவங்கள், வர்ணங்கள், அளவுகள் புலிகளின் காலத்தில் வரையறை செய்யப்பட்டுச் சீராக அமைக்கப்பட் டிருந்தன. அந்த விடயம் கவனத்தில் கொள்ளப்பட வேண் டும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் செயலற்றிருக்கையில் மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் எவ்வளவு நாளைக்குக் காத்திருப்பார்கள்? தற்போதைய கூட்டாட்சியில் இவற்றையாவது செய்வற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கையில் இந்தக் காலத்தை வீணே கடந்து போகவிட்டுவிட்டு பிறகு என்ன செய்யப் போகிறார்கள்? தீர்மானம் எடுத்த இணைத்தலைவர்களும் ஏனையவர்களும் இந்த விடயத்தில் அடுத்த கட்டம் பற்றிய திட்டம் என்ன? என்று அறிவிக்க வேண்டும். ஆட்சி மாற்றம் வந்தால் மாவீரர் தினத்தை நினைவு கூருவதற்கான அனுமதி கிடைக்குமா என்பது வேறு பிரச்சினை. தற்போதைய சாதகமான சூழலில் மாவீரர் துயிலுமில் லங்களில் செய்யப்பட வேண்டிய பணிகளை செய்து முடித்து விடாது ஏன் இந்தக் காலதாமதம்? கடந்த நவம்பரில் ஆரம்பிக்கப்பட்ட நினைவுகூரலை விரிவுபடுத்தவேண்டும். அதற்காக இயன்றளவு நடவடிக்கை எடுத்தேயாகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அரசியலில் ஏற்பட்டுள்ள பரபரப்பான மாற்றங்கள்

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுக பொதுச் செயலர் பொறுப்பை சசிகலா ஏற்றுக் கொண்டார்.

சரியாக ஒரு மாதத்துக்கு முன்பு, டிசெம்பர் 5ஆம் திகதி தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா காலமானார். அவரது மறைவைத் தொடர்ந்து முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் பொறுப் பேற்றுக் கொண்டார்.

ஜெயலலிதா மறைந்து ஒரு சில நாள்கள் அதிமுகவினர் அவரது மறைவால் ஏற்பட்ட துக்கத்தில் இருந்தனர். அதன்பிறகுதான், கட்சி மேலிடத்துக்கு சரியான ஆள் தேவை என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது.

டிசெம்பர் 10ஆம்தேதி அதிமுகவின் தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு, மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவை, கட்சியின் மூத்த நிர்வாகிகள் போயஸ் தோட்ட இல்லத்தில் நேரில் சந்தித்து வலியுறுத்தினர். இதனைத் தொடர்ந்து சசிகலாவுக்கு மூத்த அமைச்சர்கள் முதல், மாவட்ட நிர்வாகிகள் வரை, அதிமுக பொதுச் செயலராக பதவியேற்குமாறு தொடர்ந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டு வந்தன.

டிசெம்பர் 11 ஆம் திகதி, அதிமுக எம்.பியும் நாடாளுமன்ற துணை சபாநாயகருமான தம்பிதுரை, மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் அரசியல் வாரிசு சசிகலாதான் என்று அறிக்கை வெளியிட்டார்.



### ஜெயலலிதாவின் மனச்சாட்சி

ஜெயலலிதாவின் மனசாட்சியாகவும், அதிமுகவின் அச்சாணியாகவும் விளங்கியவர் சசிகலாதான். அவர்தான் அதிமுகவின் அடுத்த பொதுச்செயலாளர் என்று கட்சியின் செய்தித் தொடர்பாளர் பொன்னையன் தெரிவித்துள்ளார். மேலும், சசிகலாவை பொதுச் செயலராக அதிமுகவினர் விரைவில் தேர்ந்தெடுப்பார்கள். எனவே, அந்தப் பதவியை சசிகலா ஏற்க வேண்டும் என அந்தக் கட்சியின் அமைப்புச் செயலரும், செய்தித் தொடர்பாளருமான சி.பொன்னையன் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே, டிசெம்பர் 16ஆம் திகதி அதிமுகவின் பொதுச் செயலாளராக வி.கே.சசிகலா நடராஜனை தேர்வு செய்வதற்கு தடை விதிக்கக் கோரி, மாநிலங்களவை உறுப்பினர் சசிகலா புஷ்பா சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவரது மனுவுக்கு அதிமுக, தரப்பில் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்புமாறு நீதிமன்றம் உத்தர விட்டது.

ஜெயலலிதாவின் மறைவை அடுத்து, இரங்கல் தெரிவிக்க முன்னர் இலங்கை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், டிசெம்பர் 7ஆம் திகதி சென்னை வந்தார். அப்போது, சசிகலாவை சந்தித்து ஆறுதல் கூறிய ஆறுமுகன் தொண்டமானிடம், கச்சத்தீவு தேவாலயத் திறப்பு விழாவில், குறைந்தது 100 தமிழக மீனவர்களையாவது அனுமதிக்க வேண்டும் என்றும், தனது கோரிக்கையை இலங்கை அதிபரிடம் எடுத்துரைக்க வேண்டும் என்றும் சசிகலா கேட்டுக் கொண்டார்.

சசிகலாவின் கோரிக்கையை, ஆறுமுகன் தொண்டமான், இலங்கை அதிபரிடம் எடுத்துரைத்து, 100 தமிழக மீனவர்களுக்கு அனுமதியும் பெற்றுள்ளார்.

### கச்சதீவுக்கு 100 தமிழக மீனவர்கள்

கச்சத்தீவு தேவாலய திறப்பு விழாவுக்கு 100 தமிழக மீனவர்கள் பங்கேற்க அனுமதி அளித்திருப்பதுதான், அரசியல் வாழ்க்கையில் சசிகலாவுக்குக் கிடைத்திருக்கும் முதல் அங்கீகாரம் என்று கருதப்படுகிறது.

இதற்கிடையே, தேனியைச் சேர்ந்த ஓட்டோ ஓட்டுநர் செந்தில்குமார்-காயத்திரி தம்பதியினர் தங்களது பச்சிளம் பெண் குழந்தையை சசிகலாவிடம் கொடுத்து பெயர் சூட்டுமாறு கூறினர். அந்த குழந்தைக்கு ஜெயலலிதா என்று அவரது தோழி சசிகலா பெயர் சூட்டினார். இதைக் கண்ட அதிமுகவினர் மகிழ்ச்சி அடைந்தனர்.

மேலும் தனது அரசியல் பிரவேசத்துக்கு அச்சாணியாக, முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்ற குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி ஆகியோருக்கு நன்றி தெரிவித்து சசிகலா தனித்தனியே கடிதம் எழுதினார். இந்த நிலையில்தான், டிசெம்பர் 29 ஆம் திகதி மிகவும் பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், அதிமுக பொதுக் குழுக் கூட்டம் சென்னை வானகரம் ஸ்ரீவாரு வெங்கடா சலபதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கண்ணீர் மல்க, ஜெயலலிதாவுக்கு இரங்கல்தெரிவிக்கும்தீர்மானத்தை வாசித்தார்.

அதிமுக பொதுக்குழு கூட்டத்தில் முக்கிய தீர்மானமாக சசிகலா தலைமையின் கீழ் விசுவாசத்துடன் பணியாற்ற உறுதிமொழி ஏற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

> இத்தனை காலமும், ஜெயலலிதாவின் தோழி என்று அறியப்பட்ட சசிகலாவின் குரலைக் கேட்க ஆயிரக் கணக்கான அதிமுக தொண்டர்கள் காத்திருந்தனர். அதிமுக பொதுச் செயலராக பொறுப் பேற்றுக் கொண்ட சசிகலா, அதிமுக தொண்டர்கள் முன்னிலையில் தனது முதல் உரையை நிகழ்த்தினார். கண்ணீர் மல்க அவர் பேசுகையில், நம் அம்மாவுக்கு இந்த இயக்கம் தான் வாழ்க்கை. ஆனால் எனக்கோ அம்மா தான் வாழ்க்கை என்று தனது பேச்சைத் தொடங்கினார். அவரது இந்த பேச்சு அதிமுக தொண்டர்களை உருகச் செய்தது.

### பொதுச் செயலாளராக சசிகலா தெரிவு

பின்னர், அதிமுக பொதுக்குழுக் கூட்டத்தில், அதிமுக பொதுச்செயலராக வி.கே. சசிகலா ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார்.

தொடர்ந்து போயஸ் கார்டன் இல்லத்தில் சசிகலாவை சந்தித்து தீர்மானங்களை பன்னீர்செல்வமும், தம்பிதுரையும் வழங்கினார்கள். அவர்களிடம் அதிமுக பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளதை ஏற்று செயல்பட சசிகலா சம்மதம் தந்துள்ளதாக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

பிறகு, டிசெம்பர் 31ஆம் திகதி அ.தி.மு.க தலைமையகத்தில் நடந்த விழாவில், கட்சியின் பொதுச் செயலராக வி.கே. சசிகலா பொறுப்பேற்றுக் கொண்டார். அதிமுக பொதுச் செயலராக பதவியேற்றுக் கொண்ட சசிகலா, அங்கு, முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் உட்பட, அதிமுக முக்கிய நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இத்தனை காலமும், ஜெயலலிதாவின் தோழி என்று அறியப்பட்ட சசிகலாவின் குரலைக் கேட்க ஆயிரக்கணக்கான அதிமுக தொண்டர்கள் காத்திருந்தனர். அதிமுக பொதுச் செயலராக பொறுப்பேற்றுக் கொண்ட சசிகலா, அதிமுக தொண்டர்கள் முன்னிலையில் தனது முதல் உரையை நிகழ்த்தினார். கண்ணீர் மல்க அவர் பேசுகையில், நம் அம்மாவுக்கு இந்த இயக்கம்தான் வாழ்க்கை. ஆனால் எனக்கோ அம்மாதான் வாழ்க்கை என்று தனது பேச்சைத் தொடங்கினார். அவரது இந்த பேச்சு அதிமுக தொண்டர்களை உருகச் செய்தது.

அதிமுக செயலராக பொறுப்பேற்று, கட்சிப் பணியைத் தொடங்கும் முன்பே, அதிமுக பொதுச் செயலர் சசிகலா, தமிழக முதல்வராக பொறுப்பேற்க வேண்டும் என்று மக்களவை துணை சபாநாயகர் தம்பிதுரை வேண்டுகோள் விடுத்தார்.

புதிய பொறுப்பில், புதிய மரியாதையும் கிடைத்த மகிழ்ச்சியில், மாவட்ட வாரியாக அதிமுக நிர்வாகிகளுடன் ஜனவரி 4ஆம் திகதி முதல் ஆலோசனைக் கூட்டம் நடத்தி வருகிறார் வி.கே.சசிகலா. சென்னை ராயப் பேட்டையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் இந்தக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.





### தி.மு.கவின் செயல் தலைவராக ஸ்ராலின்

இந்த நிலையில், எதிர்க்கட்சி என்று எடுத்துக் கொண்டால், திமுகவின் தலைவர் கருணாநிதி உடல்நிலை காரணமாக, அண்மையில் நடைபெற்ற திமுக பொதுக் குழுவில், கட்சியின் செயல் தலைவராக மு.க. ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்டார்.

பதவியேற்ற நாளிலேயே, முதல்வர் ஓ. பன்னீர்செல்வத்தை சந்தித்து தமிழக பிரச்சினைகள் குறித்துப் பேசினார். கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவரும் நேருக்கு நேர் சந்தித்துப் பேசிக் கொண்டதேயில்லை என்ற விதி உடைக்கப்பட்டது.

தமிழக அரசியல் கலாசாரம் புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது.

*நன்றி - தினமணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** சிலர் சுயநலத்துடன் உங்களுடன் பழக வாய்ப்புண்டு. தொழில் வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிச் சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**இடபம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.



**மிதுனம்:** அன்றாடப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்ப விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.



**கடகம்:** எளிதான பணியும் சுமை போலத் தோன்றும். தொழில் வியாபாரத்தில் அளவான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் சிக்கனம் மூலம், வீட்டுச் செலவைச் சமாளிப்பர்.



**சிங்கம்:** குடும்பப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் உண்டாகும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைத் தவிர்ப்பது நல்லது.







**கன்னி:** வாழ்வில், இனிய அனுபவம் உண்டாகும். பணிகளை நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். லாபம் அதிகரிக்கும். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர்.



**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு நன்மதிப்புப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**விருச்சிகம்:** நல்லவர்கள் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.



**தனுசு:** சுயநலத்துடன் சிலர் உதவ முன்வருவர். கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.



**மகரம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். சிறிய பணி கூட, பல மடங்கு நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.



**கும்பம்:** பின்விளைவு உணர்ந்து பேசுவது நல்லது. நண்பரிடம் உதவி கிடைப்பதில் தாமதம் இருக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களில் செல்ல வேண்டாம்.



**மீனம்:** உறவினரின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 8 | | | |
| | 6 | 1 | | | | 7 | | |
| 9 | | | | | | 5 | | |
| | | 3 | 7 | | 5 | | | |
| | | | | | 9 | | | |
| 8 | 7 | | | | 2 | 4 | 9 | |
| | | | | | | | | 2 |
| 2 | | | | 8 | 1 | | | |
| 1 | | 4 | 3 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 4 | 7 | 5 | 9 | 1 | 6 | 3 |
| 5 | 9 | 1 | 3 | 8 | 6 | 4 | 7 | 2 |
| 6 | 7 | 3 | 1 | 4 | 2 | 8 | 5 | 9 |
| 1 | 5 | 9 | 4 | 6 | 7 | 2 | 3 | 8 |
| 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 6 |
| 9 | 1 | 6 | 5 | 7 | 8 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 5 | 9 | 1 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 4 | 8 | 6 | 2 | 3 | 5 | 9 | 1 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# பொங்கலுக்கு முன்பே வெளியாகும் விஜய்யின் பைரவா



பொங்கல் தினத்தைக் குறி வைத்துப் பல படங்கள் வெளியாகத் தயாராகி வருகின்றன. விஜய் நடிப்பில் உருவாகி வரும் பைரவா படமும் பொங்கல் தினமான வரும் 14 ஆம் திகதி திரைக்கு வருவதற்கான ஆயத்தப் பணிகள் நடந்தேறியுள்ளன.
இந்த நிலையில் படம் முற்றிலுமாக முடிந்து சமீபத்தில் தணிக்கை சான்றிதழுக்காகத் திரையிடப்பட்டது. படத்தைப் பார்த்த தணிக்கை அதிகாரிகள் யூ சான்றிதழ் வழங்கினர். இதையடுத்து பொங்கலுக்கு 2 நாள்களுக்கு முன்னதாகவே அதாவது 12ஆம் திகதியே படத்தை வெளியிட முடிவு செய்துள்ளனர். 165 நிமிடம் திரையில் ஓடும் இந்தப் படம் மொத்தம் ஆயிரத்து 500 தியேட்டர்களில் திரையிடப்படவுள்ளது. 'அழகிய தமிழ் மகன்' பட இயக்குநர் பரதன் இயக்கி உள்ளார். கீர்த்தி சுரேஷ், ஜெகபதி பாபு, டேனியல் பாலாஜி உள்ளிட்டோர் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசை அமைக்கிறார்.



மச்சா எங்க தேடியும் "mouse" காணம்டா

ஞாயிறு காலை எவ்வளவு நேரம் உறங்குகிறோம் என்பதை...



சமையலறையில் இருந்து வரும் கறிக்குழம்பின் வாசமே தீர்மானிக்கிறது...! இதோ எழுந்துட்டேன்...

தண்ணிய சிக்கனமா பயன்படுத்தினா, மனைவி



சிக்கனோடு பயன்படுத்தினா, கணவன்

இண்டைக்கு பள்ளிக்கூடத்தில
வாத்தியார் என்னைப் பிரம்பால அடி
அடீன்னு அடிச்சுட்டாரு!
ஏன் என்ன தப்பு செஞ்சாய்?
33 எழுதச் சொன்னார்!
தெரியலைன்னு முழிச்சேன், சரி 3
போட்டு பக்கத்துல 3 போடச்
சொன்னார்
இது கூட தெரியலையா?
ஒரு 3 போட்டுட்டேன், இன்னொரு
3 ஐ எந்தப் பக்கம் போடணும் எண்டு
கேட்டன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயிலில் அலங்கரிக்கும் நெற்கதிர்கள் அறிமுகமாகியுள்ளன



**இது! புதுசு**

பொங்கலை முன்னிட்டு கலா சார ரீதியில் புதிய பொருள்கள் அறிமுகமாகியுள்ளன. வாயிலில் அலங்கரிக்கும் நெற்கதிர்கள் அறிமுகமாகியுள்ளன. முன்பெல்லாம் ஒரு பிடி நெற் கதிர்கள் வாயிலை அலங்கரித்தன. தற்போது கைவினையாளர்களால் அலங்காரமான விதத்தில் வடிவமைக்கப்பட்டு கிடைக்கின்றன. இவை 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## இடையின் அளவைக் குறைக்கும் எளிய உடற்பயிற்சி



இடையின் அளவை குறைக்க எளிய உடற்பயிற்சிகள் உள்ளது. இந்தப் பயிற்சிகளை தினமும் செய்து வந்தால் விரைவில் நல்ல பயனைக் காணலாம்.


முதலில் விரிப்பில் குப்புற படுக்கவும். பின்னர் காலின் முன் பாதத்தை தரையில் ஊன்றவும், கைகளை முட்டி வரை மடக்கி(படத்தில் உள்ளபடி) தரையில் வைக்கவும். இப்போது உங்கள் உடல் எடை முழுவதையும் கை முட்டி, கால் முன்பாதம் தாங்கியிருக்க வேண்டும். தலையை தரையை பார்த்தபடி வைத்திருக்கவும். பின்னர் மெதுவாக உங்கள் உடலை மேலே தூக்கி பின் கீழே வரவும். இவ்வாறு இடைவிடாமல் 10 விநாடிகள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் போது உடலை வளைக்க கூடாது. உடல் நேராக (படத்தில் உள்ளபடி) இருக்க வேண்டும். பின் சிறிது ஓய்வு எடுத்த பின்னர் மறுபடியும் செய்ய வேண்டும். இவ்வாறு தினமும் 5 நிமிடம் செய்தால் போதுமானது. ஒரு வாரத்தில் உங்கள் இடையின் அளவு 2 அங்குலம் குறைந்திருப்பதைக் காணலாம். இந்த உடற்பயிற்சி வயிறு மற்றும் பின் தசையை, உறுதிப்படுத்துகிறது. இந்தப் பயிற்சியை செய்யும் போது பின் தசைகள், கால்களின் தசைகளை கஷ்ரப்படுத்திச் செய்ய வேண்டும்.

## ஆண்களுக்கான தலையலங்காரம்

1. தலைமுடியை உலர்த்திக் கொள்ளவும்.
2. தேவையான அளவு ஜெல் பூசிக் கொள்ளவும்.
3. பின்னர் தலைமுடியை வாரிக் கொள்ளவும்.

4,5,6. பின்னர் கையினால் மெஸ்ஸி தலை அலங்காரத்தைச் செய்யவும்




# வாழ்க்கையை வசப்படுத்த 9 வழிகள்

*(நேற்றைய தொடர்ச்சி)*

புத்தாண்டு மகிழ்ச்சி வருடம் முழுவதும் மட்டுமல்ல வாழ்க்கை முழுவதும் தொடரவேண்டும் என்றால் நீங்கள் 9 விடயங்களில் உறுதியாக இருக்கவேண்டும்.

எனவே ஒருவர் சிறந்த லட்சியத்தை இலக்காகக் கொண்டு செயற்படுவது தவறல்ல, ஆனால் தனது திறனறிந்து செயற்படுவது முக்கியமாகும்.

**4. எளிமையே பெருமை**

வாழ்க்கைக்கு எளிமை தேவை. அதுபோல் உங்கள் புத்தாண்டுஉறுதிமொழியிலும்எளிமைதென்படவேண்டும். உங்களுக்கு தேவையான வீடோ, வாகனமோ, விலை உயர்ந்த பொருள்களோ வாங்கவேண்டும் என்று தீர்மானிக்கும்போது, அது உங்களுக்கு அத்தியாவசியமானதாக இருக்கவேண்டும். அடுத்தவர்களைப் பார்த்து, அடுத்த வீட்டைப்பார்த்து ஆசைப்பட்டு அதை வாங்கத் தீர்மானிக்கக் கூடாது. பகட்டாக, படாடோபம் காட்டிக் கொள்வதற்காக வரவுக்கு மீறி செலவு செய்வது வாழ்க்கையை இக்கட்டில் கொண்டுபோய்விட்டுவிடும்.

**5. மூழ்கினால் முத்தெடுக்கலாம்**

கடற்கரையில் கால்கடுக்க நின்றால் கிளிஞ்சல்கள் மட்டுமே கிடைக்கும். முத்துகள் கிடைப்பதில்லை. மூழ்கினால்தான் முத்தெடுக்க முடியும். இலக்கை நோக்கிய முயற்சிகளில் மூழ்கிப் போனால் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. திட்டமிட்டுவிட்டு, அந்த இலக்கை அடைய கடுமையாக உழைக்கவேண்டும். உழைப்பில் மூழ்குவதை புத்தாண்டின் சுவாசமாகக் கொள்ளுங்கள். வெற்றி நிச்சயம்.

**6. ஒத்திப்போடவேண்டாம்**

எடுத்த உறுதிமொழியை இன்றே நடைமுறைப்படுத்த முயற்சிசெய்யுங்கள். நாளை தொடங்கப் போவதாக ஒத்திப் போடவேண்டாம். எப்போது முடிவெடுத்து தயாராகி விட்டீர்களோ, அது எந்த தினமாக இருந்தாலும் வேலையை தொடங்கி விடவேண்டியதுதான். நல்ல தொடக்கம்தான் சிறந்த முடிவைத் தரும். எப்போதும் தயார் நிலையில் இருப்பதே வெற்றிக்கு அடிப்படை என்பதை சிந்தனையில் பதிய வையுங்கள்.

**7. குடும்ப ஒருங்கிணைப்பு**

உங்களை எப்போதும் தனிநபராக நினைத்துக்கொண்டிருக்[illegible] சமூகமும் இருக்கிறது என்பதை கருத்திற் கொள்ளுங்கள். உங்கள் லட்சியத்திற்கு பின்னால் தாய், தந்தை, துணைவியர், நட்பு, உறவு, பணியாளர்கள், ஆசிரியர்கள் என்று எவ்வளவோ பேரின் பங்களிப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் தேவைப்படும். எனவே அவர்களுடன் நட்புறவுடன் தொடர்பில் இருப்பது உங்கள் லட்சிய வெற்றியை எளிதாக்கும். அதுபோல் உங்கள் லட்சியமும், வெற்றியும் உங்களுக்கோ, குடும்பத்திற்கோ மட்டுமல்ல சமூகத்திற்கும் பயன்படவேண்டும். அதற்கு தகுந்தவாறு உங்கள் புத்தாண்டு உறுதிமொழி அமையட்டும்.

**8. கொண்டாடுங்கள்**

இலக்கு முக்கியம்தான் அதற்காக கொண்டாட்டங்களை புறம்தள்ள வேண்டாம். ஏனெனில் வெற்றியே கொண்டாட்டத்திற்காகத்தான். எனவே இலக்கின் இடையேயும் கொண்டாட்டங்களில் களிப்புறுங்கள். அது சோம்பலை நீக்கி உங்களை இலக்கை நோக்கி புத்துணர்ச்சியுடன் செயற்பட வைக்கும்.

**9. மாற்றமே நிலையானது**

எதுவும் நிலையானதல்ல, வெற்றியும் நிரந்தரமானதல்ல. சாதனைகள் முறியடிக்கப்படக்கூடியவையே. எனவே தோல்வியில் முடங்கிப்போவதும், வெற்றியில் கர்வம் கொள்வதும் வேண்டாம். மாற்றங்களை ஏற்றுக்கொள்ள, மாற்றங்களுக்கு ஏற்ப ஈடு கொடுக்க, மனதை பக்குவப்படுத்திக் கொண்டால் எதையும் தாங்கி நிலைத்து நிற்கலாம். எதையும் தாங்குவேன் என்ற உறுதிமொழியை இன்றே இப்போதே எடுத்துக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 218 இந்திய மீனவர்களை விடுவித்தது பாகிஸ்தான்

லாகூர், ஜன. 7
நல்லெண்ண அடிப்படையில், சிறையில் அடைக்கப்பட்டிருந்த 218 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் அரசு விடுதலை செய்தது.

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கைது செய்யப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 439 பேரை விடுவிக்க பாகிஸ்தான் அரசு முடிவு செய்தது. முதற்கட்டமாக கடந்த டிசெம்பர் 25ஆம் திகதி பாகிஸ்தானின் மலிர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 220 இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மேலும் 218 இந்திய மீனவர்களை நல்லெண்ண அடிப்படையில் பாகிஸ்தான் விடுதலை செய்தது.

(வ)

**விற்பனைக்குண்டு**
சணல் ஆடுகள், கிடாய், மறி, பாலுடன் கூடிய ஆடுகள், பொம்மேரியன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்கள் விற்பனைக்குண்டு.
077 101 6407

**தவறவிடப்பட்டுள்ளது**
சின்னையா சிறிபுஸ்பநாதன் (NIC No: 611804288V) என்பவருடைய காப்புறுதிப்பத்திரம், வாகனவரிப் பத்திரம், வாகன சாரதி அனுமதிப் பத்திரம், ATM காட் மற்றும் வேறு சில முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
077 625 7942/ 077 138 5231

**வேலையாள்கள் தேவை**
கோண்டாவிலிலுள்ள ஹாட்வெயார் நிறுவனத்துக்கு
ஆண் வேலையாள்கள் தேவை.
அனுபவமுள்ளவர்கள், பழகவிரும்புவர்கள் விரும்பத்தக்கது.
077 252 8957

**உப ஒப்பந்தகாரர் தேவை**
எமது நிறுவனத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலை புரிவதற்கு வேலை ஆள்கள் தேவை.
மேசன்
தச்சு வேலை
தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இல- 076 315 0025

**வேலை ஆள் தேவை**
எமது விநியோகப் பொருள்களை வாகனத்தில் கடைளுக்குச் சென்று வழங்குவதற்கு உதவியாளர் (Sales Boy) தேவை. ஆர்வம்முள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்-
075 943 1018 ,077 501 6217

**பிரத்தியேக வகுப்பு**
தரம் 6 - 11 வரையான தமிழ்மொழி மூல கணித, விஞ்ஞான Group Class புங்கன்குளம் சந்தி அரியாலையில் வசிக்கும் ஆசிரியரின் வீட்டில் நடைபெற உள்ளது.
அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
தொடர்பு: 077 579 2214

**கடை வாடகைக்கு**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் (NSB வங்கிக்கு அருகில்) அமைந்துள்ள கடை வாடகைக்குண்டு.
தொடர்பு: 021 222 8875

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பலசரக்கு வியாபார நிலையத்துக்கு Bill Clerk மற்றும் விற்பனைப் பிரதிநிதி உடன் தேவை. ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
ஆண்கள் மட்டும்.
021 492 3724

**வீடு விற்பனைக்கு உண்டு**
சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் 4 பரப்புக் காணியுடனான புதிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
004 178 806 1139, 077 616 1855


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கந்தசாமி J.P

**(உரிமையாளர் ஸ்ரீவிக்கினேஸ்வரா வவுனியா**
**Srivickneswara Communication, Distributors, Travels & Transport)**
**இளைப்பாறிய கொள்வனவு உத்தியோகத்தர் கரைச்சி வடக்கு ப.நோ.கூ.சங்கம் பரந்தன், முன்னாள் தினபதி பத்திரிகை நிருபர், கிளிநொச்சி மாவட்டம்)**

**பிறப்பு**
**07.06.1952**

**இறப்பு**
**06.01.2017**



யாழ். மந்துவிலைப் பிறப்பிடமாகவும், கண்டாவளை மற்றும் வவுனியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று (06.01.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சிவமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவாகரன் (கனடா), சிறிகரன் (சுவீடன்), Dr. நிலூஜா (ஆதார வைத்தியசாலை - சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம் பிள்ளை, நாகராசா, நகுலேஸ்வரன் (நகுலன்) மற்றும் நாகேஸ்வரி (ஜேர்மனி), சற்குணம் (நோர்வே), மலர்விழி (கனடா), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அஜந்தா (கனடா), பிரிதா (சுவீடன்), Dr. றிஷான் (ஆதார வைத்தியசாலை - சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜா, அனாமிக்கா, மித்திரா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் வவுனியாவில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மதியம் கண்டாவளை கோணங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**சற்குணம் (மோகன் - 077 364 8163)**
**Dr. றிஷான் (077 790 2797)**
**இந்திரன் ( 0049 302614735)**

**219, நாவலர் வீதி (மாடசாமி கோயிலடி), பண்டாரிக்குளம், வவுனியா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ORIENTATION PROGRAMME FOR THE FRESHER'S ACADEMIC YEAR 2015 / 2016


The Orientation programme for the Fresher's from Faculty of Management Studies and Commerce will be commenced on 16th of January 2017, at 9.00 am, in the Faculty of Management Studies & Commerce.

The programme will be scheduled from 16th January 2017 to 20th of January 2017.

Registrar
University of Jaffna.
**06.01.2017** (C/27618) (11,17,18)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் கிருபவராஜா



உடுவில் தெற்கு, புதுமடம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் கிருபவராஜா லண்டனில் (05.01.2017) காலமானார்.

அன்னார் பாலசிங்கம் காலஞ்சென்ற தர்மபூபதி தம்பதியரின் மகனும் காலஞ் சென்ற பொன்னுத்துரை தம்பதியரின் மருமகனும் உரும்பிராயை பிறப்பிடமாக கொண்ட விவேகினியின் கணவரும் குஷானி, தனுயா, விதுயா, அனுயா ஆகியோரின் தந்தையும் சத்யாதேவி, சசிகலாதேவி காலஞ்சென்ற புவனேந்திரராஜா மற்றும் நித்தியாதேவி, தர்மபாலினி, சுயேந்தன் ஆகியோரின் சகோதரரும் செல்வராஜா காலஞ்சென்ற மாங்களேஸ்வரன் (பேபி) மற்றும் ஶ்ரீஷனி, ஜெயானந்தன், பவயாதேவி ஆகியோரின் மைத்துனரும் பரமசிவம், தங்கரத்தினம் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குளப்பிட்டி சந்தி, கொக்குவில்.**
**021 205 2751,**
**078 552 3231**

**தகவல்: குடும்பத்தினர்.**
**மாங்களேஸ்வரன் சசிகலாதேவி**
**(பேபி - சகோதரி)**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
28
✝
05
✝
1942



**மறைவு**
04
✝
01
✝
2017

### ஜோசப் ஜஸ்ரின் றெஜிஸ் (நாதன்)
**(உரிமையாளர் - G.R.Publications)**

மன்னார், சின்னக்கடையைப் பிறப்பிடமாகவும் தெஹிவளையை வசிப்பிடமாகவும் வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த ஜோசப் ஜஸ்ரின் றெஜிஸ் அவர்கள் 04.01.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நிக்கிலாப்பிள்ளை ஜோசப்-மேரி ஜோசப் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை-மேரி ஜோசப்பின் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஆன் கிறேஸ் றெஜிஸ் அவர்களின் அன்புக் கணவரும் வின்டன் லங்கேஸ், செல்ரன் பிரதீஸ், மெடிலின், நிரோஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜீ, வினர்ஜிதா ஆகியோரின் மாமனாரும் ஹட்சன், கெர்யீசன், கியோஷா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வராணி, அன்ரன், ராஜன் மற்றும் புனிதம், வசந்தா, ராஜேஸ், கிறிஸ்ரியன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற சவுந்தரநாயகம் மற்றும் செல்வராணி, றெஜினாகமலம், தங்கராசா, மரியதாஸ், யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (07.01.2017) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் சில்லாலை சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள்** தொடர்பு : **071 481 6959**

## கண்ணீர் அஞ்சலி



கைதடியை வசிப்பிடமாகக் கொண்ட
**திருமதி Dr. றாஜினி ஶ்ரீகஜன்**
அவர்களின் அன்புச்சகோதரி
**திருமதி மாலினி**
**சுபாச்சந்திரன்**
அவர்கள் ஜேர்மனியில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**சுமித்திரன் ஸ்ரோர்ஸ்,**
**கைதடி கிழக்கு.**

**விஸ்வநாதர் குடும்பம்,**
**பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி

**மன்ற உறுப்பினர்**
**திரு.கைலைநாதன் கார்த்திக்** அவர்களின்
(V.V.எலெக்ரிக்கல்ஸ் - நுணாவில் கிழக்கு சாவகச்சேரி)
பாசமிகு தந்தையார்
**பரமசாமி கைலைநாதன்**
அவர்கள் 06.01.2017 அன்று காலமானார். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு மன்றம் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது. (c 27620) (14,17,18)
**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கைலைநாதன்



அளவெட்டியைப்பிறப்பிடமாகவும், வடலியடைப்பை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கைலைநாதன் கடந்த06.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம் - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் செல்லத்துரை - ஞானம்மா தம்பதியரின் அன்புமருமகனும் புஸ்பராணியின் அன்புக்கணவரும் கல்பனா(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சதீஷ் (நிர்வாக உத்தியோகத்தர், இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம், கிளிநொச்சி), சோபனா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயச்சந்திரனின் சகோதரனும் நிரஞ்சன்(முறு), சுபேந்திரன் (கனடா), ஆகியோரின் மாமனாரும் ஆத்வீகன், அனுஸ்கா, பிரகவி ஆகியோரின் பேரனும் புவனராணி, காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் தெய்வேந்திரன், புவனேந்திரன் காலஞ்சென்ற விமலேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சதீஷ் (மகன்)**

## நினைவஞ்சலி

**7 ஆம் ஆண்டு**

மண்ணில்
03
05
1922



விண்ணில்
05
01
2010

**அமரர் கணபதிப்பிள்ளை**
**சபாரத்தினம்**

**42 ஆம் ஆண்டு**

மண்ணில்
16
03
1927



விண்ணில்
22
12
1974

**திருமதி கனகா ம்பிகை**
**சபாரத்தி ம்**

மேதினியில் நேர்மையுடன் வாழும் வகை
சொல்லித் தந்தீர் !
துன்பத்திலும் துயரத்திலும் மீண்டு வரும்
வலிமை தந்தீர் !
அம்மா என அழைத்து வருடங்கள் 42 !
ஆனாலும் எங்கள் நினைவுகள் எங்களை
வருடி நிற்கும் !
எத்தனை வருடங்கள் ஆனாலும் பப்பா
... எங்களை
வழி நடத்தும் !!

திலகவாசம்
...
சாவகச்சேரி.

...டும்பத்தினர்
...5, கல்லடி வீதி.
சாவகச்சேரி.

# சுரங்கப் பணியாளர்கள் 13 பேர் படுகொலை



காபூல், ஜன. 7
பயங்கரவாதத் தாக்குதல் ஒன்றில் 13 நிலக்கரி சுரங்க பணியாளர்களை கிளர்ச்சியாளர்கள் கொன்றுள்ளதாக காபூலின் வடக்கே உள்ள பால்கன் மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், மூன்றுபேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்கள் ஹஸாரா என்ற சிறுபான்மை இனத்தை சேர்ந்தவர்கள் என்று மாகாண ஆளுநரின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஹஸாரா சிறுபான்மையின மக்கள் ஷியா பிரிவைச் சேர்ந்தவர்கள். பயங்கரவாதிகளால் நடத்தப்படும் தாக்குதல்களுக்குப் பெரும்பாலும் ஹஸாரா சிறுபான்மையினர் இலக்காகின்றனர்.

இந்தச் சமீபத்திய கொலைகளுக்கு அதிகாரிகள் சிலர் ஐ.எஸ் தீவிரவாதிகளை குற்றஞ்சாட்டியுள்ளனர். ஆனால், இதுவரை இந்தச் கொலைச் சம்பவத்துக்கு யாரும் பொறுப்பேற்கவில்லை.

(வ)

# ஐவரிகோஸ்டின் இரு நகரங்களில் ராணுவத்தினர் கலகம்

புவாக்கே, ஜன. 7
ஐவரிகோஸ்டில் உள்ள இரு பெரும் நகரங்களான புவாக்கே மற்றும் டாலோவில் இராணுவப் படையினர், அரசுக்கு கீழ்படிய மறுத்துள்ள நிலையில், அந்த நாட்டின் அதிபர் அலாசான் உட்டாரா பாதுகாப்புப் படைத் தளபதிகளுடன் அவரச ஆலோசனை நடத்தி வருகிறார்.

குஹாஹோகோ என்ற மூன்றாவது நகரத்தின் சாலைகளிலும் படையினர் உள்ளனர். ஆனால், அவர்கள் போராடுகிறார்களா? அல்லது போராட்டத்தைத் தடுக்க வந்திருக்கிறார்களா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

படையினருக்கு பணத்தேவை இருப்பதாக புவாக்கேவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ஆனால், அதை உறுதிப்படுத்த முடியவில்லை என்றும், காரணம் அவர்களிடத்தில் தலைவர்கள் என யாருமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரைத் தொடர்ந்து, நுவெல்ஸ் என்றபோராளிக்குழுக்களை சேர்ந்த உறுப்பினர்கள் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதாகவும், தற்போது அரசுக்கு கீழ்படிய மறுக்கும் பெரும்பாலான படையினர் அந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிகாட்டி

VALIKAADDY

நடாத்தும்

## உயர்தர பாடத் தெரிவு வழிகாட்டி



பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளின்
உயர்கல்வித் திட்டமிடலை
சரியாக மேற்கொள்ளுங்கள்.

மாணவர்களே! உங்களுக்கு
வழிகாட்ட கல்வியின்
சிகரங்கள் காத்திருக்கிறார்கள்

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு

**அனுமதி இலவசம்**

இடம் :- யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் :- 12.01.2017 வியாழக்கிழமை
நேரம் :- காலை 8.30 மணி

**முற்பதிவு அவசியம் 071 8 691 691**

உயர்தர வழிகாட்டி கருத்தரங்கை வழிநடாத்த உள்ள வளவாளர்கள் விபரம்

உயிரியல் பிரிவு
Biology stream
Dr.P.Sevvel
Senior lecturer
Department of botany,
University of Jaffna.

வணிகவியல் பிரிவு
Commerce stream
Prof.T.Velnampy
Dean,
Faculty of Business Management,
University Of Jaffna

தொழில்நுட்ப பிரிவு
Technology stream
Prof.K.Kandasamy (Rtd.)
Senior Professor of Physics,
Consultant,
Faculty of Technology,
University Of Jaffna


கலைப் பிரிவு
Arts stream
N.Piratheeparajah
Senior Lecturer
Department of Geography
University of Jaffna

கணித பிரிவு
Maths stream
Prof.P.Ravirajan
Professor in Physics
Former Head of Physics
Director-Staff Development Centre,
University of Jaffna

"கல்வியே வாழ்க்கையின் வழிகாட்டி"

பிரதான அனுசரணை: Mobitel We Care. Always.
இணை அனுசரணை: BCAS CAMPUS Jaffna Campus
ஊடக அனுசரணை: உதயன்

## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் நவரத்தினம்** (சாரதி)

(திதி: நவமி (07.01.2017)
சனிக்கிழமை

தோற்றம்
07.02.1945

மறைவு
2012.12.21

அன்புடனே பேசி அரவணைத்து
பண்புடனே எம்மை வளர்த்து
பாச மழை பொழிந்து
பார்புகழ வாழ வைத்தீர்!
ஊர் போற்ற உத்தமனாய்
உறவுகள் சூழ வாழ்ந்தீர்கள்
ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டுகள் நான்கு சென்றதுவோ!
என்றும் நாம் மறவோம்
உம் நினைவால் வாழ்ந்திருப்போம்.

காளி கோயிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

## நல்லையா பரம்சோதி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1945.04.07 | 2017.01.06 |

புளியங்கூடலைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா பரம்சோதி 06.01.2017 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான பரமலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராதேவியின் அன்புக் கணவரும் பார்த்தீபன், காண்டீபன், பிரதீபன், ஆதீபன், குணதீபன், மகா தீபன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவசோதி, ஆனந்தசோதி காலஞ்சென்ற அருட்சோதி மற்றும் ஈஸ்வரகௌரி, சிவகாம ஈஸ்வரி, திருவருட்செல்வன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் லிங்கேஸ்வரி, சுகந்தினி, இந்துஜா, லவப்பிரியா, தற்பரா, தர்ஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் நல்லசேகரம், தெய்வேந்திரம், மனோராணி, விஜயலட்சுமி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் ஜெயந்தி காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்புமைத்துனரும் தீபிகா, லாகவி, தீபனா, கஜீபனா, தீபஜன், அபிலயன், அபிராம், கிருத்திகன், மசிபன், ஆராதனி, தர்வீன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் புளியங்கூடலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் சுருவில் இந்து மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(ஜே/7360)(17.19.20)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 . 06 . 1922 | 05 . 01 . 2017 |

## திருமதி பொன்னம்மா கந்தையா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல்லை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா கந்தையா 05.01.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் கந்தையா (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திரு.திருமதி அருளம்பலம் - தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், கனகம்மா, நாகரத்தினம் மற்றும் இராமநாதன் (ஓய்வுநிலை அதிபர் - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான புனிதமணி, சுந்தர்ராஜா மற்றும் கனகம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி பா.சிவபாக்கியம், திருமதி சு.சரஸ்வதி, திரு.க.சிவபாதம், திருமதி க.சரோஜாதேவி, திருமதி நா.புஸ்பராணி, திருமதி நா.மணிமேகலை, திருமதி த.சந்திரவதனா, செல்வி க.பராசக்தி, திரு.க.வசந்தகுமார், திரு.க.தவபாதம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான திரு.ச.பாலசிங்கம், திரு.வே.சுந்தரலிங்கம் மற்றும் சி.லீலாவதி, து.கனகரத்தினம், நா.நாகதேவன், க.நாகேஸ்வரன், க.தர்மலிங்கம், வ.நிரஞ்சனி, த.சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்குப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அவரின் இல்லத்திலிருந்து தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.66, அண்ணாவீதி,
தோணிக்கல்,
வவுனியா.

(V/193)
(11,17,18)

தகவல்: து.கனகரத்தினம்
(முன்னாள் பால் சேகரிப்பு நிலைய முகாமையாளர் - ப.நோ.கூ.ச.வவுனியா) மற்றும்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளை.

**024 222 2289, 075 038 1389**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலை அதிகரிப்பால் மெக்சிகோவில் பயங்கரக் கலவரம்

மெக்சிக்கோ சிற்றி, ஜன. 7
மெக்சிகோ அரசு எரிபொருள் விலையை 20 சதவீதம் உயர்த்தியதையடுத்து அந்த நாட்டில் பரவலாக பயங்கரக் கலவரம் வெடித்து, கடைகள் அடித்து நொறுக்கப்பட்டதோடு பல வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டன.

இந்தியா உள்ளிட்ட மற்ற நாடுகளைப் போலவே அமெரிக்காவின் ஐ.எம்.எஃப். மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் நெருக்குதலுக்கேற்ப எரிபொருள் மானியங்களைக் குறைத்து விலைகளை பன்னாட்டுச் சந்தைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் கட்டுப்பாட்டுத் தளர்வு நடைமுறையை மெக்சிகோவும் கடைப்பிடித்தது.

இதனையடுத்து கடந்த வார இறுதியில் எரிபொருளின் விலை 20 சதவீதம் அதிகரிக்கப்பட்டது, இது மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்த ஆங்காங்கே பயங்கரக் கலவரம் வெடித்தது, 300க்கும் மேற்பட்ட கடைகள் சூறையாடப்பட்டு அடித்து நொறுக்கப்பட்டன. இந்தக் கலவரங்களில் 4 பேர் உயிரிழந்ததுடன், சுமார் 700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பன்னாட்டு விலைகளுக்கு ஏற்ப எரிபொருளின் விலையை அதிகரிப்பது கடினமான முடிவுதான். ஆனால் ஒரு அதிபராக கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன். ஏனெனில் எதிர்காலத்தில் இதை விட மோசமான விளைவுகள் ஏற்படாமல் தடுக்கவே. எரிபொருள் விலையை செயற்கையாக குறைவாக வைத்திருப்பது ஏழை மெக்சிகர்களிடமிருந்து பணத்தை பறித்து அதிகம் பணம் உள்ளவர்களிடம் கொடுப்பதற்குச் சமமாகும் என்று மக்களின் கோபத்தை அங்கீகரித்து அதிபர் என்றிக் பெனா நியட்டோ தெரிவித்தார். (வ-5)

# விவசாயிகளைக் காக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## தமிழக அரசு பதில் அளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு



விவசாயிகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு 4 வாரத்தில் பதில் வழங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

தமிழகத்தில் சமீபகாலமாக விவசாயிகள் தற்கொலை குறித்த செய்திகள் அதிகம் வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளாக வட கிழக்கு, தென்மேற்கு பருவ மழை பொய்த்து விட்டதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயத்துக்காக வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத காரணத்தாலேயே அவர்கள் தற்கொலை என்ற முடிவுக்கு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் தற்கொலைகள் அதிகம் நடந்துள்ளன. விவசாயத்தில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தவறுவதும் இதற்குக் காரணம். தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்கள் கருகியுள்ளன. விவசாயிகளுக்கு உரிய இழப்பீடும் வழங்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகிறது.

குறித்த விடயம் தொடர்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரப்பட்டுள்ளது. வழக்கின் விசாரணை நேற்று வந்தது. இதன்போதே விவசாயிகளைப் பாதுகாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு 4 வாரத்தில் பதில் வழங்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களைக் கண்டறிந்து நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்க மாவட்டந்தோறும் நிபுணர் குழு அமைக்க வேண்டும். பருவமழை தவறினால் பயிர்களைக் காக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். நவீன தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வறட்சியைச் சமாளிக்க சொட்டுநீர் பாசனத்தை அரசு ஊக்குவிக்க வேண்டும் என்றும் தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதி எஸ்.கே.கவுல், நீதிபதி எம்.சுந்தர் அடங்கிய குழு வழக்கின் விசாரணையை பெப்ரவரி 14 ஆம் திகதிக்குப் பிற்போட்டனர். (ம)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## இறக்குமதி...

வழங்கப்பட்டது. உருளைக்கிழங்குச் செய்கையானது 88.87 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படவுள்ளது.

உடுவில், கோப்பாய், தெல்லிப்பழைப் பிரதேச செயலகங்கள் மூலம் 75 சமுர்த்திப் பயனாளிகளுக்கு 12.25 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டு 6.125 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்குச் செய்கையின் சராசரி விளைச்சல் ஒரு ஹெக்ரேயருக்கு 16 மெற்றிக்தொன். இந்தச் செய்கை மூலம் ஆயிரத்து 519.92 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்த மாதம் முதலாம் வாரத்தில் ஆரம்பமாகி மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரையும் உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படும்.

இலங்கையில் மாதமொன்றுக்கு 13 ஆயிரத்து 738 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு தேவையாகவுள்ளது. எமது நாட்டுக்கு நுகர்வுக்காக இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு இரு மாதங்கள் வரை களஞ்சியப்படுத்தப்பட்டுச் சந்தைப்படுத்தலுக்காக விநியோகம் செய்யப்படுவது வழமையாகும்.

யாழ். மாவட்டத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்குக்கு நியாயமான சந்தை விலையைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக உருளைக்கிழங்கு மீதான இறக்குமதி வரியைப் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை அதிகரிப்பது எமது உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு மிகவும் பொருத்தமானதாக அமையும்.

வெங்காயச் செய்கையானது பெரும் போகத்தில் 600 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வெங்காயச் செய்கையின் சராசரி விளைச்சல் ஹெக்ரேயருக்கு 15 மெற்றிக்தொன். 9 ஆயிரம் மெற்றிக்தொன் வெங்காயம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்ப்பார்க்கப்படுகின்றது. பெப்ரவரி மாதம் 2 ஆம் வாரத்தில் ஆரம்பமாகி மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை வெங்காயச் செய்கையின் அறுவடை நடைபெறும். மாதமொன்றுக்கு 12 ஆயிரத்து 405 மெற்றிக்தொன் வெங்காயம் தேவையாகவுள்ளது. சாதாரணமாக எமது நாட்டுக்கு நுகர்வுக்காக இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு மாதம் வரை களஞ்சியப்படுத்தப்பட்டுச் சந்தைப்படுத்தலுக்காக விநியோகம் செய்யப்படுவது வழக்கம்.

யாழ். மாவட்டத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் வெங்காயத்துக்கு நியாயமான சந்தை விலையைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக வெங்காயம் மீதான இறக்குமதி வரியை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை அதிகரிப்பது வெங்காய உற்பத்தியாளர்களுக்குப் பொருத்தமானதாக அமையும்.

எனவே உருளைக் கிழக்கு மற்றும் வெங்காயம் மீதான வரியை அதிகரிக்கவேண்டும்- என்றுள்ளது. (த-5-10)

## ஹுசைனுக்கு...

இலங்கை அரசு தெரிவித்துள்ளது. 'உள்நாட்டு விவகாரத்தைத் தீர்ப்பதற்குப் பன்னாட்டு நீதிபதிகள் தேவையில்லை. விசாரணைப் பொறிமுறையில் பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்பு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது' என்று நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார்.

பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு விசாரணை நீதிமன்றத்தை அமைக்க, நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வு செயலணியின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று அரசின் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித தெரிவித்திருந்தார். இலங்கை அரசின் நிலைப்பாட்டை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு உடனடியாகவே பதிலடி கொடுத்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர், தனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை என்றும், பன்னாட்டு நீதிபதிகள் என்ற பரிந்துரையை வரவேற்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னரும், இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை மாற்றவில்லை.

நீதி அமைச்சர் விஜயதாச தெரிவித்ததாவது:
பன்னாட்டு நீதிபதிகளை விசாரணைகளில் உள்ளடக்குவதற்கு நாம் தயாராக இல்லை. இன்னமும் செயலணியின் அறிக்கையை நான் முழுமையாகப் படிக்கவில்லை. பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதில்லை என்ற தெளிவான நிலைப்பாட்டை அரசு கொண்டுள்ளது. பன்னாட்டு நீதிபதிகளை விசாரணையில் இணைப்பதற்கு அரசமைப்பில் இடமில்லை.

பன்னாட்டு நீதிபதிகளை அழைத்து எமது நீதிபதிகளின் தரத்தைக் குறைத்து விட முடியாது. உலகின் எந்த நாட்டு நீதிபதிகளையும் விட, எந்த வகையிலும் எமது நாட்டு நீதிபதிகள் குறைவானவர்கள் அல்லர். பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு எமது பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியம் இல்லை. அதனை நோக்கி நாம் செல்லவும்மாட்டோம் - என்றார். (த-5)

## அடுத்த...

அடுத்த வாரத்திலிருந்து இலங்கைக்கு நிரந்தரமாகக் கிடைக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டி, ஹல்ஒலுவ, தொடங்வல பிரதேசத்தில் அமைக்கப்பட்ட பாலத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வில் பங்குபற்றி உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
முன்னோக்கிச் செல்வதற்குக் காணப்பட்ட அனைத்துத் தடைகளையும் நீக்கி, பல்வேறு நாடுகளுடனும் நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு கடந்த இரு வருடங்களில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் அனுகூலங்கள் தற்போது நாட்டுக்குக் கிடைக்க ஆரம்பித்துள்ளன.

அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது போலவே அதனுடன் நாட்டுக்குக் கிடைத்துள்ள கடன் சுமை தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டியுள்ளது. பெரியளவிலான கடன் உதவிகளைப் பெற்று அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்திப் பிரபல்யமடைவதற்குத் தற்போதைய அரசினாலும் முடியுமான போதிலும் அதனூடாகப் பெரிய கடன் சுமையை நாட்டுக்கு உரித்தாக்கி நாட்டின் எதிர்காலத்தை இருளாக்குவதற்கு எனது அரசு ஒரு போதும் தயாராக இல்லை. பெரியளவிலான கடன் சுமையினால் உலகின் ஏனைய சில நாடுகள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும் - என்றார். (த-5)

## கூட்டமைப்பு...

இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் சில வீதிகளில் ஆங்காங்கே நேற்று எறியப்பட்டுள்ளன.

'ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு' என்று குறிப்பிடப்பட்டு துண்டுப் பிரசுரங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் இனந்தெரியாதோரால் வீசப்பட்டுள்ளன.

தமிழர் தாயகத்தைத் துண்டாடும் வகையில் நாடாளுமன்றத்திலோ, புதிய அரசமைப்பின் வாக்கெடுப்பின்போதோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்திலோ வாக்களிக்கக் கூடாது. இதனை மீறி வாக்களித்தால் போர் மூளும் என்று அந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5-35)

## வடக்குப்...

மூவினங்களைச் சேர்ந்த மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் சமயத் தலைவர்களின் பங்களிப்புடன் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## ஒற்றையாட்சிக்குள்...

ஒவ்வொருவரினதும் கருத்துக்களை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டார்.

வடக்கு - கிழக்கு இணைப்பை உள்ளடக்கிய தீர்வு அடைய வேண்டும். ஒற்றையாட்சிக்குள் தீர்வைப் பெற்றுக் கொள்ளக் கூடாது.

வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கின்ற இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் அங்கு பேசப்படும் விடயங்கள் தொடர்பில் எமக்கு எதுவும் தெரிவிப்பதில்லை. ஒற்றையாட்சியைத் தாண்டிய தீர்வில்லை, பௌத்தத்துக்கே முன்னுரிமை என்று சிங்களத் தலைவர்கள் பத்திரிகைகள் ஊடாகத் தொடர்ச்சியாகச் சொல்லி வருகின்றனர். உண்மையில் என்ன பேசப்படுகின்றது என்பது தெரியப்படுத்தப்பட வேண்டும்.

வழிநடத்தல் குழுவில் பேசப்படுவதற்கு அப்பால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் - அரசுக்கும் இடையில் பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வழி நடத்தல் குழுவில் இதுவரையில் பேசப்பட்ட விடயங்களைத் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வழி நடத்தல் குழுவில் தெரியப்படுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டார். வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கின்ற சில கட்சிகள் அதிலிருந்து வெளியேறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்கின்றன என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

ஒற்றையாட்சிக்குள் ஒருபோதும் தீர்வை ஏற்க மாட்டோம். இது எமது தெளிவான நிலைப்பாடு. அரசுக்கும் அழுத்தமாகச் சொல்லியுள்ளோம். வழிநடத்தல் குழுவிலும் தெரிவித்துள்ளோம். வடக்கு-கிழக்கு இணைப்பை விட, இதனைப் பற்றி பேசுவதற்கே முஸ்லிம்கள் ஆயத்தமாக இல்லை. இந்த விடயத்தில் நீண்ட பேச்சு நடத்த வேண்டியிருக்கின்றது. பௌத்தத்துக்கு முன்னுரிமை தொடர்பிலும் வழிநடத்தல் குழுவில் பேசப்பட்டு வருகின்றது. சில உணர்ச்சிகர விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நல்ல விடயங்களை இழக்கக் கூடாது. வழி நடத்தல் குழுவில் பல விடயங்கள் எங்களுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது. இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கின்றது என்று இரா. சம்பந்தன் தெரிவித்தார். (வ-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னாட்டு...

செயலணியின் மக்கள் கருத்தறியும் அறிக்கை
இதனையே வெளிக்காட்டியிருக்கின்றது.
அந்த அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்
டமைப்பு முழுமையாக வரவேற்பதாகத் தெரி
வித்துள்ளது.

நல்லிணக்கக் கலந்தாலோசனைச் செய
லணியின் மக்கள் கருத்தறியும் குழுவின்
அறிக்கை கடந்த 3ஆம் திகதி இரவு அரசிடம்
கையளிக்கப்பட்டது. அறிக்கை தொடர்பில்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்
டைக் கேட்டபோது, அந்தக் கட்சியின் பேச்
சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தெற்கு மக்
களுக்கும் உள்நாட்டு நீதிபதிகள் மீது நம்
பிக்கையில்லை. பன்னாட்டுப் பங்களிப்
பையே அவர்களும் விரும்புகின்றனர்.
விசாரணைப் பொறிமுறையில் தமிழ் மொழி
தெரிந்த நீதிபதிகளும் உள்ளடக்கப்பட
வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்
துள்ளனர்.

ஜெனிவாவில் 2015ஆம் ஆண்டு இலங்கை
யின் இணை அனுசரணையில் கலப்பு விசா
ரணைப் பொறிமுறையை வலியுறுத்திய
தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டமைப்பு
அந்த அறிக்கை வருவதற்கு முன்னரே கலப்
புப் பொறிமுறையை வலியுறுத்தியிருந்தது.
இதனை அறியாதவர்கள் பலர், கூட்டமைப்
புக்கு எதிராக விமர்சனங்கள் – எதிர்ப்புக்களை
முன்வைத்தனர். ஐ.நா. மனித உரிமைகள்
சபையின் அறிக்கையில் கலப்பு நீதிமன்றப்
பொறிமுறை தொடர்பாகத் தெளிவாகக்
குறிப்பிடப்பட்டுள்ளது.

பன்னாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்படாத
விசாரணை சாத்தியமற்றது. கலப்புப் பொறி
முறையைப் பரிந்துரைத்த ஐ.நா. மனித
உரிமைகள் சபை உள்ளகப் பொறிமுறையை
ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மா
னம், மக்கள் கருத்து, அதனை அடியொற்றி
அமைந்த நல்லிணக்கச் செயலணியின்
அறிக்கையை முழுமையாக வரவேற்கின்
றோம். ஐ.நா. மனித உரிமைகள் சபையின்
தீர்மானத்தில் சொல்லப்பட்டதைப் போன்று,
நல்லிணக்கச் செயலணியின் பரிந்துரை
யில் குறிப்பிட்டவாறு கலப்பு நீதிமன்றப்
பொறிமுறை அமைக்கப்பட்டு விசாரணை
நடைபெறவேண்டும். அதற்கு அழுத்தம்
கொடுப்போம் – என்றார். (த-5-101)

## மகிந்தவை...

சுதந்திரக் கட்சி ஒன்றுபடும். அப்படியில்லாது
எம்மை ஒன்றிணைய வருமாறு அழைப்ப
தில் அர்த்தமில்லை.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற
உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில்
சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப்
பிரிந்து நின்றது. 2015ஆம் ஆண்டு
நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்தே
போட்டியிட்டது. ஏதோவொரு அடிப்படையில்
நாம் ஒன்றிணைந்து நிற்கவேண்டும் என்ற
நோக்கிலேயே அவ்வாறு செய்யப்பட்டது.
நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி செய்
ததை நாம் அறிவோம்.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் ஆள்கள் நாம்
ஒன்றிணைவோம் என்று கூறிக்கொண்டு
வெள்ளைக் கொடியை ஏந்துகின்றனர். இது
சரிவராது. அவரது தரப்பில் நம்பிக்கையைக்
கட்டியெழுப்பாது நாம் ஒற்றுமைப்பட முடியாது.
அப்படியான நம்பிக்கையைக் கட்டியெழுப்
பும் நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை.
மைத்திரி 2020 இல் ஜனாதிபதித் தேர்தலில்
போட்டியிடும் திட்டத்தில் இருக்கின்றார். அப்
படி இல்லை என்று அவர் மறுக்கின்றார்.
அப்படியென்றால் ஏன் அவர் சுதந்திரக் கட்சி
யைக் கட்டிப் பிடித்துக்கொண்டு இருக்க
வேண்டும்? இதில் இருந்து விளங்குகிறது.
ஜனாதிபதித் தேர்தலில் அவர் மீண்டும்
போட்டியிடப் போகின்றார்.

உண்மையில் அவர் மீண்டும் போட்டியிடும்
திட்டத்தில் இருந்தால் அவர் அப்போது மகிந்த
ராஜபக்சவைத்தான் பிரதமராக்க வேண்டும்.
மகிந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவ
தில்லை என்று முடிவெடுத்துள்ளதால் பிரத
மர் ப்தவிக்கு அவர் தகுதியானவர்.

வேறு ஒருவரைப் பிரதமராக்குவதற்கு மைத்
திரி முடிவெடுத்தால் மகிந்த ஜனாதிபதித்
தேர்தலில் போட்டியிடும் நிலை ஏற்படலாம்.
மைத்திரியால் தொடர்ந்தும் ரணில் தரப்புடன்
கூட்டாட்சியை நடத்திச்செல்ல முடியாது.
அவர் ரணிலுக்கு எதிரான தரப்பில் இணைந்
தால்தான் அவரின் அடுத்த ஜனாதிபதி
கனவு நிறைவேறும்.

இருந்தாலும், ரணிலுக்கு எதிரான தரப்புடன்
பொய்யாக உறவை ஏற்படுத்த முடியாது.
திறந்த மனதுடன் அந்த ஒற்றுமையைக்
கட்டி யெழுப்பவேண்டும். நம்பிக்கையை
ஏற் படுத்தவேண்டும் – என்றார். (த-5)

## காணி...

சேர்ந்த பிக்குகள் சூளுரைத்துள்ளனர்.

சிறிலங்கா ஐக்கிய பிக்குகள் சங்கத்தின்
கண்டிக் கிளையை ஆரம்பித்து வைக்கும்
நிகழ்வு நேற்று முன்தினம் அஸ்கிரிய மகா
விகாரையின் சிறி சந்திரானந்த மகா
நாயக்கர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடை
பெற்றது.

மல்வத்த பீடத்தின் இரண்டாவது இடத்தி
லுள்ள மகாநாயக்கரான திம்புல்கும்புரே விம
லானந்த தேரர் தெரிவித்ததாவது:

முன்னர் அரச சார்பற்ற பன்னாட்டு அமைப்
புக்கள் இலங்கைக்கு வந்து மக்களுக்குச்
சில நிவாரணங்களை வழங்கின. இன்று
அவர்கள் வித்தியாசமான செயற்பாடுகளை
இங்கு செய்கின்றனர். இங்கு வந்து நாட்டில்
சட்டங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.
நாட்டுக்கு அவசியமான சட்டங்களை
அல்ல. வெளிநாடுகளுக்குத் தேவையான
சட்டங்களையே அவர்கள் இயற்றுவதற்கு
ஆரம்பித்துள்ளனர். எமது நாட்டின் அரசி
யல்வாதிகளும், அமைச்சர்களுமே சட்டங்
களை நன்று தெரிந்து வைத்துள்ளனர். நாட்
டிலுள்ள பாமர மக்கள், இவர்கள் முன்வைக்
கின்ற எல்லா விடயங்களும் சரி என்று அறி
யாமல் கையை உயர்த்தி ஆதரிப்பது எவ்
வாறு? இது பெருந் தவறாகும். ஜே.ஆர். ஜய
வர்த்தன அன்று உறுப்பினர்களின் கையெ
ழுத்துக்களைப் பலவந்தமாகப் பெற்று
தனது பையில் இட்டுக்கொண்டு, ஊரடங்குச்
சட்டத்தை நடைமுறைப்படுத்தித் தற்
போதுள்ள அரசமைப்பை நிறைவேற்றி
யிருந்தார். இன்று பெரிய மாற்றங்களைச்
செய்து மிகவும் பயங்கரமாகப் புதிய அரச
மைப்பை உருவாக்கி நிறைவேற்ற முயற்சிக்
கின்றனர்.

மகாநாயக்கர்களும், தலைவர்களும் இத
னைக் கூர்மையாகக் கவனிக்க வேண்டும்.
அதுமட்டுமன்றிக் காணி அதிகாரம், ஆளு
நரின் அதிகாரங்களை இரத்துச் செய்தல்,
பொலிஸ் அதிகாரம் உள்ளிட்டவற்றை மாற்
றியமைத்தல் தேசிய குற்றச்செயலாகவே
நான் பார்க்கின்றேன். இது மிகவும் பயங்
கரமான சட்டங்களாகும். சிறிய சிங்கள நாட்
டில் இரண்டு கோடி மக்கள் வாழ்கின்றனர்.
ஏன் இந்த நாட்டைப் பிரிக்கின்றீர்கள் –
என்றார்.

அஸ்கிரியப் பீடத்தின் செயலாளர் மெதகம
தம்மாந்த தேரர், புதிய அரசமைப்பின்
ஊடாக பிரதேச மற்றும் மாகாண சபைகள்
மட்டத்தில் வெவ்வேறு வலயங்கள் உரு
வாகும். தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு
இணைந்த ஒன்றைக் கோருகின்றனர்.
முஸ்லிம் மக்களுக்கு ஒன்றிணையாத புறம்
பான வலயங்கள் அமைக்கும் யோச
னையும் புலப்படுகின்றது. கண்டி மாவட்டத்
தின் பன்வில, அக்குரணை என்பன உள்ளூ
ராட்சிகள் முஸ்லிம் மக்களுக்கே என்று
தெளிவாகக் கூறப்படுகிறது. 2000 ஆம்
ஆண்டில் அநுருத்த ரத்வத்த அரசமைப்பு
உருவாக்கம் தொடர்பான யோசனை எம்
மிடம் சமர்ப்பிக்கப்பட்டபோது பௌத்த மதத்
துக்கு முன்னுரிமை என்ற பதம் நீக்கப்பட்
டிருந்தது. அதனை நாங்கள் சுட்டிக்காட்
டியபோது அதன் மீது இன்னுமொன்றை
ஒட்டிவிட்டுச் சரிப்படுத்திவிட்டதாகக் கூறினர்.
பின்னர் அதனை நிறைவேற்றவிடாமல்
ஐக்கிய தேசியக் கட்சியே தீ வைத்துக்
கொளுத்தியது. நல்லாட்சி அரசு ஆட்சிபீடம்
ஏறியபோது உரையாற்றிய சந்திரிகா குமார
துங்க, அரசமைப்பை நிறைவேற்றுவோம்
என்றே அறிவித்திருந்தார். மிகவும் பயங்கர
மான சூழ்நிலையில் நாங்கள் இருக்கின்
றோம். பொறுப்பு வாய்ந்த பிக்குகள் என்ற
வகையில் [illegible] சிங்கள மக்
களுக்கும், [illegible] ஏற்படுத்
தும் எந்தவொரு அரசமைப்பையும் நிறை
வேற்ற இடமளிக்கமாட்டோம். ஐக்கிய
இலங்கை மற்றும் ஒற்றை ஆட்சி என்பவற்
றுக்கு இடையில் வித்தியாசம் காணப்படு
கின்றது. ஐக்கிய அமெரிக்கா, பிராந்தியங்
கள் இணைந்த ஒன்றாகும். ஒற்றையாட்சி
என்பதற்கு அமைய நாட்டைக்காத்துக் கொள்
ளக் கடமைப்பட்டுள்ளோம் – என்றார். (த-5)

## 2020 வரை...

போவதாகச் சிலர் அறிக்கைகளை வெளி
யிட்டுள்ளனர். எமது அரசைக் கவிழ்ப்பதற்கு
யாராலும் முடியாது. 2020 ஆம் ஆண்டில்
நடக்கும் தேர்தலில் வெற்றிபெற்று புதிய
அரசை அமைத்தாலொழிய அதற்கு முன்
னர் அரசைக் கவிழ்ப்பதற்கு யாருக்கும்
எந்தவித வாய்ப்பும் இல்லை' என்று மைத்தி
ரிபால குறிப்பிட்டுள்ளார்.

கண்டி, ஹல்ஒலுவ, தொடங்வல பிரதேசத்
தில் அமைக்கப்பட்ட பாலத்தை மக்களிடம்
கையளிக்கும் நிகழ்வில் பங்குபற்றி உரை
யாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு
குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும்
கைத்தொழில் பேட்டை தொடர்பாக ஒரு சில
ரால் தவறான பரப்புரைகள் மேற்கொள்
ளப்பட்டு வருகின்றன. இந்த நாட்டின் ஒரு
அங்குல நிலத்தையேனும் உலகின் வேறு
எந்தவொரு நாட்டுக்கும் தாரை வார்த்துக்
கொடுப்பதற்கு அரசு தயாராக இல்லை.

கைத்தொழில் மற்றும் புதிய முதலீடுகள்
நாட்டுக்கு அவசியமான போதிலும் கூட
இலங்கையின் அரசமைப்புக்கும் சட்டதிட்
டங்களுக்கும் உட்பட்டே வெளிநாடுகளுக்குக்
காணிகளை வழங்குவதற்கான நடவடிக்
கைகள் மேற்கொள்ளப்படும். ஒரு சிலர்
குறிப்பிடுவதைப்போல மக்களை அவர்
களது வசிப்பிடங்களிலிருந்து வெளியேற்று
வதற்கோ அல்லது வரலாற்று முக்கியத்துவம்
வாய்ந்த வணக்கத் தலங்களை உடைத்
தெறியும் முறையற்ற செயல்களுக்கோ
அரசு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.
வெளிப்படைத் தன்மையான உடன்படிக்
கைகளே வெளிநாடுகள், வர்த்தகர்கள்,
முதலீட்டாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறு
வனங்களுடன் ஏற்படுத்திக் கொள்ளப்படும்.
நாட்டின் அபிவிருத்திக்காகத் தற்போதைய
அரசு உண்மையான அர்ப்பணிப்புடன்
செயற்படுகிறது என்றார். (த-5)

## 51 இந்திய...

மீனவர்களில் 51 இந்திய மீனவர்கள் நேற்று
மதியம் விடுவிக்கப்பட்டனர்.

சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் பெற்ற
51 மீனவர்களும், ஊர்காவற்றுறை மற்றும்
மன்னார் நீதிமன்றங்களின் ஊடாக விடு
தலை செய்யப்பட்டனர்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்
றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீன
வர்கள் நீதிமன்ற உத்தரவுகளின் அடிப்
படையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.
இவர்களை விடுவிக்குமாறு இந்திய அரசு
கோரிக்கை விடுத்திருந்தது. கடந்த 2 ஆம்
திகதி கொழும்பில் நடைபெற்ற பேச்சின்
போது, இந்திய நடுவண் அரசின் மீன்பிடி
அமைச்சர் இந்தக் கோரிக்கையை முன்
வைத்திருந்தார்.

இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்
பட்டிருந்த 61 மீனவர்களில் 51 இந்திய
மீனவர்கள் மேற்படி கோரிக்கைக்கு அமை
வாக நேற்று விடுவிக்கப்பட்டனர்.

39 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்
ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவின் கீழ்
விடுதலை செய்யப்பட்டதோடு 12 பேர் மன்
னார் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில்
விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களை யாழ்ப்
பாணத்தில் உள்ள இந்தியத் தூதரக அதி
காரிகள் பொறுப்பேற்றனர். நேற்றுமுன்
தினம் 5ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட 10
இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்
பாண சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்
பட்டுள்ளனர். (த-5-101)

## வழிநடத்தல்...

[illegible] தலைவர்கள் வெளியேற
[illegible] என்று வலியுறுத்திய ஈ.பி.ஆர்.
எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன்
இந்த விடயம் பேசப்பட்டபோது மௌனமாக
இருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்
கட்சிகளுக்கு இடையேயான கூட்டம் நேற்று
நடைபெற்றது. சுமார் 4 மணி நேரம் இந்தச்
சந்திப்பு, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்
பந்தனின் அலுவலகத்தில் நடைபெற்றது.
ஒற்றையாட்சிக்குள் தீர்வு, பௌத்தத்துக்கு
முன்னுரிமை என்ற விடயங்கள் தொடர்ந்து
வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், வழி
நடத்தல் குழுவிலிருந்து தமிழ்த் தேசியக்
கூட்டமைப்பின் பிரதிநிதிகளான எதிர்க்கட்சித்
தலைவர் இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திர
னும் வெளியேற வேண்டும் என்று கூட்ட
மைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுள்
ஒருவரான ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின்
தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கோரிக்கை
விடுத்திருந்தார்.

நேற்றைய கலந்துரையாடலில், சுரேஸ்
பிரேமச்சந்திரன் நேரடியாக இந்த விடயத்தை
வலியுறுத்தவில்லை. கூட்டமைப்பின் ஏனைய
பங்காளிக் கட்சிகள், வழிநடத்தல் குழுவின்
நடவடிக்கைகள் முற்றுப்பெறும் வரையில்
கூட்டமைப்பு அதிலிருந்து வெளியேறக்
கூடாது என்று நேற்றைய கலந்துரையா[illegible]
தெரிவித்தன. இந்தக் கருத்துக்குக் கூட[illegible]
எதிர்ப்புக்கள் வெளியிடப்படவில்லை. [illegible]
ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ்பிரே[illegible]
திரன் மௌனமாக இருந்தார்.

கூட்டம் முடிவடையும்போது, [illegible]
அமைப்பின் செயலர் ந.சிறீகாந்தா [illegible]
முயற்சிகளுக்கு நாங்கள் நிபந்தனை[illegible]
ஆதரவு தருகின்றோம் என்று குறிப்பிட்[illegible]
ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலை[illegible]
சுரேஸ் பிரேமசந்திரன், நீங்கள் அவ்[illegible]
கூற முடியாது. வேண்டும் என்றா[illegible]
களது கட்சி அப்படி ஆதரவு வழங்குவதாகக்
குறிப்பிடுங்கள் என்று தெரிவித்தார்.

கூட்டம் அமைதியாக நடைபெற்றாலும்
இறுதி நேரத்தில் இந்தச் சர்ச்சை ஏற்பட்ட
தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-5)

## துயிலுமில்லத்...

துயிலும் இல்லக் காணிக்குள் இவ்வாறான
முரண்பாடுகள் காணப்படுவதால் எவருமே
செல்ல முடியாதவாறு தடை உத்தரவைப்
பிறப்பிக்க வேண்டும் என்று கோரினர்.
ஆனால் எதிர் தரப்புச் சட்டத்தரணிகள் அதற்கு
ஆட்சேபித்தனர். அதனுள் மன ஆறுதலுக்
காகவும் பல காரணங்களுக்காகவும் அங்கு
அஞ்சலி செலுத்துகின்றனர். தடை போட
ஆட்சேபிப்பதாக மன்றில் சட்டத்தரணிகள்
தெரிவித்தனர். அதனையடுத்து பொலிஸா
ரின் கோரிக்கையை நீதிமன்று நிராகரித்தது.
சபைச் செயலாளர் அரசியல்வாதி ஒருவரின்
படப்பிடிப்பாளரைத் தனது வாகனத்தில்
ஏற்றி துயிலுமில்லத்துக்கு வந்திருந்தார்
என்று கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த
வர்களின் சட்டத்தரணி நீதிமன்றின் கவனத்
துக்குக் கொண்டு சென்றார். தான் வரும்
வழியில் குறித்த படப்பிடிப்பாளர் வரவுள்ள
தாகக் கேட்டார். அதனால் ஏற்றி வந்தேன்.
அது தவறுதான் என்று அதிகாரி மன்றில்
தெரிவித்தார். அவ்வாறு ஏற்றிச் சென்றதற்
காகச் செயலாளரை மன்று கண்டித்தது.

மன்றில் முற்பட்டிருந்த 6 பேரும் தலா 50
ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்ல
நீதிமன்று அனுமதித்தது. வழக்கு எதிர்வரும்
20 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பிரதேச சபையின் அனுமதியின்றி கனக
புரம் மாவீரர் துயிலுமில்லத்தில் பொது
நினைவிடம் ஒன்றை நேற்றுமுன்தினம்
கட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது
கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் அந்த
இடத்துக்குச் சென்று கட்டுமானத்தில் ஈடுபடத்
தடை விதித்திருந்தார். அத[illegible]ல் கட்டுமா
னத்தில் ஈடுப[illegible]களுக்கும் [illegible]தேச சபைச்
செயலருக்கும் இடையே முரண்[illegible] ஏற்பட்டது.
பின்னர் பொலிஸார் அங்கு [illegible]று கட்டுமா
னத்தை நிறுத்தி அனுமதி [illegible]த் தொடரு
மாறு கூறியதோடு, அது தொ[illegible]ல் கதைப்
பதற்கு பொலிஸ் நிலையத்[illegible] அழைக்
கப்பட்டிருந்தனர். கட்டுமா[illegible] பணியில்
ஈடுபட்ட குழுவைச் சேர்ந்[illegible] பேரும்
பொலிஸார் வாக்குமூலம் பெ[illegible]. பொலி
ஸாரின் அறிவுறுத்தலின்படி [illegible]
நொச்சி நீதிவான் மன்றில் [illegible]
டனர். (வ-4.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 7

*குறிஞ்சிக்குமரனின் கால்பந்தாட்டம்*

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் அந்தோனியார்புரம் ஐக்கிய அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியும் தொடர்ந்து இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

*யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்தக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு



இடம்பெறும் ஆட்டத்தில் நியூபைட் அணியை எதிர்த்து சண் சைன் அணி மோதவுள்ளது.

*பாடசாலைகளின் கால்பந்தாட்டம்*

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்தும் 20 வயதுப் பிரிவு அணிகளுக்கான (ஆண்கள்) விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. மேற்படி தொடரில் 24 அணிகள் பங்குபற்றுகின்றன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-422-108-23)



# கலைவாணி, எவரெஸ்ட் வி.கழகங்கள் எவ்.ஏ. கிண்ணத் தொடரில் வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 7

எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம், புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்றன.

*கலைவாணி - ஐக்கியம்*

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. யாழ். லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சிநிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதியது. ஆட்டத்தின் 8 ஆவது, 10 ஆவது நிமிடத்தில் ராஜேஸ்வரன் பதிவுசெய்த கோல்களின் உதவியுடன் முன்னிலை வகித்தது கலைவாணி. ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் தர்சன். பிறிதொரு கோலும் ஐக்கியத்தின் சார்பாகப் பதிவாக முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் 2:2 என்றிருந்தன. ஆட்டத்தின் 49ஆவது நிமிடத்தில் நாவாந்துறை கலைவாணி அணிக்குத் தண்டனை உதை கிடைத்தது. வாய்ப்பைகச் சிதமாகப் பயன்படுத்தினார் தயாபரன். மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் நாவாந்துறை கலைவாணி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

*விக்னேஸ்வரா - எவரெஸ்ட்*

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவு வரை இரு அணிகளாலும் கோல்களைப் பதிவுசெய்ய இயலவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் எவரெஸ்ட் அணி வெற்றி பெற்றது. (ம-23)

# குறிஞ்சிக்குமரன், ஆதிசக்தி வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 7

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் குறிஞ்சிக்குமரன், ஆதிசக்தி அணிகள் வெற்றிபெற்றன. இளைஞரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில், கலட்டி ஐக்கிய அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. இதில் குறிஞ்சிக்குமரன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணியை எதிர்த்து விளான் சென். அன்ரனிஸ் அணி மோதியது. இதில் ஆதிசக்தி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# கரப்பந்தாட்ட இறுதிகள் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 7

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

கலைமதியின் கரப்பந்தாட்டத் திடலில் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் பி பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் தொடர்ந்து இடம்பெறும் 'ஏ' பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணியும் மோதவுள்ளன. (ம-108-422)

# அல்ஹிஜிரா அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 7

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல்ஹிஜிரா அணி வெற்றிபெற்றது. யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அல்ஹிஜிரா அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் அணி மோதியது. இதில் அல்ஹிஜிரா அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# ஈஸ்வரன் அணி இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 7

எவ்.ஏ. கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஈஸ்வரன் அணி இலகுவான வெற்றிபெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சிறுவர் பூங்கா வி.கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதியது. இதில் ஈஸ்வரன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# டயமன்ஸ் - நீக்கிலஸ் இறுதியில் இன்று மோதல்







அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து யாழ். சென். நீக்கிலஸ் அணி இன்று மோதவுள்ளது. மனோகராவின் மைதானத்தில் இரவு 8.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முன்னதாக இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது. கழக தலைவர் க.ஜெபதாசன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், கரவெட்டி பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் வினோதராஜ், நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த, வடமராட்சி கால்பந்தாட்ட லீக் தலைவர் டி.எம். வேதாபரணம், அல்வாய் சாமாணந்துறை ஆலடிப் பிள்ளையார் ஆலயத் தலைவர் கணேசலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர். (ம-422-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 410 ஓட்டங்களா 9 இலக்குகளா? ஆஸி. – பாக். டெஸ்ட்டில் திரில்

ஆஸ்திரேலியா – பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு 9 இலக்குகளும் பாகிஸ்தானின் வெற்றிக்கு 410 ஓட்டங்களும் தேவைப்படுகின்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 538-8 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக ரென்சொவ் 184 ஓட்டங்களையும், வோர்ணர் 113 ஓட்டங்களையும், ஹான்ட்ஸ்கொம் 110 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ரியாஸ் 3 இலக்குகளையும், அசார் அலி, இம்ரான் கான் இருவரும் தலா 2 இலக்குகளையும், யாசிர் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் மூன்றாம் நாள் முடிவில் 271-8 என்றிருந்தது. யுனிஸ் கான் 136 ஓட்டங்களுடனும், யாசிர் 5 ஓட்டங்களுடனும் நான்காம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அடித்தாடினார் யுனிஸ்கான். அவர் 150 ஓட்டங்களை மிக விரைவாகக் கடந்தார். சாஜ், இம்ரான் கான் இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 315 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பாக். 175 ஓட்டங்களுடன் யுனிஸ் கான் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில், கசில்வூட் 4 இலக்குகளையும், லையன் 3 இலக்குகளையும், ஸ்ராக், கெபி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு அந்த அணியின் ஆரம்ப வீரர்



வோர்ணர் ஆரம்பம் முதலே அடித்தாடி பலம் சேர்த்தார். 23 பந்துகளில் அவர் அரைச்சதத்தைப் பதிவுசெய்தார். வோர்ணரை வீழ்த்தினார் ரியாஸ். ஏனைய வீரர்களும் அடித்தாடினர். ஆட்டத்தை விரைவில் இடைநிறுத்துவது திட்டம். கவாயா, சிமித் இருவரும் அரைச்சதம் கடக்க 241-2 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது ஆஸ்திரேலியா.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் நாள் முடிவில் 55-1 என்றுள்ளது. ஆட்டத்தின் இறுதி நாளான இன்று ஆஸ்திரேலியாவின் வெற்றிக்கு 9 இலக்குகளும் பாகிஸ்தானின் வெற்றிக்கு 410 ஓட்டங்களும் தேவைப்படுகின்றன. (ம)




## எனது தலைவர் என்றும் டோனியே புகழ்ந்து தள்ளுகிறார் விராட் கோக்லி

இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனிதான் என்றும் தனது தலைவர் என்று தெரிவித்தார் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தலைவரான கோக்லி.

மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த டோனி கடந்த 2015 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வை அறிவித்தார். இருப்பினும் ரி-20 மற்றும் ஒருநாள் அணிகளின் தலைவராக அணியில் நீடித்து வந்தார். கடந்த புதன்கிழமை இரவு தலைமைப் பதவியிலிருந்து விலகும் முடிவை அறிவித்தார். இருப்பினும் ஒரு வீரராக அணியில் தொடரும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். பலரும் டோனியின் தலைமைத்துவம் தொடர்பில் பல்வெறு கருத்துக்களைத் தெரிவித்து வரும் நிலையில் தலைமைப் பதவியிலிருந்து விலகினாலும் டோனிதான் என்றும் தனது தலைவர் என்று கோக்லி தெரிவித்தார்.

என்னையும் சக இளம் வீரர்களையும் அணியில் சிறப்பாக வழிநடத்தினார். ஒரு சிறந்த தலைவர். வாழ்த்துக்கள் என்று கோக்லி தனது ருவிற்றரில் பதிவிட்டார்.

டோனி, சரியான நேரத்தில் முடிவெடுத்துள்ளார். ஆறு மாதத்துக்கு முன்னதாகவோ அல்லது ஒரு வருடத்துக்கு முன்னதாகவோ இந்த முடிவை எடுத்திருந்தால் நிச்சயம் அணியில் தடுமாற்றம் ஏற்பட்டிருக்கும். ஏனெனில் அப்போது தலைமையை ஏற்க கோக்லி தயாராக இருந்தார் என்று கருதவில்லை. தற்போது கோக்லி முதிர்ச்சியடைந்த வீரராக உள்ளார். எனவே சரியான நேரத்தில் அணிக்குத் தேவையான முடிவெடுத்த டோனிக்கு ஒரு சல்யூட் என்று இந்திய அணியின் தலைமைத் தெரிவாளர் எம்.எஸ்.கே. பிரசாத் தெரிவித்தார். (ம)

## டோனி ஓய்வை அறிவித்திருந்தால் உணவு ஒறுப்பை நடத்தியிருப்பேன்

### கவாஸ்கரின் கருத்து

தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்குப் பதிலாக ஓய்வு முடிவை அறிவித்திருந்தால் முடிவைத் திரும்பப் பெற வலியுறுத்தி டோனியின் வீட்டுக்கு முன்பாக உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தியிருப்பேன் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் கவாஸ்கர் தெரிவித்தார்.

பதவி விலகுவது தொடர்பில் டோனி எடுத்த முடிவைப் பாராட்டுகின்றேன். தலைமைப் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற அவர், ஒருநாள் மற்றும் ரி-20 கிரிக்கெட் அணியில் தொடர்ந்து விளையாட வேண்டும். அப்படி இல்லாமல் ஒட்டுமொத்தமாக கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றிருந்தால், அணியில் மீண்டும் விளையாட வற்புறுத்தி அவர் வீட்டின் முன்பு உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பேன். ஏனெனில் ஒரு வீரரான அவர் இன்னும் அபாயகரமான வீரர்தான். ஒரு பந்துப் பரிமாற்றத்தில் ஆட்டத்தை சாதகமாக மாற்றும் வல்லமை படைத்தவர். இந்திய அணிக்கு அவரின் முக்கியம். அவரின் அணியில் ஒரு வீரராக இருப்பேன் என்ற முடிவு என்னை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது என கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

## துடுப்பாட்டத் தளம்பல் தோல்விக்கு காரணம்

### மத்தியூஸ் தெரிவிப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தமைக்கு துடுப்பாட்ட வரிசையில் ஏற்பட்ட தளம்பலே காரணம் என்று தெரிவித்தார் மத்தியூஸ்.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது இலங்கை. முதலாவது ஆட்டத்தில் இலங்கை தோல்வியடைந்தது. இரண்டாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. அதிலும் இலங்கைக்கு தோல்வியே எஞ்சியது. ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நாணயச் சுழற்சியில் வென்றும், இலங்கை அணிக்கு சாதகமான நிலை இருந்தும், தோல்வியடைந்திருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. மீண்டும் ஒரு முறை எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் அணியை மேசமான நிலைக்கு கொண்டு சென்றுவிட்டனர். பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயல்பட்டாலும், துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர். துடுப்பாட்டத்தில் வீரர்கள் அக்கறை காட்ட வேண்டியது அவசியமானது. 19 வயதேயான லகிரு குமார, பந்து



வீச்சில் 6 இலக்குகளைக் கைப்பற்றினார். அவருக்கு சிறந்த எதிர்காலம் உள்ளது என்று மத்தியூஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## சென். அன்ரனிஸ் 'ஏ' அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மணற்காடு சென். அன்ரனிஸ் 'ஏ' அணி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் சென். அன்ரனிஸ் ஏ அணியை எதிர்த்து அண்ணா சிலையடி யுத் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் நிமிடத்திலேயே அன்ரனிஸின் கவாஸ்கர் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவு செய்தார். 18 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தார் யுத் அணியின் நிவேதன். 1:1 என்ற நிலையில் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமானதும் சென். அன்ரனிஸ் ஏ அணி வீரர்கள் கவாஸ்கர் 38 ஆவது நிமிடத்திலும் நிலக்சன்ராஜ் 39 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து இரு கோல்களை பதிவு செய்ய முடிவில் மணற்காடு சென். அன்ரனிஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. கவாஸ்கர் ஆட்ட நாயகனானார். (ம-022-008)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கிண்ணம் வெல்வதை நியூசி. உறுதிசெய்தது

பங்களாதேஷக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது நியூசிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. நியூசிலாந்தின் ஆரம்ப வீரர்களாக றோஞ்சி மற்றும் வில்லியம்சன். ஆட்டத்தின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார் றோஞ்சி. 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். அண்டர்சனை வீழ்த்தினார் நசீர் கொசைன். 46 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து திணறியது நியூசிலாந்து. முன்றோவுடன் இணைந்தார் புரூஸ். இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற சரிவிலிருந்து மீண்டது நியூசிலாந்து.

அடிக்கொரு சிக்சர்களை அனுப்பினார் முன்றோ. அவர் 31 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். புரூஸின் அரைச்சதம் 32 பந்துகளில் பதிவானது. அதிரடியை இரட்டிப்பாக்கி 7 சிக்சர்கள் 7 பவுண்டரிகளுடன் சதம் கடந்தார் முன்றோ. 101 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார். 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் நியூசிலாந்து 195-7.

பந்துவீச்சில் கொசைன் 3 இலக்குகளையும், மோர்ரசா, சகிப் அல் கசன். மொஸ்டக் கொசைன் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அதிரடி வீரரான இம்ரூல் கையிஸை ஆரம்பத்திலேயே இழந்தது. ரண்அவுட் செய்யப்பட்டார் இக்பால். ஒரு ஓட்டத்துடன் வீலரிடம் வீழ்ந்தார் சகிப் அல் ஹசன். சபீர் ரகுமான், சர்கர் இருவரும் சிறிது போராட்டம் காட்டினர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது பங்களாதேஷ். அணி 104 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சர்கர். இரு ஓட்டங்களால் அரைச்சதத்தை தவறவிட்டார் சபிர் ரகுமான். ரகுமானின் ஆட்டமிழப்பின் பின்னர் தொடர்ச்சியான சரிவைச் சந்தித்து 148 ஓட்டங்களில் சுருண்டது பங்களாதேஷ். 47 ஓட்டங்களால் நியூசிலாந்து வென்றது.

பந்துவீச்சில் சொட்கி 3 இலக்குகளையும், வீலர், வில்லியம்சன் இருவரும் தலா இரு இலக்குகளையும், சான்நெர், போல்ட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதல் இரு ஆட்டங்களிலும் வென்றுள்ள காரணத்தால் அடுத்த ஆட்டத்தில் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணத்தை நியூசிலாந்தே கைப்பற்றும். (ம)




இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 06.01.2017 | வெற்றி வாரம் 2079 | வர்ணம் சிகப்பு
வெற்றி இலக்கங்கள்
11 25 47 60
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 5, 557, 570/=
வெற்றி இலக்கங்கள்
22 37
டபிள் சான்ஸ்
2017.01.08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB LOT LW
1919

ஒளி அழகனின்
British-College-of-Beauty-Studies



இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான
அழகுக்கலைக்கல்லூரி

- அழகுக்கலை
- தையற்கலை
- சமையற்கலை
- ஆங்கிலம்
- கேக் ஐசிங்
- Ladies skills Development

➡ குறுகியகால பயிற்சி வகுப்புக்களையும் முழுநேர பயிற்சி வகுப்புகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.
➡ அனைத்து பாடநெறிகளும் புதிய பாடத்திட்டங்களே!
➡ அனைத்து பாடநெறிகளும் பெண் ஆசிரியர்கள் மூலமாகவே பயிற்சியளிக்கப்படும்.
➡ பெண்களே இது உங்களுக்கு மட்டுமான கல்லூரி!
➡ பெண்களும் இந்த உலகில் பல துறைகளில் சாதனை படைத்து முன்னேறமுடியும்.

மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல இடங்களில் எமது கிளைகளை விஸ்தரிக்க தீர்மானித்துள்ளோம்.
வேலணை, நெல்லியடி, கிளிநொச்சி போன்ற இடங்களில் பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்க உள்ளோம்.
07.01.2017 அன்று 02.30 P.M க்கு ஒரு புதிய High Diploma in Advance Make up பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கவுள்ளோம்.
நேரில் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். முதல் இணையும் 10 மாணவர்களுக்கு Hair Style போடும் 3500/= பெறுமதியான Dummy (பொம்மை) இலவசம்.

தலைமை காரியாலயம்
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.
(உதயன் அருகில்)
076 701 1645
021 320 4150
கிளை,
பலாலிறோட்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.




# தலைவரானார் விராட் கோக்லி மீண்டும் வந்தார் யுவராஜ் சிங்

இங்கிலாந்துக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. டோனி தலைமைத்துவத்தில் இருந்து விலகியதை அடுத்து கோக்லி தலைவரானார். யுவராஜ் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார்.

மூன்று ஒருநாள் ஆட்டங்கள், மூன்று ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஒருநாள் ஆட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான இந்திய அணி நேற்று மாலை தெரிவுசெய்யப்பட்டது.

தலைமைத்துவத்திலிருந்து டோனி விலகியதை அடுத்து கோக்லிதான் தலைவராக நியமிக்கப்படுவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இதன்படி ஒருநாள், ரி-20 என இரு அணிகளுக்கும் கோக்லி தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஒருநாள் மற்றும் ரி-20 என இரு அணிகளிலும் யுவராஜ் இடம்பிடித்தார். காயத்திலிருந்து விடுபட்ட நெக்ரா ரி-20 அணியில் இணைக்கப்பட்டார். அதேபோல் கடந்த சில ஆட்டங்களில் அணியிலிருந்து நீக்கப்பட்ட ரெய்னாவும் மீண்டும் ரி-20 அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

ஒருநாள் ஆட்டங்களுக்கான இந்திய அணி கோக்லி (தலைவர்), டோனி, ராகுல், தவான், பாண்டே, கேதர் யாதவ், யுவராஜ், ரகானே, ஹார்டிக் பாண்டியா, அஸ்வின், ஜடேயா, மிஸ்ரா, பும்ரா, புவனேஸ் குமார், உமேஸ் யாதவ்.

ரி-20 ஆட்டங்களுக்கான இந்திய அணி கோக்லி (தலைவர்), டோனி, மன்டீப் சிங், ராகுல், யுவராஜ், ரெய்னா, ரிசாப் பான்ட், ஹார்டிக் பாண்டியா, அஸ்வின், ஜடேயா, சாஹல், பாண்டே, பும்ரா, புவனேஸ் குமார், நெக்ரா. (ம)

## பன்னாட்டுக் கிரிக்கெட்டிலிருந்து அப்பொட், ரொஸ்சொவ் விலகல்

தென்னாபிரிக்க அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான அப்பொட் மற்றும் துடுப்பாட்ட வீரரான ரொஸ்சொவ் இருவரும் பன்னாட்டுக் கிரிக்கெட்டிலிருந்து விலகி கழகங்களுக்கு ஒப்பந்தமாகினர்.

அப்பொட், இங்கிலாந்தின் கழகமான ஹாம்ப்ஷர் அணியுடன் மூன்று வருடங்களுக்கு ஒப்பந்தம் செய்துள்ளார். முழுநேர வீரராக அந்த அணியுடனேயே அப்பொட் இனிப் பயணிக்கவுள்ளார். இதனால் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டமே தென்னாபிரிக்காவை அப்பொட் பிரதிநிதித்துவம் செய்த இறுதி ஆட்டமாகும்.

அதேபோல் துடுப்பாட்ட வீரரான ரொஸ்சொவும் இங்கிலாந்துக் கழகத்துக்காக ஒப்பந்தமாகியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் எந்தக் கழகம் என்ற தகவல் இன்னும் வெளியாகவில்லை. (ம)





## வோஸ்னியாக்கி தோல்வி

நியூசிலாந்தில் நடைபெற்று வரும் ஆக்லாந்து ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் உலகின் மூன்றாம் நிலை வீராங்கனையான வோஸ்னியாக்கி அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

வோஸ்னியாக்கியை எதிர்த்து ஜெர்மனிய வீராங்கனை ஜுலியா ஜோர்ஜர்ஸ் மோதினர். முதல் செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வோஸ்னியாக்கி கைப்பற்றினார். சரியிலிருந்து மீண்ட ஜுலியா இரண்டாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 1:1 என்றாக்கினார். தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திய அவர் மூன்றாவது செற்றை 6:4 என்ற கைப்பற்றியதை அடுத்து வோஸ்னியாக்கிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.